கல்கி

KALKI 6.1.91 ரூ. 2.50



திரைப்பட விழா:

விரைவான வர்த்தகமா? விரயமா?

—விவாதம்


நேர்த்திமிக்க நெசவு
உயிரோட்டமுள்ள வேலைப்பாடு
100%
தூய பட்டு
அசல் சரிகை
கோ-ஆப்டெக்ஸ்
தள்ளுபடி
20%-
40%
DIPR/2020/90/MS/ELEGANT

ரிசர்வ் வங்கி கவர்னர்: ரூபாய் நோட்டில் கையெழுத்துப் போட மட்டுமா?

மத்தியிலோ மாநிலங்களிலோ ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் உடனே அரசாங்க அதிகாரிகளுக்கும் பணி மாற்றம் நிகழ்வது நம் நாட்டில் மரபாகவே ஆகிவிட்டது. இம்முறை ரிசர்வ் வங்கி கவர்னர் பதவி பக்கமும் புதிய ஆட்சியின் கவனம் திரும்ப, ஆர். என். மல்ஹோத்ராவின் ராஜினாமா, அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி எஸ். வெங்கிடரமணன் புதிய கவர்னராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் திருப்பத்தைக் கண்டித்து எகனாமிக் டைம்ஸ் நாளிதழ் எழுதியுள்ள தலையங்கத்தில், மல்ஹோத்ராவை விரும்பாத சில அரசியல் சக்திகளுக்குப் பணிந்து அரசாங்கம் அவருடைய ராஜினாமாவை வலியுறுத்தியிருக்கக்கூடும் என்றும் 'இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் ஒரு முக்கியமான பதவிப் பொறுப்பு அரசியல் தலையீட்டால் இழிவுபடுத்தப்பட்டுள்ளதாகவே கொள்ள வேண்டும்' என்றும் கூறுகிறது.

ரிசர்வ் வங்கி கவர்னர் பதவிக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம்...? ரூபாய் நோட்டில் கையெழுத்துப் போடும் வெறும் அலங்காரப் பணி மட்டும் ஆர். பி. ஐ. கவர்னருக்குரியதல்ல. நாட்டின் பொருளாதார வளத்தைக் கட்டுப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் அவர்களுக்குப் பெரிய பங்கு உண்டு.

பொருளாதாரக் கட்டுப்பாடு என்பது Fiscal Control, Monetary Control என்று இருவகைப்படும். வரவையும் செலவையும் சரிக்கட்டுவதும் அதற்குத் தொடர்புடைய இதர விஷயங்களை நிர்வகிப்பதும் Fiscal Control. இது அரசாங்கத்தின் பொறுப்பு.

நாட்டின் உற்பத்திக்கு ஏற்பப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவது monetary control. இது ரிசர்வ் வங்கியின் பொறுப்பு. மற்ற எல்லா வங்கிகளும் இவ் விஷயத்தில் ரிசர்வ் வங்கி வகுத்துள்ள கொள்கைப்படிதான் நடக்க வேண்டும்.

ஆனால் இவ்விரண்டு கட்டுப்பாடுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவைதான். பற்றாக்குறை பட்ஜெட்டை அரசாங்கம் உருவாக்கும் போது, ரிசர்வ் வங்கி பற்றாக்குறை அளவுக்கு ஏற்ப நோட்டுகளை அச்சடித்துப் புழக்கத்தில் விடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

ரிசர்வ் வங்கியின் கவர்னர் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் உள்ள குறை நிறைகளை அலசி, எந்தெந்த செலவுகளைக் குறைக்கலாம் என்று அறிவுரை வழங்க வேண்டும். உதாரணமாக, அரசாங்கத்தின் நிர்வாகச் செலவுகள், சமூக நலத் திட்டங்களுக்கான அபரிமித செலவினங்கள் லாபத்தை ஈட்டித்தராத திட்டங்கள் போன்றவை குறித்து ரிசர்வ் வங்கியின் கவர்னர், அரசை எச்சரிக்க வேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்த ஆலோசனை வழங்க வேண்டும்.

மாநில அரசுகளுக்கு மத்திய அரசு வழங்கும் மானிய, கடன் தொகைகளையும் ரிசர்வ் வங்கி கட்டுப்படுத்தலாம். ஆனால் மத்திய அரசின் செலவுகளை மட்டும் ரிசர்வ் வங்கி நேரடியாகக் கட்டுப்படுத்த முடியாது. இந்த விஷயத்தில் அறிவுரை மட்டுமே வழங்கலாம்.

ரிசர்வ் வங்கி கவர்னர்கள் கொடுத்த அறிவுரைகளை அரசாங்கம் செவிமடுத்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இன்று கதையே வேறு. இரண்டு சமீபத்திய உதாரணங்கள்:

வி. பி. சிங் அரசு ரூபாய் பத்தாயிரம் வரையிலான விவசாயக் கடன்களை ரத்து செய்வதாக அறிவித்த போது, அப்போ

• வெங்கிடரமணன்



தைய ரிசர்வ் வங்கி கவர்னர் மல்ஹோத்ரா அதை எதிர்த்தார். அரசுக்கு ஏகமாக நஷ்டமாகும். இன்றையப் பொருளாதார சூழலில் அது கட்டுப்படியாகாது என்றார்.

என். ஆர். ஐ.க்களுக்கு ஏகப்பட்ட சலுகைகள் அளித்து அவர்களிடம் கடன் வாங்குவதற்குப் பதிலாக உலக வங்கியின் அங்கமான International Monetary Fund இடம் கடன் பெறலாம் என்றும் அறிவுரை கூறினார் மல்ஹோத்ரா.

ஆனால் இந்த இரு அறிவுரைகளையும் வி.பி.சிங் அரசு ஏற்கவில்லை. விவசாயக் கடன் ரத்தால் கிடைக்கக்கூடிய பிராபல்யத்தை இழக்க மனமில்லை; ஐ.எம்.எஃப். பிடம் கடன் வாங்கினால் அதன் கண்காணிப்பில், கட்டுப்பாடுகளுக்குட்பட்டுத்தான் பணத்தைச் செலவிட முடியும் — இதையும் அந்த அரசு விரும்பவில்லை. எனவே தன் போக்கில் செயல்பட்டது.

இவ்வாறு பலகாலமாகவே ரிசர்வ் வங்கி கவர்னர்களின் அறிவுரைகள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. அரசியல் ஆதாயங்களுக்காக நாட்டின் பொருளாதாரம் பலிகொடுக்கப்படுகிறது. வெங்கிடராமணன் பதவிக் காலத்திலாவது இந்த நிலைமை மாறுமா பார்ப்போம்!

கொசுறாக ஒரு சின்ன சுவாரஸ்யம்: வெங்கிடராமணன், நடிகர் எஸ்.வி. சேகர் வீட்டுச் சம்பந்தி! சேகரின் தம்பி மனைவி, வெங்கிடராமணனின் மகள்! **— நிருபர்.**



நீ சிரித்தால் தீபாவளி

இளம் ஜோடி சோனியா — ஹரிஷ் கண்ணுக்குக் குளிர்ச்சி. பால் வடியும் முகத்துடன் அறிமுகமாகி, படிப்படியாகக் காதல் பாதையில் முன்னேறுகிறார்கள். வயது கை கொடுக்கிறது.

கதையின் கனம் முழுவதும் அனுபவப்பட்ட சிவகுமார், நிழல்கள் ரவி இருவர் மீதும்தான். தாடியுடன் தோன்றும் நிழல்கள் ரவியைத் தொடக்கத்தில் இனம் கண்டு கொள்வது சற்று சிரமமாக இருந்தாலும், போகப் போக நடையிலும் பேச்சிலும் கம்பீரத்தைக் கொண்டு வந்து வில்லத்தனத்துக்கு மெருகு ஏற்றுகிறார். எடுத்த முடிவைக் கைவிட மறுக்கும் பிடிவாதம் கடைசி வரை பளிச்சிடுகிறது.

பாண்ட் மாஸ்டர் சிவகுமார் இதற்கு நேர் மாறாகத் திகழ்கிறார். அந்த அடக்கம், நேர்மை, இனிய மனம், பிள்ளை மேல் கொண்டுள்ள பாசம், கண்டிப்பு... ஏ ஒன்.

இளசுகளின் காதல் உறவு இந்தப் பெரியவர்கள் இருவருக்குமிடையே உருவாகும் சவாலுக்கும் மோதலுக்கும் காரணமாகி மணம் கூட்டும் கறிவேப்பிலை. கடைசி வரையில் அந்த மணம்.

ஆகா ஜனகராஜ்! சரக்கு உள்ளே போனாலும் சரி, போகாமல் நிதானத்தோடு இருந்தாலும் சரி, அவர் சரக்கு ரொம்பவும் முறுக்கு. அதுவும் மகனைப் பறிகொடுத்துவிட்டு மனைவியைத் தேற்றுவதற்காகத் தன் துக்கத்தை உள்ளுக்குள்ளேயே தேக்கி வைத்து, சிவகுமாரைச் சந்தித்ததும் உடைந்து சிதறுகிறாரே, அது எதிர்பாராத சோகம்!

பின்னணிப் பாடகர் இயக்கும் படம் என்பதாலோ என்னவோ, இளையராஜாவின் இசை ரொம்பவும் முன்னணி.

அம்பிகாபதி — அமராவதி காதலை நினைவுபடுத்தும் கதையமைப்பு. அதில் சோழ மன்னர் என்றால் இதில் கம்பீரமான முன்னாள் ராணுவ மேஜர். அதில் கவிச் சக்கரவர்த்தி என்றால் இதில் இசை மாஸ்டர். அதில் அரசகுமாரி என்றால் இதில் பணக்காரப் பெண். அதில் கவிஞரின் மகன் என்றால் இதில் இசைக் கலைஞரின் மகன். இருவருக்குமிடையே பொருந்தாக் காதல், பிரிவு, துயரம்... முடிவில்தான் மாற்றம். சோழ மன்னர் மரண தண்டனை அளித்து விடுவது அம்பிகாபதிக்கல்ல. கம்பருக்கு!

படத்தின் முன்பாதி குளிர்ச்சி. வேலி தாண்டிப் போய் விட்ட பின்பாதி வெறும் மசாலா!

— சி. ஆர். கே.

கத்தரிக்காயின் விலையை முழுசாகச் சொல்லப் பயந்து கொண்டு ''கால் கிலோ இரண்டு ரூபாய்!'' என்று காய்க்காரர்கள் கோழை போல் கூவுகிறார்கள்.

தைரியமாக, ''கிலோ எட்டு ரூபாய்! பத்து ரூபாய்!'' என்று கூவ வேண்டியதுதானே. இதில் பயப்பட என்ன இருக்கிறது? விவேகானந்தர் பிறந்த நாடு. பாரதி பிறந்த மண். 'அச்சம் கீழ்களின் ஆசாரம்' என்று வள்ளுவர் மறை எழுதிய பூமி. விலையைக் கூற ஏன் இப்படி நடுங்க வேண்டும்?

அண்ணா சாலையில் ஒரு செருப்புக் கடையில் நுழைந்து பாருங்கள். ஸ்போர்ட்ஸ் ஷூக்கள் எனப்படும் கான்வாஸ் ஷூக்கள் 700 முதல் 900 ரூபாய் வரை விற்கிறது! சினிமா டிக்கெட் ஏழரை ரூபாய். டிரிங்க்ஸ் நாலரை ரூபாய்! மனித குலத்துக்கு அவசியமான ஜட்டி, பனியன், ப்ரா, உள்ளாடை இவைகள் விலை முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது என்று விலை. நல்ல ஓட்டலில் மசால் தோசை ஆறரை ரூபாய். சாப்பாடு பதின்மூன்று ரூபாய்! நமது தகுதி இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதே! மகிழ வேண்டாமா? இதெல்லாம் நம் மனசுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய சங்கதிகளில்லையா?

கோணலாக ஒரு ராக்கெட் விட்டு நூறு கோடி நஷ்டமானால் நாம் பெருமைப்பட



விமானம் வீணானதற்காக யாரும் சொட்டுக் கண்ணீர் சிந்தலாகாது.

''இவ்வளவு பணம் வீணாக்கக் கூடிய பொருளாதாரத் தகுதியை நாம் பெற்றிருக்கிறோம்'' என்று பெருமைப்பட வேண்டும். 'விலைவாசி இப்படி ஏறுகிறதே' என்று

விலைவாசிகள் மேலும் உயர்வதாக!

வேண்டும்! ஏதாவது விமானம் விபத்துக்குள்ளானால், இறந்தவர்களுக்காகத் துக்கப்படலாமே தவிர, கோடி ரூபாய் பெறுமான



சிலர் முணுமுணுப்பதெல்லாம், பிற நாடுகளின் திருஷ்டி நம் மேல் பட்டு விடக் கூடாதே என்பதற்காக ளொளளாக் கட்டைக்கு அப்படிச் சொல்வது.

வறுமையால் வாடும் மக்களை அப்படியே விட்டு வைக்கலாமா? அதற்காக இப்போது டி.வி.க்காரர்கள் கஷ்டப்பட்டு ஒரு யூனிட்டாக அந்த மக்களைப் பட்டி தொட்டி என்று தேடிக் கண்டுபிடித்துப் பேட்டி காண்கிறார்கள். வறுமை வசப்பட்டவர்கள் கலர் டி.வி.யில் தெரியும் போது அழகாகவே இருக்கிறார்கள். நம் கண்ணுக்கு வறுமையே தெரிய மாட்டேனென்கிறது! பாருங்கள், எத்தனை சுலபமாக வறுமை ஒழிந்து போய் விட்டது!

நாம் வசதியானவர்கள் என்பதை இன்னொரு விஷயத்தில் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து அடிக்கடி தேர்தல்கள் நடத்தியவண்ணம் இருக்கிறோம். அடிக்

பா. ரா.



கடி தேர்தல் நடத்திப் பணத்தைச் செலவிட வேண்டும் என்பதற்காகவே அடிக்கடி ஆட்சி கவிழ்ப்பு செய்கிறார்கள். வேறு எந்தவித சுயநலமும் கிடையாது! ஜனநாயகம் தழைக்கவும் 'நாங்கள் ஒன்றும் பஞ்சப் பக்கிரி நாடு அல்ல' என்று நமது பொருளாதார மேம்பாட்டை மறைமுகமாகக் காட்டவுமே இவ்வாறு செய்கிறோம்.

டாக்டர்கள், ஸ்பெஷலிஸ்டுகள், ரத்தப் பரிசோதனை லாபுகள் என்று வகை வகையாகத் தெருவுக்குத் தெரு பெருகி எல்லாரும் கும்பலும் கியூவுமாக அப்பாயின்ட்மென்ட் வாங்கிக் கொண்டு காத்திருக்கவில்லையா? டாக்டர் நம்மிடம் ஃபீஸ் வாங்குவதை நமது பொருளாதார மேன்மைக்கு அவர் தரும் மரியாதை என்று நினைக்கிறோம். நர்ஸிங் ஹோமில் ஒரு நாளைக்கு அறை வாடகை மட்டும் ஐந்நூறு ரூபாய் என்று பில் போட்டால் கொடுத்து விட்டு வந்து எல்லாரிடமும் "மூணே நாளைக்கு ஐயாயிரம் ரூபாய் செலவு" என்று பெருமிதத்துடன் கூறி மகிழ்கிறோம்.

கிராமப்புறத்துச் செல்வச் சூழலைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். வயலும் வாழ்வும் பகுதியில்தான் படம் பிடித்துக் காட்டுகிறார்களே. உரங்கள், டிராக்டர்கள் — பம்ப் செட்டுகள்! டீ. வி. யில் மாடு பூட்டி உழுகிறவர்களை அபூர்வமாகத்தான் பெட்டியில் பார்க்க முடிகிறது. கஞ்சிக் கலயத்தைக் கண்டு எத்தனையோ யுகங்களாகிறது.

ஆகவே கத்தரிக்காய் வியாபாரிகள் எந்த விதக் கூச்சமுமில்லாமல், "கத்தரிக்காய் கிலோ பத்து ரூபாய்!" என்று கூவி விற்கலாம். ஏன், "இருபது ரூபாய்!" என்று கூடக் கத்தலாம். பொருளாதார நிபுணர்கள் காதிலும் தலைவர்களின் காதிலும் விழுமானால் மனம் மகிழ்வார்கள். 'நாட்டை முன்னேற்றிக் கொண்டிருக்கிறோம்' என்று பெருமிதப்படுவார்கள். அவர்கள் சந்தோஷத்தைக் கெடுப்பானேன்!



மனைவி: பூர்வ ஜென்மத்திலே என்ன பாவம் செய்தேனோ, உங்களைக் கட்டிக்கிட்டு அழறேன்!

கணவன்: நமக்குள்ளே எவ்வளவு ஒற்றுமை பாரு... இதையே நான் சொல்லலாம்னு நினைச்சேன். நீ சொல்லிட்டே...!

— அ. தெய்வசிகாமணி.

"மூணு வருஷமா ட்ரை பண்ணி கடைசிலே இந்த வருஷம்தான் சபாலே சான்ஸ் கிடைச்சது..."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். உங்க கச்சேரி என்னிக்கு?"

"கச்சேரியா? கான்டீன் காண்ட்ராக்ட் கிடைச்சதைச் சொன்னேன்!"





"ஸ்கூட்டர் விளையாட்டு விளையாடலாம், வா..."

"வேண்டாம்! பெட்ரோல் என்ன விலை விற்கிறது தெரியுமா?"



திரைப்பட விழா தேவைதானா?

இம்மாதம் நடைபெறுவது 22 வது சர்வதேசத் திரைப்பட விழா. பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு சென்னையில் நடைபெறுகிறது — குறிஞ்சி மலர் மாதிரி.

நாட்டின் இன்றையப் பொருளாதார நிலையைக்கருத்தில் கொள்ளும் போது, 'இத்தகைய விழாக்களை நடத்துவது அவசியம்தானா?' என்கிற கேள்வி எழுகிறது. அதனை மையமாகக் கொண்டு படத் தயாரிப்பாளர் ஜி. வெங்கடேசுவரனுடன் (ஜி. வி.) விவாதித்தார் எழுத்தாளர் உஷா சுப்பிரமணியன்.

உஷா: ஆரம்ப நிலையில் உள்ள தொழில் நுட்பக் கலைஞர்கள், முன்னேறத் துடிக்கும் இளம் டைரக்டர்கள் இவர்களுக்கு இந்தப் பட விழாக்கள் பயன் படும் என்று தோன்றவில்லை. வெவ்வேறு நகரங்களில் நடைபெறும் இவ்விழாக்களுக்குச் சென்று, அங்கே பதினைந்து நாட்கள் தங்குவது, டிக்கெட் வாங்கிக் கொண்டு போவது இதெல்லாம் அவர்களுக்குச் சாத்தியமாக இருக்குமா? திரும்பத் திரும்ப வசதிபடைத்த, ஸ்திரப்பட்ட இயக்குனர்களுக்கும் இதர தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் தானே இந்த வாய்ப்பு கிடைக்கிறது?

ஜி. வி.: அப்படியில்லை. இந்த விழாக்களுக்கு அதிக எண்ணிக்கையில் வருகிறவர்கள் வளர்ந்து கொண்டிருக்கும் இயக்குனர்களும் தொழில் நுட்பக் கலைஞர்களும் தான். அவர்களுக்கு 'சப்ஸிடி' மாதிரி அளிக்கப்படுகிறது. டில்லியை எடுத்துக் கொண்டால், அசோகா ஓட்டலில் திரைப்பட விழா விருந்தினர்களுக்கு ரொம்பவும் குறைவாகத் தான் கட்டணம் விதிக்கிறார்கள். படங்களைப் பார்க்க, பதினைந்து நாட்களுக்கும் இலவச டிக்கெட் அளிக்கப்படுகிறது. அது மட்டுமில்லை. ஃபெஸ்டிவல் என்றாலே கும்ப மேளா மாதிரி. அது நீங்கள் இருக்கும் இடத்துக்கே வந்து விட்டால் சுவாரசியமில்லை.

உஷா: கும்பமேளா என்று சொல்லிவிட்டாலே அது கூட்டம் கூடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் தனிப்பட்ட லாபம் எதுவும் இல்லை என்கிற அர்த்தம் வந்து விடுகிறதே!

ஜி. வி.: அப்படியில்லை. ஒருடெஸ்ட் மாட்ச் என்றால் ஐம்பதாயிரம் பேர் பார்க்கிறார்கள். அப்படிக் கூட்டம் சேருவதாலேயே அதற்கு அர்த்தமில்லை என்று ஆகிவிடாதல்லவா! சில சந்தர்ப்பங்களில்கூட்டத்துக்கும் அர்த்தம் இருக்கிறது.

உஷா: படவிழா என்பதால் 150 படங்களுக்கு மேல் வருகின்றன. ஒரே இடத்தில் இயலாமல் நாலைந்து தியேட்டர்களில் அவை திரையிடப் படுகின்றன. அதனால்



எல்லாராலும் எல்லாப் படங்களையும் பார்க்க முடிவதில்லை.

ஜி. வி.: உண்மைதான். ஆனால் விழாப் படங்கள் பின்னர் ரெகுலர் ஸ்கிரீனிங்குக்கு வருகின்றன. அப்போது பார்க்க முடியும். படவிழாவில் இடம் பெற்ற படம் என்றாலே பின்னர் அதற்கு ஒரு தனி மவுசு வந்து விடுகிறது.

உஷா: அப்படியொரு மவுசு ஏற்படுவதற்குக் காரணம் அந்தப் படங்களில் நம்மவர்கள் வழக்கமாக சென்சார் செய்துவிடும் காட்சிகள் இடம் பெற்றிருக்கும் என்கிற ஒரு எண்ணத்தினால்தான்.

ஜி. வி.: உண்மைதான்.

உஷா: வெளிநாட்டுப் படங்களைப் பார்க்கிறதுக்கு ஒரு வேகம் ஏற்படுவதே இந்த மாதிரி காட்சிகளைப் பார்க்கிறத்துக்குத்தான். இதனாலேயே ஹைதராபாத்தில் திரைப்பட விழாவின் போது சில பிரச்னைகளெல்லாம் ஏற்பட்டன.

ஜி. வி.: சுமார் 150 படங்கள் திரையிடப் படும் போது ஒன்றிரண்டு படங்கள் அம்மாதிரி காட்சிகள் கொண்டதாக அமைந்து விடக்கூடும். அதற்காக எல்லாப் படங்களையும் அப்படிச் சொல்லி விட முடியாது.

உஷா: அந்த மாதிரி படங்களை எப்படி சென்சார் செய்யாமல் இங்கே தியேட்டர்களில் போட முடியும்?

ஜி. வி.: படவிழாவின் போது மட்டும் போட முடியும்.

உஷா: விழாவுக்குப் பின்னர் அவை திரையிடப்படும் போது?

ஜி. வி.: அப்போது அவை சென்சார் செய்துதான் திரையிடப்படுகின்றன.

உஷா: அப்படி சென்சார் செய்யும் போது அது கதைப் போக்கை, அதன் அடிப்படையை மாற்றிவிடாதா? ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை வெட்டி விடுவதாலேயே கதைத் தொடர்பும் துண்டிக்கப்பட்டு விடலாம் இல்லையா?

ஜி. வி.: சென்சார் செய்யும் போது அப்படி எல்லாவற்றையுமே எடுத்து விடுவதில்லை. அந்த நாட்டுக் கலாசாரத்துக்கு ஏற்ற மாதிரி இருக்கிறவற்றை விட்டுவிடுவார்கள். அதற்கும் மீறிப் போய் நம் மனசைக் கெடுக்கும்படியாக இருக்கிறவற்றைத்தான் வெட்டுகிறார்கள்.

உஷா: ஒரு படவிழா நடத்துவதென்றால் முதலில் ஒரு குழு வெளி நாடுகளுக்குச் சென்று படங்களைத் தேர்வு செய்ய வேண்டும். பின்னர் அந்த நாடுகளிலிருந்து டெலிகேட்டுகளை வரவழைக்க வேண்டும். அதன் பின்னர் விழா நடத்தும் செலவு. இப்போது சென்னையில் நடைபெறும் விழாவுக்கு மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாய் செலவு செய்கின்றன. இன்றையப் பொருளாதாரச் சூழ்நிலையில் இது தேவைதானா?

ஜி. வி.: இது பல நாடுகளும் பங்கு கொள்ளும் ஓர் உலக நிகழ்ச்சி. நம் நாட்டைப் பற்றிப் பொதுவாக அயல் நாடுகளில் என்ன கருத்து நிலவுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இப்படி வந்து போவதால் அந்தக் கருத்து மாறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. நம் படங்களை அவர்கள் வாங்குவதற்கும் இது ஒரு சந்தர்ப்பம். நாங்கள் தயாரிக்கும் படங்களை வெளி நாடுகளில் விநியோகம் செய்வதற்கு அரசு இம்மாதிரி படவிழாக்களை நடத்துவதன் மூலம் உதவுகிறது. பொதுவாகவே படவிழாக்கள் எங்களுக்குப் பல வழிகளிலும் பயனாகின்றன. உதாரணமாக, ஒரு படவிழாவில் 'டோனா ஃபோரா அண்ட் ஹெர் டூ ஹஸ்பண்ட்ஸ்' என்றொரு படம் வந்தது. அதைப் பார்த்துத்தான் 'கல்யாணராமன்' படம் உருவாயிற்று. அதே மாதிரி நம் படங்களைப் பார்த்து அவர்களும் எடுக்கிறார்கள்.

உஷா: அதாவது காப்பியடிப்பதற்கு இது ஒரு வாய்ப்பு?

ஜி. வி.: காப்பியடிப்பது என்று சொல்லிவிட முடியாது. அது ஒரு இன்ஸ்பிரேஷன். நீங்களே எதையாவது பார்த்து அல்லது படித்து இன்ஸ்பயர் ஆகி எழுதலாம். அதற்காக நீங்கள் காப்பியடித்ததாகச் சொல்லிவிட முடியுமா? உலகத்திலேயே மொத்தம் பத்துப் பதினைந்து கதைகள்தான் இருக்கின்றன. அவற்றையேதான் வெவ்வேறு

கோணங்களில் அணுகிப் புதிது புதிதாகக் காண்பிக்க வேண்டியிருக்கிறது. மனிதனின் உணர்வுகள், பண்புகள் தவிர படங்களில் வேறு எதைக் காண்பிக்க முடியும்?

உஷா: இன்னொரு விஷயத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தர்ட் வோர்ல்ட் கன்ட்ரீஸ் அல்லது டெவலப்பிங் கன்ட்ரீஸ் என்கிற அடிப்படையில் நம் படங்கள் சேர்க்கப் படுவதுதான் அது. திரைப்படத் தயாரிப்பில் நாம் ஹாலிவுட்டுக்கு அடுத்த இடத்தில் இருக்கிறோம்.

ஜி. வி.: சத்யஜித் ரே போன்றவர்கள் எடுத்த அவார்ட் வின்னிங் படங்களையெல்லாம் எடுத்துக் கொண்டால், அவற்றில் காண்பிக்கப் பட்டிருப்பவை எல்லாமே இந்தியாவின் வறுமை, துயரம் இவைதான். நம்முடைய செழிப்பான அம்சங்கள் எதுவுமே இவற்றில் இடம் பெறுவதில்லை. இம்மாதிரி படங்களை மட்டுமே வைத்து எடையிடும் போது நாம் ஃபோர்த் வோர்ல்ட் ஆகாமல் இருக்கிறோமே, அதுவே பெரிய விஷயம்!

உஷா: ஒரு கோடி இருபது லட்சம் ரூபாய் செலவழித்துப் படவிழா நடத்துகிறார்கள். இந்தத் தொகைக்கு நமக்குத் திரும்பக் கிடைப்பது என்ன?

ஜி. வி.: சுற்றுலா அபிவிருத்திக்கு இது உதவும். பல பேர் இப்படி வந்து திரும்பிப் போய்ச் சொல்வதால் இந்தியாவைப் பற்றி ஓர் ஆர்வம் ஏற்படுகிறது. இது ஒரு நீண்ட கால பலன். குறுகிய காலத்தில் எந்தப் பலனையும் எதிர்பார்க்க முடியாது. ஒரு சர்வதேச நிகழ்ச்சியினால் தொழில், வர்த்தகம், சுற்றுலா போன்றவை பெருக வாய்ப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு சர்வதேச நிகழ்ச்சியிலிருந்தும் ரூபாய்க் கணக்கில் குறுகிய காலப் பலனை எதிர்பார்த்தால் இப்படி எந்தவொரு நிகழ்ச்சியுமே நடைபெறுவது இயலாது.

உஷா: இதுவரை நடைபெற்றுள்ள 21 படவிழாக்களையும் பல தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் பார்த்திருப்பார்கள். தேர்ந்தெடுக்கப் பட்ட படங்கள் அவை. அந்த அனுபவங்கள் நம்முடைய படங்களில் எந்த வகையில் பிரதிபலிக்கின்றன?

ஜி. வி.: நிச்சயமாகப் பிரதிபலிக்கின்றன. 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் கமல் குள்ளனாக வருவது சார்லி சாப்ளினின் பல படங்களின் இன்ஸ்பிரேஷன். 'அபூர்வ ராகங்கள்' படத்துக்கு இன்ஸ்பிரேஷன் '40 காரட்ஸ்' என்கிற படம். 'நாயகன்' பாத்திர நடிப்பு 'காட்ஃபாதர்' படத்தில் மார்லன் பிராண்டோவின் நடிப்பிலிருந்து பெற்ற இன்ஸ்பிரேஷன். இப்படிக் கதையம்சம், நடிப்பு, டெக்னிக் எல்லாவற்றிலுமே முன்



னேற்றம் காணப் படவிழாக்கள் உதவுகின்றன.

உஷா: ஒரு மணிரத்னம் 'நாயகன்' எடுக்கிறார், ஒரு கமலஹாசன் 'அபூர்வ சகோதரர்கள்' செய்கிறார் என்பது வேறு விஷயம். பொதுவாக, 99.9 சதவிகித இந்தியப் படங்கள் அவற்றின் வழக்கமான பாணியிலிருந்து மாறவேயில்லை — 21 படவிழாக்களுக்குப் பின்னரும்.

ஜி. வி.: அப்படியில்லை. வருடத்துக்கு ஒரு கமலஹாசனோ அல்லது மணிரத்னமோ உருவானாலே போதும். அது பட ஏற்றுமதிக்கு நிறைய உதவும்.

உஷா: இம்மாதிரி ஒரு பட விழா இல்லாமலே கமலும் மணிரத்னமும் இம்மாதிரி படங்களை எடுப்பார்கள். தே ஆர் மேட் தெட் வே.

ஜி. வி.: அவர்களும் பல நல்ல படங்களைப் பார்க்கத்தான் செய்கிறார்கள். ஒரு வகுப்பில் நல்ல டீச்சர் இருந்து, ஒரு மாணவன் மட்டும் நன்றாகப் பாஸ் செய்து, மீதி 49 பேர் ஃபெயில் ஆகிவிட்டால், அந்த ஒரு காரணத்துக்காகவே ஒரு நல்ல டீச்சர் தேவையில்லை என்று சொல்லிவிட முடியாது.

உஷா: உலக சினிமா என்பது ஏதாவது ஒரு வகையில் அத்தனை படத் தயாரிப்பாளர்களிடமும் ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டாமா?

ஜி. வி.: சினிமா என்பது ஒரு வியாபாரம். என்ஜினியர் ஆவதற்கும் டாக்டர் ஆவதற்கும் அதற்கென்று படித்திருக்க வேண்டும். எழுத்தாளன் ஆவதற்கு நிறைய அனுபவம் வேண்டும். இந்தத் துறை அப்



"வக்கீல் சார்! கேஸ் ஒண்ணும் கிடைக்காம இருக்கும் போது என்ன செய்வீங்க?"

"குழாய்ச் சண்டையில் என் மனைவிக்காக ஆஜராகி வாதாடுவேன்! 'டச்' விட்டுப் போயிடக் கூடாது பாருங்க!"

— வேதபுரி எஸ். இரமேஷ்.

படியல்ல. யார் வேண்டுமானாலும் படம் எடுக்கலாம். வியாபாரம் என்று வரும் போது எல்லாருமே அப்படி மாற்றம் பெறுவார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

உஷா: டிவியில் ஒளியும் ஒலியும் காண்பித்துக் கொண்டிருக்கும் வரையில் நம் சினிமாவின் தரம் உயரப் போவதேயில்லை.

ஜி. வி.: ஒளியும் ஒலியும் ரொம்பவும் பாப்புலர் ஆக இருக்கிறதே!

உஷா: அதனால்தான் சொல்கிறேன். மனங்களை ஒரு குறிப்பிட்ட தடத்திலேயே அது நிறுத்திவிடுகிறது. பிறந்தது முதல் போதை மருந்திலேயே பழக்கப் பட்டு விட்டவருக்கு எப்போதாவது சத்துணவு கொடுத்தால் கூட.....

ஜி. வி.: இல்லை. இப்போது ஒரு மாற்றம் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. புதிய முகங்கள், புதிய கதைகள் இவற்றைப் பார்க்க வேண்டும் என்கிற ஆர்வம் மக்களிடையே பெருகி வருகிறது. 1990 இல் வெளியான படங்களைப் பார்த்தாலே இது தெரியும். ஆகவே, விமரிசிக்கும் போது இப்போதைய நடப்பையும் கவனிக்க வேண்டும்.

உஷா: படவிழாவுக்குப் பல வெளிநாட்டு இயக்குனர்கள் வருகிறார்கள். இங்கேயுள்ள வளரும் இயக்குனர்கள் அவர்களைச் சந்திக்கவும் பேசவும் சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லையென்றும் பிரபலமாக உள்ளவர்களுடன் மட்டுமே அவர்கள் பேசி விட்டுப் போய் விடுகிறார்கள் என்றும் கூறப்படுகிறதே!

ஜி. வி.: அது தவறு. ஒவ்வொரு படவிழாவின் போதும் 'ஓப்பன் ஃபோரம்' என்று நடத்தப்படுகிறது. ஃபிலிம் ஃபெஸ்டிவல் டைரக்டரேட்டும் ஃபெடரேஷன் ஆஃப் ஃபிலிம் சொஸைடீஸும் இணைந்து தினமும் நடத்தும் நிகழ்ச்சி அது. அதில் யார் வேண்டுமானாலும் கேள்விகள் கேட்கலாம். விமரிசிக்கலாம். சம்பந்தப்பட்ட இயக்குனர்கள் பதில் சொல்வார்கள்.

உஷா: 'இந்தியன் பனோரமா' பகுதியில் 'கமர்ஷியல் சினிமா' வுக்கான ஒருபிரிவு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது எதனால்? கூட்டம் சேர்க்கவா?

ஜி. வி.: 'கூட்டம் சேர்ப்பதற்காக அல்ல. ஒரு படவிழாவின் போது, 'பாபி' படத்தைப் பல வெளி நாட்டு டெலிகேட்டுகள் பார்க்க விரும்பினார்கள். கமர்ஷியல் படம் என்பதால் அதற்கு அந்தப் படவிழாவில் இடம் கிடைக்கவில்லை. அதன் பின்னர்தான் இப்படி ஓர் ஏற்பாடு. இப்படிச் செய்வதால், யாருமே தாங்கள் விடுபட்டுவிட்டதாக எண்ண இடமில்லாமல் போய்விடுகிறது. உண்மையில், ஆர்ட் சினிமா, கமர்ஷியல் சினிமா என்று எதுவும் இல்லை. ஒரு படத்தை எப்படி உருவாக்குகிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

உஷா: பின் எதற்காக அப்படிப் பிரிக்க வேண்டும்?

ஜி. வி.: சில இயக்குனர்கள் அவார்ட் வாங்குவதற்கு என்றே படம் தயாரிப்பார்கள். தியேட்டரில் அது ஓட வேண்டும் என்பதில்லை. அவர்கள் நோக்கம் அப்படி. அந்த மாதிரி நிறையப் படங்கள் எடுக்க முடியாது. ஒரு படத்தில் லாபம் கிடைத்தால்தான் அடுத்த படம் எடுக்க முடியும். படங்களை மேம்படுத்துவது பற்றி யோசிக்க முடியும். ப்ராஃபிட் இஸ் எ டர்ட்டி வோர்ட் ஒன்லி இன் இண்டியா.

உஷா: படவிழாவின் காரணமாக இந்தியப் படங்கள் எந்த அளவுக்கு விற்பனையாகின்றன?

ஜி. வி.: விற்பனையாகிறவை படங்கள் மட்டுமில்லை. கதை உரிமை, வேறு மொழிகளில் டப்பிங் உரிமை என்று எத்தனையோ. மத்திய கிழக்கு நாடுகளில் அவர்கள் மொழியில் சப்டைட்டில் போட்டால் கூடப் படிக்கத் தெரியாதவர்கள் நிறையப் பேர் உள்ளனர். அவர்களுக்கு டப்பிங் செய்துதான் திரையிட வேண்டும். நாம்தான் படிக்காதவர்கள் நிறைந்த நாடு என்றில்லை. நமக்கு அண்ணன்களெல்லாம் நிறையப் பேர் இருக்கிறார்கள்!

உஷா: படவிழாவில் பெண் இயக்குனர்கள் எந்த அளவுக்குப் பங்கேற்கிறார்கள்?

ஜி. வி.: வெளிநாடுகளிலிருந்து நிறையப் பேர் வருகிறார்கள். அங்கெல்லாம் ஆண் — பெண் என்கிற வித்தியாசம் இல்லை. இந்தியாவில் பெண் டைரக்டர்கள் ரொம்பவும் கம்மி. அபர்ணா சென்... அபர்ணா சென்... இப்போதைக்கு அவ்வளவுதான்.

— சி. ஆர். கே.

அட்டை வண்ணப்படமும், படங்களும்: யோகா.

Anyway you look at it It is going to be a fabulous NEW YEAR!



"HAPPY NEW YEAR"

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

Shriram

CHITS & INVESTMENTS PVT. LTD.

Admn: Office: "Subramanian Building",
1, Club House Road, Madras - 600 002.
Ph: 474451/475536/470400/473932.

Corporate Office: "Shriram House",
10, Kasturi Estate, Madras - 600 086.
Ph: 454805/452113.

ADWAVE/SCI/4158 A



ஆதரவு வாபஸ் இல்லை!
ராஜீவ்
... ஆனா, சொன்னபடி நடக்கணும்!
சந்திரசேகர்
டிஸ்மிஸ் பண்ண மாட்டேன் ...
..சொன்ன பேச்சைக் கேட்டாக்க ...
கருணாநிதி
கருணாநிதி
அண்ணா காட்டிய வழியில் வர முடியாதவர், போங்க...
ஜெயலலிதா
எம்.ஜி.ஆர். காட்டிய அண்ணா வழியில் நடக்கலாம், வாங்க...
நான் மறியல் பண்ணினப்போ என் தோள் மேல கை போட்டு அன்பா பேசினாரு... கடைசியிலே, டிஸ்மிஸ் இல்லேன்னு டபாய்ச்சுட்டுப் போயிட்டாரே...!
வாழப்பாடியார்
நானுந்தான் விருந்து வச்சுப் பேசினேன்... காரில போறப்பே பேசினேன்... ஏர்போர்ட்ல பேசினேன்... மனுஷன் டிஸ்மிஸ் விஷயத்துலே கண்டுக்கவே இல்லையே...!
ஜெயலலிதா



கல்கி

1991 ஜனவரி 6
மலர் : 49 இதழ் : 23
பிரமோதூத மார்கழி 22



சமாந்தா ஃபாக்ஸ் கலாச்சாரம்!

'வந்தேன், பார்த்தேன், வெற்றி கண்டேன்' என்ற ரீதியில் இந்தியாவை ஒரு கலக்குக் கலக்கி விட்டுத் திரும்புவதாக சமாந்தா ஃபாக்ஸ் எண்ணிக் கொண்டிருக்கலாம். அவருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள். 'சமாந்தா ஃபாக்ஸ் கலாச்சாரம்' என்பது இந்தியாவுக்குப் புதிதல்ல என்றும் கடந்த பல ஆண்டுகளாகவே இங்கே வேரூன்றி வருகிற சமாசாரம்தான் என்றும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சமாந்தா ஃபாக்ஸுக்கு லட்சக்கணக்கான பிரும்மாண்ட போஸ்டர்களைச் சென்னை மாநகரின் வீதிகள்தோறும் ஒட்டி, அமர்க்களப்படுத்திவிட்டதாக அவரை இங்கே தருவித்த நிர்வாகிகள் நினைத்திருக்கலாம்! ஹூம், நம்முடைய அரசியல் தலைவர்கள் தங்கள் பிறந்த நாளுக்காக ஒட்டிக் கொள்ளாத போஸ்டர்களா? அவற்றுடன் ஒப்பிட இவை எம்மாத்திரம்!

வேறு எந்த அயல்நாட்டுத் தலைவருக்கும் கிடைக்காத மாபெரும் வரவேற்பு இந்தியப் பெருநகரங்கள் அனைத்திலும் தமக்குக் கிடைத்து விட்டதாக சமாந்தா ஃபாக்ஸ் பெருமைப்பட வேண்டாம். எங்கள் அரசியல் தலைவர்கள் டில்லி சென்று திரும்பினால் கூட விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு அளித்துப் பிரும்மாண்ட ஊர்வலம் நடத்துவோம்!

இந்தியப் பத்திரிகைகள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு பேட்டிகளைப் பிரசுரித்ததிலும், கட்டுரைகள் எழுதியதிலும் முக்கால் நிர்வாணப் படங்களை அச்சிட்டதிலும் சமாந்தா தலை கிறுகிறுத்துப் போக வேண்டாம். இங்கே எந்த சினிமா நட்சத்திரத்துக்கும் இத்தகைய கௌரவங்கள் உண்டு!

"நான் ஆபாசப் பாடல்கள் பாடி, ஆடைக் குறைப்புச் செய்துதான் ஆடுகிறேன்: ஆனால் இவற்றை மட்டும் நம்பி இருக்கவில்லை; கலைத்துறையில் உயர விரும்புகிறேன்'' என்று மிகப் பெரிய அற்புதமான விஷயத்தைத் தாம் கூறிவிட்டதாக சமாந்தா ஃபாக்ஸ் எண்ண வேண்டாம். இதையேதான் இங்கே சிலுக்கு ஸ்மிதா, டிஸ்கோ சாந்தி மட்டுமின்றி எல்லாச் சினிமா நட்சத்திரங்களுமே ஆண்டாண்டு காலமாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

பார்க்கப் போனால் எங்கள் சினிமா நட்சத்திரங்கள் உங்களை விட ஒருபடி உயர்ந்து விட்டார்கள். எப்படியெனில் இவர்கள் ஒவ்வொருவரும் அரசியலில் புகுந்து வோட்டு வாங்கி, நாளை மாநில முதல்வராகவும், ஏன், பிரதமராகக் கூட வர வாய்ப்பிருக்கிறது! உங்கள் நாட்டில் உங்களால் இதைச் சாதிக்க முடியுமா?

நீங்களும் உங்கள் குழுவினரும் ஆடுவதைப் பார்க்க முந்நூறு, நூறு என்று டிக்கெட்டுக்குக் கொடுத்து அழுதது போக, உங்களோடு சேர்ந்து ஒரே கூடத்தில் அமர்ந்து ஒருவேளை விருந்து சாப்பிட ஆயிரம், இரண்டாயிரம் என்று பலர் பணம் கொட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இதனாலெல்லாம் நீங்கள் கர்வம் அடைய வேண்டாம். இங்கே டில்லியிலிருந்து அடுத்தடுத்து வரும் பிரதமர்கள், இன்று அரசியலில் ஒளிரும் நேற்றைய சினிமா நட்சத்திரங்களுடன் சேர்ந்து டின்னர் சாப்பிடாமல் திருமபுவதில்லையாக்கும்! இங்கே கூட்டணி அமைக்கப் பரிமாறப்படும் பிரீஃப்கேஸ்கள் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்!

"ரொம்பத்தான் கிண்டல் பண்ணாதீர்கள்! சமாந்தா ஃபாக்ஸின் நடனம், டின்னர் முதலியவை மூலம் வசூலான தொகைகள் நல்ல காரியத்துக்கே பயனாகின்றன'' என்று சமாந்தாவை இங்கே வரவழைத்த நிர்வாகிகள் எதிர்ப்புக்குரல் எழுப்பலாம். உண்மைதான். 'நல்ல லட்சியங்களை அடைய மேற்கொள்ளப்படும் மார்க்கங்களும் நல்லவையாக இருக்க வேண்டும்' என்ற அண்ணலின் போதனையை நாம் அவருடன் சேர்த்தே கட்டெரித்துச் சமாதி கட்டிவிட்டோம் அல்லவா! அதனால்தானே இன்று சமாந்தா ஃபாக்ஸ் கலாச்சாரமும் நமது அரசியலிலும் மற்ற துறைகளிலும் பிரிக்க முடியாதபடி ஊடுருவி இருக்கிறது!

இத்தகைய சூழ்நிலையில்தான் நமது ஜனாதிபதி ஆர். வி. கலாக்ஷேத்திரத்தின் கலைவிழாவைத் தொடங்கி வைத்து, 'பண்பாட்டைக் காப்பாற்றுங்கள்! கலாச்சாரத்தைக் காப்பாற்றுங்கள்!' என்று புலம்பியிருக்கிறார். 'சத்தம், இசை என்ற பெயரில் உலவுகிறதே! கண்ணைப் பறிக்கும் வர்ணங்களை ஓவியங்கள் என்கிறார்களே! ஆபாசக் கூத்தை நடனம் என்கிறார்களே! கூச்சலிடுவதை நாடகம் என்று கூறி அரங்கேற்றுகிறீர்களே' என்றெல்லாம் ஒரு குரல் அழுதிருக்கிறார்!

'ஐயோ பாவம், இப்படி விஷயம் புரியாதவராயிருக்கிறாரே' என்று அவருக்காகப் பரிதாபப்படுகிறோம் நாம்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

சண்டையில் முடிந்த சம்பளத்தேதி!

தேன் நிலவும் அதன் பின்பும் — 4




திருமண ஆலோசகர் விசாரித்து அறிந்த விஷயங்கள்:

மல்லிகா தன் முதல் சம்பளத்தில் கணவனுக்குப் பரிசு வாங்க விரும்பி, ப்ரீஃப் கேஸ் ஒன்றை வாங்கி, பொட்டலம் கட்டி எடுத்து வந்திருந்தாள். அவன் அதிகார தோரணையில் மிரட்டியது பிடிக்கவில்லை. நான் என்ன ஊர் சுற்றியா? எல்லோர் முன்னிலையிலும் ப்ரீஃப்கேஸ் பரிசைத் தரக் கூச்சம். தனிமையில் அவனிடம் தந்து ஆச்சரியப்படுத்த ஆசை. ஆனால் அதற்கு அவன் சந்தர்ப்பமே தரவில்லை.

வழக்கமாக ஆறு மணிக்கு வருபவள் எட்டு மணிக்கு வந்ததோடு எல்லோர் எதிரிலும் என்னை அவமானப்படுத்தி விட்டாள் என்று ரமணன் குற்றம் சாட்டினான்.

திருமண ஆலோசகர் அறிவுரை:

இந்தத் தம்பதியிடையே உண்டான பிரச்னை மிக எளிதில் அடையாளம் காணக் கூடிய ஒன்று: Communication Gap! ஒருவரை மற்றவரிடம் முழுமையாக வெளிப்படுத்தாமை. கணவன், 'எங்கே போயிருந்தாய்?' என்று கேட்பதற்குப் பதில் 'அப்பாடி! வந்தாயா? கவலை விட்டது' என்று சொல்லியிருக்கலாம். அவன் கோபமே கவலையின் இன்னொரு வடிவம்தான். எல்லோர் முன்னிலையிலும் மென்மையான கவலையுணர்வை வெளிக்காட்ட முடியாது; ஆனால் ஆண்மையின் அறிகுறியாகக் கருதப்படும் அதிகாரத்தை, கோபத்தை வெளிப்படுத்த முடியும்.



மனைவியும் 'முக்கிய வேலையிருந்தது. இதோ வந்து சொல்கிறேன்' என்று கூறி விட்டு, ப்ரீஃப்கேஸை உள்ளே வைத்து விட்டு வந்து ஒரு காரணத்தை யோசித்துச் சொல்லியிருக்கலாம். இருவருமே முரண்டு பிடித்ததால் வந்த வினை.

சுட்டிக் காட்டியதும் ஒப்புக் கொண்டு திருத்திக் கொண்டார்கள்.

மணவாழ்வில் தோன்றும் பெரும்பாலான பிரச்னைகளுக்கு Communication Gap தான் முக்கிய காரணம். இந்த இடைவெளியை நீக்கிவிட்டால் பலப் பல பிரச்னைகளைச் சமாளித்துவிடலாம்.

Communication என்பது வெறும் பேச்சைக் குறிப்பதல்ல. கணவனும் மனைவியும் மணிக்கணக்கில் அரசியலை அலசினால் அது அவர்களிடையே பந்தத்தை வலுவடையச் செய்து விடுமா? ஒருவர் மனத்தில் உள்ள ஆசாபாசங்கள், கனவுகள், இலட்சியங்கள், கோபங்கள், துக்கங்கள் அனைத்தையும் மற்றவருக்கு வெளிப்படுத்துவதே Communication.

துரதிர்ஷ்டவசமாக நம் ஆண்கள் இத்தகைய வெளிப்பாட்டை இழிவாக, பலவீனமாக எண்ணுவதற்குப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இருபத்தைந்து வருடங்களாக அப்படிப் பழகிய பிறகு திடீரென்று மனைவியிடம் உணர்வுகளை மென்மையாக வெளிப்படுத்தத் தெரிவதில்லை. பெண்ணைச் சமமானவளாக பாவித்துப் பேசவும் அவர்களுக்கு இதுவரை சந்தர்ப்பமோ பழக்கமோ அளிக்கப்பட்டதில்லை. ஆண்கள் இதற்கு முயற்சி செய்ய வேண்டும். பெண்களும் சற்று அனுதாபத்துடன் இப்பிரச்னையை அணுக வேண்டும்.

பேட்டி: **எஸ். ஆர்.**

சிறுசேமிப்புத் துறை

முதலீடு செய்த அன்றே

ஈடு இணையற்ற பலன்கள்

வங்கிகள் மற்றும்
பரஸ்பர நிதி
வழங்க இயலாத
சலுகைகள்



மூலதன சந்தையில் சிறுசேமிப்பு
பிரத்யேக உரிமை வகிக்கிறது

சிறுசேமிப்பில் முதலீடு செய்த கோடிக்கணக்கான முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் அடையும் ஒப்பற்ற கூடுதல் சலுகைகளை பெறுங்கள்.

முதலீட்டிற்கு அதிகபட்ச வட்டி

திட்டம்	ஆண்டு	வட்டி விகிதம்
தேசிய சேமிப்புப் பத்திரம் 8-ஆம் வெளியீடு	5	15.82%
,,	6	16.91%
கிசான் விகாஸ் பத்திரம்	5	17.6%
,,	5½	18.18%
இந்திரா விகாஸ் பத்திரம்	5	20%

சிறப்பு அம்சங்கள்

- பாதுகாப்பான முதலீடு மற்றும் நம்பகமான வட்டி
- வங்கிகள் , நிறுவனங்கள் அளித்திடாத உயர்ந்த வட்டி
- வருமான வரி மற்றும் சொத்து வரிவிலக்கு (பிரிவு 88ன்படி - NSC மற்றும் பிரிவு 5 (i)ன்படி சொத்து வரிச்சலுகை)
- பிரிவு 88ன்படி வட்டிக்கு வருமான வரிவிலக்கு
- குழந்தைகளின் பெயரில் செய்யும் முதலீட்டிற்கு பிரிவு 88ன்படி வரிவிலக்கு
- வங்கிகளில் கடன்வசதி
- வாரிசுதாரர் நியமனவசதி
- ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் மாற்றக் கூடிய வசதி
- எல்லா அஞ்சலகங்களிலும் காசோலை வசதி (சேமிப்பு கணக்கிற்கு)
- உங்கள் வீடு தேடி வரும் ஏஜெண்டுகளின் வசதி.

கூடுதல் சலுகைகள்

★ ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு பரிசுக்கூப்பன், பரிசுக் கூப்பன் மூலம் 262 பரிசுகள்.

★ ரூ.1000/-ம் அதற்கு மேலும் K.V.P., N.S.C. VIII Issue போன்ற சில குறிப்பிட்ட திட்டங்களில் செய்யும் முதலீட்டிற்கு 1% ஊக்கத்தொகை.

★ பங்கு மார்க்கட் தரகர்களுக்கு (Stock Brokers) **2%** கமிஷன்

★ நிறுவனங்கள் இந்திரா விகாஸ் பத்திரத்தில் செய்யும் முதலீட்டிற்கு 10 ஆண்டுக்குப்பின் அதிகபட்ச வட்டியாக **54.66%** பெறலாம்.

பரிசுப் பொருட்களின் விவரம்

1 சூப்பர் பம்பர் பரிசு	— மாருதி கார்
1 முதல் பரிசு	— பஜாஜ் ஸ்கூட்டர்
2 இரண்டாவது பரிசுகள்	— E.C கலர் டி.வி.
3 மூன்றாவது பரிசுகள்	— குளிர்பதனப் பெட்டி (165 லி)
5 நான்காவது பரிசுகள்	— மோஃபா
10 ஐந்தாவது பரிசுகள்	— தையல் மிஷின்
10 ஆறாவது பரிசுகள்	— சைக்கிள்
30 ஏழாவது பரிசுகள்	— கைக்கடிகாரம்
200 ஆறுதல் பரிசுகள்	— சுவர்க் கடிகாரம்

சேமிப்பு பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

பரிசுக் கூப்பன்கள் கிடைக்குமிடம்

சென்னையில்:

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், சென்னை-5 மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகம், சென்னை-3 மற்றும் அனைத்து மாநகராட்சி வட்ட அலுவலகங்கள், சமூகப் பாதுகாப்பு துணை இயக்குநர் அலுவலகம், குறளகம், சென்னை-108.

மாவட்டங்களில்:

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்,
வட்டாட்சியர் அலுவலகங்கள்,
வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்.

இயக்குநர்
சிறு சேமிப்புத் துறை
143, அண்ணா சாலை,
சென்னை-600 002
தொலைபேசி: 846209/840223

DIPR/3153/MS/90/ARIES

விக்கல் என்பது என்ன?



● **க. கோகுலகிருஷ்ணன், விசலூர்:**

● **அடிக்கடி விக்கல் ஏற்பட்டு நீண்ட நேரம் நீடிப்பதற்கு என்ன காரணம்? இதனைப் போக்க என்ன வழி?**

●● **டாக்டர் லக்ஷ்மி நாகராஜன், சென்னை — 18:**

● தும்மல், இருமல் போல் விக்கலும் உடலினுள் குடிகொண்டுள்ள அன்னியப் பொருளை வெளியேற்ற முயலும் தற்காப்பு நடவடிக்கை! உணவுப் பாதையில் உணவுத் துகள்கள் இருப்பதாலோ வயிற்றில் அதிக வாயு சேர்ந்திருப்பதாலோ அது ஏற்படுகிறது. வயிற்றில் உள்ள வாயு நெஞ்சுக் கூட்டுக்கும் வயிற்றுக்கும் இடையே உள்ள **diaphragm** என்ற உறுப்பை அழுத்துகிறது. சிக்கிய உணவுத் துகளையோ, அதிகப்படி வாயுவையோ வெளியேற்ற உடல் எடுக்கும் பயனற்ற முயற்சிதான் விக்கல்.

விக்கல் தானாகவே நின்று விடும். ரொம்பத் தொந்தரவு இருந்தால் வாயு தணிக்கும் மாத்திரைகளை டாக்டர் எழுதித் தரலாம்.

காரசாரமான, மசாலா நிரம்பிய உணவுகளையும், அஜீரணம், வாயு ஏற்படுத்தும் உணவுகளையும் தவிர்த்தால் விக்கல் வருவதைத் தடுக்கலாம்.

● **எஸ். யோகலிங்கம், சென்னை—82.**

● **பல வருடங்களாகப் புகைபிடிக்கிறார் நண்பர். எக்ஸ்—ரே பரிசோதனைக்குப் பிறகு, தனக்கு ஒரு குறையும் இல்லை என்று டாக்டர் கூறிவிட்டதாகச் சொல்கிறார். புகைபிடிப்பதால் பாதிப்பே ஏற்படாமல் இருப்பது சாத்தியமா?**

● புகை பிடித்தால் உடலுக்கு ஏற்படும் பாதிப்பு, புகைக்கும் சிகரெட்டின் தன்மையையும் புகையை உள்ளிழுக்கும் முறையையும் பொறுத்து வேறுபடும். ஃபில்டர் பொருத்தப்பட்ட சிகரெட், உடலுக்குள் செல்லும் நிகோடின் (விஷப் பொருள்) அளவைக் குறைக்கிறது. நீளமான சிகரெட்கள் புகைப்பதாலும், பாதி சிகரெட் பிடித்துவிட்டு எறிந்து விடுவதாலும் சிகரெட் நெருப்பு வாயருகே எரிவதில்லை. நெருப்பு நெருங்க நெருங்க உள்ளிழுக்கப்படும் நிகோடின் அளவு அதிகரிக்கும். புகையை வாய்வழியே இலேசாக இழுத்து விட்டு விட்டால் மிகக் குறைவான நிகோடின்தான் உடலில் கலக்கிறது. ஆனால் மூக்கு வழிப் பாதையையும் பயன்படுத்தித் தீர்க்கமாக, ஆழப் புகையை உள்ளுக்கிழுத்தால் நேரடியாக நுரையீரல்களை நிரப்பும் புகை, நிகோடினை விறுவிறுவென்று ரத்தத்தில் கலக்கச் செய்கிறது. இப்படி கூறுவதால் ஒருவர் ஆபத்தில்லாத முறையில் கெட்டிக்காரத்தனமாகப் புகைக்க முடியும் என்று அர்த்தமாகாது. நின்று கொல்லும் வாய்ப்பு நிச்சயம் உண்டு!

● **ஜ. எஸ். வாசு, மாடம்பிள்ளை தர்மம்:**

● **சாதாரணமாக நாம் தூங்கும் போது கண் இமைகள் மூடி இருக்கின்றன. சிலருக்கு மட்டும் அவை பாதி திறந்த நிலையில் இருப்பது ஏன்?**

● உடல் முழுதும் ஓய்வு நிலையில் இருக்கும் போது தசைகள் தளர்ந்து இருக்கின்றன. அதனால் கண் இமைகளும் மூடிக் கொள்கின்றன. நரம்பியல், தசைக் கோளாறுகள் காரணமாகக் கண்கள் பாதி திறந்த நிலையில் இருக்க உறங்குபவர்கள் உண்டு. தைராய்டு கோளாறு காரணமாகச் சிலருக்கு விழிகள் துருத்திக் கொண்டிருக்கும். இத்தகையவர்கள் தூங்கும் போது கண்கள் பாதி திறந்த நிலையிலேயேதான் இருக்கும்.

சாப்பிட ஆசை; வெட்ட மனமில்லை!

அந்த மலர்களை அப்படியே பறித்து விடலாம் போலத் தோன்றியது. அவ்வளவு அழகாக, கண்கவர் வண்ணத்தில் இருந்தது பூங்கொத்து. 'தொடாதீர்கள்; தொட்டால் நொறுங்கி விடுவேன்' என்ற எச்சரிக்கை தயங்க வைத்தது.

''இட் மஸ்ட் பி வாக்ஸ் யார்...'' இரண்டு கல்லூரி மாணவிகள் பேசிக் கொண்டார்கள்.

''சேச்சே. மெழுகு பொம்மை இல்லேடி. கேக். நிஜம்மா கேக்.''

நீல்கிரீஸ் நிறுவனத்தினர் நடத்திய 'கேக் கண்காட்சி' பிரமிக்க வைத்தது. குறிப்பாக அந்த மூன்று கேக்குகள் —

1. பாம் பாம் கேம்
2. கிரீட்டிங் கார்ட்
3. ஃபேன்ஸி டெகொரேட் கேக்

மூன்றாவது இட்டம்தான் பார்வையாளர்களை மெழுகோ என்று ஐயுற வைத்தது. சுற்றிலும் சிறிய அளவிலான வகை வகையான வேறு பல கேக்குகளின் அணிவகுப்பு. அவை ஒவ்வொன்றுக்கும் விலை குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் மேலே சொன்ன மூன்று பெரிய கேக்குகளிலும் விலைச் சீட்டுக்கள் இல்லை.

'அவை மூன்றும் பரிசாகக் கொடுக்கப்



* சிறுவன் அநிஷ்வா: ''தொடக் கூடாதாமே! என்ன செய்ய...''

படஉள்ளன' என்றார்கள். பார்வையாளர்களுக்கு மூன்று ரூபாய் வீதம் லாட்டரிச் சீட்டு 'விற்றார்கள். குலுக்கல் மூலம் அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்களாம்.

இந்த பிரம்மாண்டமான கேக்குகள் தயாரிப்பு சமாசாரம் எப்படி?

''உதாரணமாகப் பூங்கொத்துக் கேக்கைப் பாருங்க...'' விற்பனைப் பிரிவு அதிகாரி குமார் விவரம் தந்தார்: ''எங்க நிறுவனத்தின் நிர்வாகிகளில் ஒருவரான ஸ்ரீராமச்சந்திரா, வடிவமைப்பு யோசனை செய்வார். அதன்படி நாங்கள் மிகவும் எச்சரிக்கையுடனும், ஈடுபாட்டுடனும் கேக் தயாரிக்கிறோம். முதலில் மேல் பகுதியை — சர்க்கரையால் ஆனது — தயாரித்துக் கொள்கிறோம். இந்த மேல் பகுதி' மட்டும் ஐந்து கிலோ எடை. பூக்களை வடிவமைத்து, வண்ணம் கொடுத்தால் சில நிமிடங்களில் அப்படியே உறைந்து கெட்டிப்பட்டு விடும். இந்த வடிவமைப்பைப் பாதுகாப்பாக வைத்து விடுவோம். இதைச் செய்து முடிக்க பத்து நாட்கள் ஆகும். அடுத்தது, அடிப்பாகம் — ப்ளம் கேக் — 15 கிலோ எடை. இதை மிகுந்த பொறுப்புடன் தயாரிக்கிறோம். கண்காட்சிக்கு முந்தின நாள்தான் bake செய்கிறோம். குறைந்தபட்சம் ஒன்றரை மாதம் வரை கெட்டுப் போகாமல் இருக்கத் தேவையான 'ப்ரசர்வேடிவ்' பயன்படுத்துகிறோம்...''

கேக் கண்காட்சி நடப்பது இது இருபதாம் ஆண்டு. பெங்களூரில் இதை விட பிரம்மாண்டமாக இருக்குமாம். இந்த வருடம் மைசூர் மகாராஜா அரண்மனையை கேக் வடிவமாக அங்கே வைத்திருக்கிறார்கள். 15 அடி நீளம், ஆறு அடி அகலம், ஆறு அடி உயரம்!

''தயாரிப்பில் பயன்படுவன எல்லாமே இந்தியப் பொருட்கள்தான். அயல்நாட்டுச் சரக்கு ஏதும் இல்லை. வண்ணக் கலவை தான் ரகசியம். அதைக் குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து மிருதுவான வண்ணமாகக் கண்ணுக்குக் குளிர்ச்சியாகச் செய்கிறார்கள். அடர்த்தியான வண்ணங்கள் நாவில் நீர் சொட்ட வைக்காதாம்.

விலை குறிப்பிடப்படாவிட்டாலும் பிரம்மாண்ட கேக் ஒன்றின் மதிப்பு 1500 ரூபாய்!

இந்த கிறிஸ்துமஸ் சீசனில் (20.12.90 முதல் 1.1.91 வரை) சுமார் ஒரு லட்சம் பார்வையாளர்கள் சென்னையில் இந்தக் கண்காட்சியைப் பார்க்க வந்தார்கள். ஆனால் உள்ளே ஒரு ச இருக்க வேண்டுமே! ஜனூ~ம்.

எத்தனையோ சிறுவர்கள் வந்தார்கள். துறுதுறுக்கும் தங்கள் கைகளை அடக்கிக் கொள்வதைப் பார்க்கவே வியப்பாக இருந்தது.

— பிரபு சங்கர்

வண்ணப்படம்: உத்ரா

பிறந்த நாள்

''உமா இந்த மேட்டரைக் கொஞ்சம் டைப் பண்ணிட்டு வர்றியா?'' என்று டைப்பிஸ்ட் உமாவை வழக்கம் போல் கூப்பிட்டார் மானேஜர்.

வெளியிலிருந்த ஹெட்கிளார்க், ''சார், அந்தப் பொண்ணுக்கு இன்னைக்குப் பிறந்த நாள். அதனால் அரைநாள் லீவு போட்டிருக்கு!'' என்றார்.

''நான் மறந்தே போயிட்டேன்'' என்று தலையில் அடித்துக் கொண்டார் மானேஜர்.

ஹெட்கிளார்க் 'பிறந்த நாள்' என்று சொன்னதும் கிளார்க் பன்னீர் செல்வம் கொதிப்படைந்தான்.



போட்டிக் கதை — 15
(அறிமுக எழுத்தாளர்)

''பிறந்த நாளாம்; பிறந்த நாள்! பெரிய பிறந்த நாள். இந்தக் கேடுகெட்ட உலகத்தில் பிறந்ததுக்காக வருத்தப்படறதை விட்டுட்டு, பிறந்த நாள் விழாவாம்; விழா! இந்தப் பாழாய்ப் போன உலகில் பிறந்த ஒரு நபராவது நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாரா? இல்லை. இல்லவே இல்லை.'' என்று மனத்துக்குள்ளேயே ஒரு வசவு மழையைப் பொழிந்து விட்டுப் பென்சிலால் காதைக் குடைய ஆரம்பித்தான்.

வீரமன்

பன்னீர் செல்வத்தின் வயது இருபத்தாறு. அவனுடைய பெற்றோர்கள் அவனுக்குப் பத்து வயதாகும்போதே இந்த பூலோக வாழ்க்கையை முடித்துக் கொண்டனர். அவனுடைய மாமாதான் அவனைப் படிக்க வைத்து ஆளாக்கினார். மாமா வீட்டில் அவன் பிறந்த நாளை யாரும் கொண்டாடியதேயில்லை.

எப்படியோ படித்து முடித்து வேலையிலும் சேர்ந்து விட்டான். இப்போது மாமா குடும்பத்தைப் பிரிந்து தனியாக ஒரு வாடகை வீட்டில் குடி இருக்கிறான். தன் மாமாவுக்குத் தன்னை வளர்த்து ஆளாக்கிய

நன்றிக் கடனுக்காக மாதா, மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை அனுப்பிக் கொண்டிருக்கிறான்.

சாக்லேட் நிறைந்த டப்பாவுடன் உள்ளே நுழைந்தாள் உமா.

உமாவுக்கு இது பத்தொன்பதாவது பிறந்த நாள்.

பிறந்த நாளை முன்னிட்டு அளவுக்கு அதிகமாக அலங்காரம் செய்து கொண்டு வந்திருந்தாள்.

பால் நிலவு முகத்தில் வட்டமான ஜிகினாப் பொட்டு மினுமினுத்தது. கண்ணைப் பறிக்கும் கவரிங் நகைகள் கழுத்தில் பளபளத்தன. ஆறடிக் கூந்தல், அழகான பின்னலாக மாறி அவளுடைய அழகை மிகைப்படுத்திக் காட்டிக் கொண்டிருந்தது.

அவள் உடுத்தியிருந்த சந்தன நிறப் புடைவையின் முந்தானையை மெல்லிடையில் செருகிக் கொண்டே பன்னீர் செல்வத்தின் மேசை அருகே வந்து, ''இன்னைக்கு என்னோட பிறந்த நாள். ஸ்வீட் எடுத்துக் கோங்க!'' என்று நீட்டினாள்.

''முதல்ல மானேஜருக்குக் கொடுங்க!'' என்றான் பன்னீர் செல்வம்.

''அது எனக்குத் தெரியும்; முதல்ல நீங்க எடுத்துக்கோங்க!'' என்றாள் உமா.

''சரி! சரி!'' என்று ஒரு சாக்லேட்டை எடுத்துக் கொண்டான்.

''ஒரு நன்றி சொன்னாக் குறைஞ்சா



முதல் சினிமா விளம்பரம்

அக்டோபர் 22, 1931 'சுதேச மித்திரன்' நாளிதழில் முதல் பேசும் பட விளம்பரம்:

**1931 ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி சனி முதல் "
தமிழ், தெலுங்கு பாஷையில் தயாரிக்கப் பட்ட முதல் பேசும் படக் காட்சியைக் கேளுங்கள்.**

**மிஸ். டி. பி. ராஜலக்ஷ்மி
நடிக்கும்
"காளிதாஸ்"**

முழுவதும் பேச்சு, பாடல், நடனம் நிறைந்த காட்சி.
இம்பீரியல் மூவிடோன் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது.
உயர்ந்த கீர்த்தனங்கள், தெளிவான பாடல்கள், கொறத்தி நாட்டியங்கள்.
பாதி செஜட் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஆதாரம்: தமிழ் சினிமாவின் கதை.

தகவல்: சிவரஞ்சன்.

போயிடுவீங்க!'' என்று உதட்டைப் பிதுக்கிக் கொண்டே அங்கிருந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கினாள் உமா.

பன்னீர் செல்வத்தின் மேல் மட்டும் என்ன அவ்வளவு அக்கறை உமாவுக்கு.

அவர் மேல் அவளுக்குக் காதல்.

பன்னீர் செல்வத்திற்கு அவள் மேல் காதல் உண்டா? உண்டு. ஆனால் அவளுடைய அநாவசியமான நாகரிகம் மட்டும் பிடிப்பதில்லை.

அனைவருக்கும் இனிப்பு வழங்கிய உமா, கடைசியில், பன்னீர் செல்வத்தின் மேசையருகே வந்தாள். தனக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லவில்லை என்ற கோபத்தில் அவன் மேசையைத் தட்டினாள்

''கோபம் தீந்துடுச்சா?'' என்று மாயச் சிரிப்பு சிரித்தான் அவன்.

''தீராது; தீரவே தீராது. அப்பா உங்களை நாளைக்கு வரச் சொன்னார்!'' என்று மேலே பார்த்தவாறு சொல்லி விட்டுத் தன் சீட்டுக்குச் சென்றாள்.

''வருகிறேன் தாயே!'' என்றான் அவன் மிகவும் பவ்யமாக!

''**வா**ங்க பன்னீர்!'' என்று கை கூப்பினார் உமாவின் தந்தை முத்துவேலு.

''வணக்கங்க!'' என்றான் பன்னீர் செல்வம்.

''உட்காருங்க!''

''என்ன விஷயத்துக்காக வரச் சொன்னீங்க?''

''எனக்கும் வயசு ஆயிப் போச்சு. உமாவுக்கும் வயசு ஏறிக்கிட்டே வருது. நீங்க பாட்டுக்குப் பேசாம இருந்தா எப்படி? எப்பக் கல்யாணம் பண்ணலாம்னு ஐடியா?''

''நீங்க இஷ்டப்பட்டா எப்ப வேணும்னாலும் வெச்சிக்கலாம். இருந்தாலும் என்னை வளர்த்த கடனுக்காக எங்க மாமாவை ஒரு வார்த்தைக் கேட்டுடறது நல்லதுன்னு நினைக்கிறேன்.''

''சந்தோஷமாப் போய்க் கேட்டுட்டு வாங்க; அவர் வேணாம்னா சொல்லிடப் போறார்...''

பன்னீர் செல்வத்தின் கவனத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காக, வலது காலைத் தரையில் தட்டி, கொலுசு ஓசையை உண்டாக்கினாள் கதவோரமிருந்த உமா.

மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார் முத்துவேலு.

''கல்யாணம் பண்றதுக்குக் கவர்ன்மெண்ட்ல ஐயாயிரம் தர்றாங்களாமே! கேள்விப்பட்டீங்களா?''

''ஆமாங்க, நாங்கூட பேப்பர்ல பார்த்தேன்.''

''அந்தப் பணம் வாங்க என்னென்ன பண்ணணும்னு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது. தெரிஞ்சாச் சொல்லுங்க!''

''முதல்ல பொண்ணும், பையனும் மேஜர் தாங்கிறதுக்கு வி. ஓ. கிட்டே சர்ட்டிபிகேட் வாங்கணும். இரண்டு பேரோட பாஸ் போர்ட் சைஸ் போட்டோவை ஒட்டணும். கல்யாணப் பத்திரிகை அடிச்சு அது கூட வச்சு அனுப்பணும்.''

''அதெல்லாம் நமக்கு எதுக்குங்க?'' என்றான் பன்னீர்செல்வம் உமாவை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே.

''உங்க பாஸ்போர்ட் சைஸ் போட்டோ இருந்தாக் கொடுங்களேன்!''

''எதுக்குங்க?'' என்றான் பன்னீர் செல்வம், மின்சாரம் தாக்கியது போல்.

''உங்க கல்யாணத்துக்குப் பணம் வாங்குறதுக்குத்தான்.''

பன்னீர் செல்வம் நிமிர்ந்து உட்கார்ந்தான். கைகளைப் பிசைந்து கொண்டான்.

''இந்தத் திட்டம் ஏழைப் பொண்ணுங்களுக்காகப் போட்டது. வசதி இல்லாத பெற்றோர்களுடைய கஷ்டத்தைத் துடைக்கப் போட்டது. வசதியான நீங்களெல்லாம் இதைப் பயன்படுத்திக்கக் கூடாது.''

''நமக்கு வேண்டியது பணம். அது எந்த வழியில் வந்தால் என்ன? நீங்களா வாங்குறீங்க. நான்தானே வாங்கறேன். போட்டோவைக் கொடுங்க...''

''முடியாதுங்க. எக் காரணத்தை முன்

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!

ஜோடியாகச் சிங்கப்பூர் சென்று வந்து கல்கிக்குப் பேட்டி தர இதோ ஒரு சந்தர்ப்பம்: கீழேயுள்ள கூப்பனில் அட்டகாசமான ஜோக் அல்லது சிரிப்புத் துணுக்கு எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் துணுக்குகளுக்குப் பரிசு உண்டு. தவிர, அடுத்த ஆகஸ்டுக்குள் யாருடைய ஜோக்/துணுக்கு அதிக அளவில் பிரசுரமாகிறதோ அவருக்கு இலவச சிங்கப்பூர்ப் பயணம் காத்திருக்கிறது!

எச்சரிக்கை! பிரசுரமாகும் ஜோக் 'காப்பி' யடிக்கப்பட்டது என்று தெரிய வந்தால் அதனை எழுதிய நபர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்!

முடிவு தேதி: 14. 1. 91

ஜோக்/துணுக்கு:

என் பெயர்:.................................

விலாசம்:.................................

....

....

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

50

விட்டும் போட்டோவை மட்டும் தர முடியாது'' என்றான் பன்னீர் செல்வம்.

''அப்ப நீங்க எம் பொண்ணை மறந்திட வேண்டியதுதான். வேறே வழி இல்ல...'' என்றார் முத்துவேலு உறுதியுடன்.

இதைக் கேட்டவுடன் உமா அதிர்ச்சி அடைந்தாள்.

''உண்மையாத்தான் சொல்றீங்களா?'' என்றான் பன்னீர் செல்வம்.

''ஆமாம். இந்த வயது, சம்பாதிக்கற வயது. எவ்வளவுக்கு எவ்வளவு சம்பாதிக்க முடியுமோ, அவ்வளவுக்கு அவ்வளவு சம்பாதிக்கணும். ஆனால் நீங்களோ தத்துவம் பேசிக்கிட்டிருக்கீங்க. வாழ்க்கைக்கு முதல் தேவை பணம்தான். நீங்கள் அதை வெறுத்து ஒதுக்குகிறீங்க. உங்களை நம்பி எம் பொண்ணைத் தர முடியாது!''

''எதுக்கும் உமாவை ஒரு வார்த்தை கேட்டுடறது நல்லது...'' என்றான் பன்னீர் செல்வம்.

''அவளை எப்படி மாத்தறதுன்னு எனக்குத் தெரியும். நீங்க போயிட்டு வாங்க!'' என்றார் முத்துவேலு முகத்திலடித்தாற் போல்.

''பணமே வாழ்க்கைன்னு நினைக்கிறீங்க நீங்க. பணமும் வாழ்க்கைக்குத் தேவைன்னு நினைக்கிறேன் நான். இவ்வளவு சொத்திருந்தும் அரசாங்கத்திடம் பொய்க் காரணம் காட்டிப் பணம் வாங்கற உங்களுடைய ஈனமான செயலுக்கெல்லாம் நான் ஒத்து வர மாட்டேன். என்னை மன்னிச்சுடுங்க. உங்கள் மகளை என்னை மறந்து விடச் சொல்லுங்க'' என்று எழுந்தான் பன்னீர் செல்வம்.

உமா அனலில் பட்ட புழுவாய்த் துடித்தாள். தந்தையா? பன்னீர் செல்வமா? என்று அவள் மனம் துடித்தது. அவருக்கு அவருடைய கொள்கைகளே முக்கியம். என் தந்தைக்குப் பணம் முக்கியம். நான் யார் பக்கம் சாய்வேன். என் தந்தைக்கு இதயக் கோளாறு ஆயிற்றே. அவர் விருப்பப்படி நான் நடக்காவிட்டால் அய்யோ...'' என்று மனத்துக்குள்ளேயே போராடினாள்.

தன் தந்தையின் கட்டளைப்படி வேலையை ராஜினாமா செய்தாள் உமா. அவளுக்குக் கல்யாண ஏற்பாடுகள் நடக்க ஆரம்பித்தன. தன் தந்தைக்காகத் தன்னுடைய காதலைத் தியாகம் செய்தாள்.

திருமணம் வெகு விரைவில் நடந்தேறியது. உமாவின் கணவனும் அவளுடைய தந்தையும் சேர்ந்து ஒரு பெரிய மரக்கடை வைத்தனர்.

பன்னீர் செல்வமோ உமாவை மறக்க இராமகிருஷ்ணர், விவேகானந்தர், புத்தர், ஏசு போன்றவர்களின் போதனைகளைப்

படிக்க ஆரம்பித்தான்.

இரண்டு வருட காலம் உருண்டோடியது.. இன்னமும் அதே ஆபீஸில் வேலை செய்து கொண்டிருந்தான் அவன். ஒரு சிறிய மாற்றம். டைப்பிஸ்ட் உமா போனதால் அந்த வேலை அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவனுடைய வேலைக்கு வேறு ஆள் அமர்த்தப்பட்டார்.

திடீரென்று உமாவுடைய தந்தையும், கணவனும் வைத்திருந்த மரக்கடை தீப்பிடித்து எரிந்து சாம்பலாகியது. அந்த அதிர்ச்சி தாங்க முடியாமல் மாரடைப்பால் இறந்து போனார் முத்துவேலு. அவளுடைய கணவன் கடன் தொல்லையால் அவதிப்பட்டான். வயிற்றுக்கே போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வறுமையைத் துடைக்க மீண்டும் வேலை தேட ஆரம்பித்தாள் உமா. எங்கு வேலை தேடியும் கிடைக்காததால் கடைசியாக, தான் முன்பு வேலை செய்த இடத்திற்கே போனாள்.

பன்னீர் செல்வத்தின் முகத்தில் எப்படி விழிப்பது என்று பயந்து கொண்டுதான் உள்ளே நுழைந்தாள். அவளைப் பார்த்ததும் தலையைக் குனிந்து கொண்டான் பன்னீர் செல்வம்.

தனக்கு வேலை போட்டுத் தரும்படி மானேஜரைக் கேட்ட போது, "வேலை காலி இல்லையே" என்று அவரும் வருத்தப்பட்டுச் சொன்னார். ஏமாற்றத்தோடு சென்றாள் உமா.

உமாவின் வறுமைச் சூழ்நிலையையும், அவளுக்கு வேலை மறுக்கப்பட்டதையும் அறிந்து துடிதுடித்துப் போனான் பன்னீர் செல்வம். அவனுடைய மூளை சுறுசுறுப்பாக இயங்கியது.

இரண்டு நாட்கள் கழிந்தன.

உமாவை வேலைக்கு வரச் சொல்லி ஆர்டர் வந்தது. உமா வேலையில் சேர்ந்தாள். ஆனால் அங்கு பன்னீர் செல்வம் இல்லாததால் அவளுடைய மனம் பலவிதமாகக் குழம்பியது.

பின்புதான் தெரிந்து கொண்டாள், அவளுக்காகத் தன் வேலையை ராஜினாமா செய்து விட்டு, வேறு வேலை தேடிப் பன்னீர் செல்வம் தொலை தூரம் சென்றிருக்கும் விஷயத்தை.

'எவ்வளவு உயர்ந்த மனிதர்!' என்று அவள் மனம் அவனை வழிபட்டது.

"இன்னைக்கு உனக்குப் பிறந்த நாள் ஆச்சே! எங்கம்மா ஸ்வீட்?" என்றார் ஹெட்கிளார்க்.

'பிறந்தநாளாம் பிறந்த நாள். நான் எதற்காகப் பிறந்தேன். இந்த உலகில் பிறப்பதே பாவம்...' என்று வெம்பியது அவள் மனம்.

மாதம் ஒரு தொகுதி:

சிவகங்கைத் தொகுதியில் என்னதான் நடக்கிறது?

எம்.எல்.ஏ. மனோகரன் இளைஞர். ஒரு வக்கீல் மட்டுமல்ல; முழு நேர சமூக சேவகர் என்றும் இவரைப் பற்றி அறிமுகம் செய்கிறது, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை வெளியிட்டுள்ள "யார்—எவர்?" என்னும் புத்தகம். எனவே, எம்.எல்.ஏ. பதவி, இவரது கூடுதலான சமூக சேவைக்கு நிச்சயம் உதவும் என்று எதிர்பார்க்கலாம்.

கல்கியின் 'மாதம் ஒரு தொகுதி' என்ற திட்டத்தின் கீழ் நடந்த, பன்னிரண்டாவது குலுக்கலில் சிக்கிய தொகுதி, மனோகரனின் சிவகங்கைத் தொகுதி தான்!

இந்தத் தொகுதியில், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட இ. காங்கிரஸ் வேட்பாளரை விட, 1,768 வாக்குகள் அதிகம் பெற்று, வெற்றிக்கனியைத் தட்டிக் கொண்டு போனவர், தி.மு.க.வைச் சேர்ந்த பா. மனோகரன்.


தமது தொகுதி மக்களுக்கு இவர் இது வரை என்னென்ன செய்திருக்கிறார்? தமது வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறார்?

சிவகங்கைத் தொகுதியிலுள்ள மக்கள் அனைவரும், தங்கள் தொகுதி எம்.எல்.ஏ.வான பா. மனோகரன் ஆற்றிய பணிகள் — ஆற்ற வேண்டிய பணிகள் ஆகியவற்றோடு, அவரது பணிகளின் குறைநிறைகளைப் பற்றியும் எங்களுக்கு எழுதியனுப்புங்கள். நாங்கள் நேரடியாக வந்து அலசிப் பார்த்து, உங்கள் சார்பாக அவரிடம் கேள்விகளும் கேட்கிறோம். கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் மிக ரசமான கட்டுரையைக் கல்கியில் எதிர்பார்க்கலாம்.

உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 19.1.91.

'மாதம் ஒரு தொகுதி' என்று உறையின் மேல் குறிப்பிட்டு உடனடியாக எழுதியனுப்புங்கள்.

— ஆசிரியர்.



நான் தாசில்தாராகப் பதவியேற்று மூன்று மாதங்கள் கூட ஆகியிருக்காது. எப்பொழுதும் போல் 'சேம்பரில்' தபால் பார்த்துக்கொண்டிருந்த பொழுது பதிவறையிலிருந்து அலுவலக உதவியாளர் திராவிடமணி ஓடி வந்தார்.

"ஐயா.. ரெக்கார்ட் ரூம்ல... பெரிய நல்ல பாம்பு ஒண்ணு புகுந்திட்டுது ஐயா! இப்பத்தான் பார்த்தேன்.."

"அப்படியா... ரெக்கார்ட் ரூமைப் பூட்டிட்ட இல்லே? யாரையும் உள்ளே போகாமல் பார்த்துக்க... அப்படியே பாம்பு பிடிக்கறவங்க யாராவது இருந்தால், உடனே அழைச்சிட்டு வரச் சொல்லு..."

திராவிடமணி தயங்கினார்.

"பாம்பு பிடிக்கிறவங்களைக் கூப்பிட்டா நூறு இரு நூறுன்னு கேப்பாங்களே...."

"ஏன்! கன்டின்ஜன்சிலே பணம் இருக்குமே... ஏ 3யைக் கூப்பிடு..."

ஏ 3 எழுத்தர் மோகன கிருஷ்ணன் உள்ளே வந்தார்.

"கன்டின்ஜன்சிலே எவ்வளவு பணம் இருக்கு? ரெக்கார்டு ரூம்ல பாம்பு புகுந்துட்டுதாம். யாரையாவது கூப்பிட்டுப் பிடிக்கச் சொல்லணும்...."

ஃபைலுக்குள் புகுந்த பாம்பு!



"போனமாசத்தோட அலாட்மெண்ட் சரியாப் போச்சு சார். அதுவுமில்லாம பாம்பு பிடிக்கிறதுக்கு எல்லாம் பர்மிஷன் இல்லாம செலவு பண்ண முடியாது சார்..."

"அப்படியா... அப்ப பர்மிஷன் கேட்டு ஓசிஎஃப்சி தயார் பண்ணிட்டு வாங்க..."

சாதாரணமாகச் சொல்லிவிட்டு, அது ஏற்படுத்தப் போகும் விபரீதங்களை அறியாமல், மற்ற வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தேன்.

'பர்மிஷன் கேட்டுக் கடிதம் எழுதி ஒரு வாரம் கழித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஒரு நீண்ட கடிதம் வந்தது.

நான் அனுப்பிய முன்மொழிவு முழுமையாக இல்லை என்றும், பாம்பைப் பார்த்த திராவிடமணியிடமிருந்து வாக்குமூலம் பெற்று அனுப்பப்படவில்லை எனவும், பாம்பு பிடிப்பதற்கு மூன்று நபர்களிடம் கொட்டேஷன்கள் பெற்று அனுப்பப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இவ்வாறு பாம்பு பிடித்தல் தொடர்பாக முன் கோப்பு ஏதேனும் இருப்பின் அதனை அனுப்புமாறும் அதில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

கடிதத்தில் கோரியிருந்தவாறு எல்லா விஷயங்களும் தயார் செய்யப்பட்டன. ரெக்கார்ட் அறை, பாம்பு பயத்தின் காரணமாய்ப் பூட்டப்பட்டு விட்டதால் முன் கோப்பு எதையும் தேட இயலவில்லை. நல்லவேளையாகப் பத்து வருடங்களுக்கு முன்பு குரங்கு ஒன்று அலுவலகத்தில் புகுந்து, பின்னர் அது பிடிக்கப்பட்டது தொடர்பான ஃபைல் ஒன்று ஓர் எழுத்தரிடமிருந்தது. அதனையும் இணைத்து அனுப்பி

வைத்தோம்.

இரண்டு வாரங்கள் கழித்து வந்த பதில் மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக அமைந்தது. குரங்கு பிடிக்கப் பத்து வருடங்கள் முன்பு ஐம்பது ரூபாய்தான் செலவழிக்கப் பட்டுள்ளது என்றும் ஆனால் தற்பொழுது பாம்பு பிடிக்கரூ 150 ஏன்? என்றும் அதில் வினவப்பட்டிருந்தது!

இவ்வாறு வந்த கடிதம் எனக்கு எரிச்சல் ஊட்டவே, பத்து வருடங்கள் முன்பு விலைவாசி வேறு என்பதையும், மேலும் பாம்பு பிடித்தல் வேறு, குரங்கு பிடித்தல் வேறு என்பதையும் விளக்கி, ரெக்கார்ட் அறை பூட்டப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகிவிட்டதால் உடன் அனுமதி அளிக்கக் கோரியும், பதில் எழுதினேன்.

ஆனால் அவர்கள் சளைப்பதாக இல்லை. குரங்கு பிடித்தல் வேறு, பாம்பு பிடித்தல் வேறு என்று உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். இது தொடர்பான அரசாணை ஏதும் வெளியிட்டிருப்பின், அதன் நகலினை அனுப்பக் கோரி அடுத்த கடிதம் வந்தது.

அவ்வாறான அரசாணை ஏதும் வெளியிடப்படவில்லை. ஆனால் குரங்கு வேறு, பாம்பு வேறு என்பது விசாரணையிலிருந்து தெளிவாகிறது. இது தொடர்பாகக் குரங்



கோ. வீ. அரங்கநாதன்

காட்டிகள் சிலர், பாம்புப் பிடாரன்கள் சிலர், மற்றும் பொது மக்களில் சிலர் ஆகியோரிடம் விசாரணை செய்யப்பட்டது. அந்த விசாரணை ஆவணங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன' என்ற எனது நீண்ட கடிதத்துக்கு மூன்று நாட்களில் பதில் கிடைத்தது.

'பதிவறையில் புகுந்த பாம்பு ஒன்றினைப் பிடிக்க ரூ 150 அனுமதிக்கப்படுகிறது. பாம்பு பிடித்தது தொடர்பான அறிக்கையை உடன் அனுப்புக' என்று ஆணை வழங்கப் பட்டது.

நான் உடனே சுறுசுறுப்பானேன். பாம்பு பிடாரனை உடனே வரவழைத்து, ரெக்கார்ட் ரூமுக்குள் அனுப்பினேன். ரெக்கார்ட் ரூம் முழுவதும் காலி செய்யப் பட்டு, ஆறு மணி நேரம் வேட்டையாடப்பட்டது. ஆனால் பாம்பு எதுவும் கிடைக்கவில்லை. எனவே பாம்புப் பிடாரனிடம் பேசிய தொகையை வழங்கிவிட்டு, அதற்கான கையொப்பத்தையும் அவனிடம் பெற்று, 'ஆறு மணி நேரம் தேடியும் பாம்பு எதுவும் இல்லை' என்ற அறிக்கையுடன் சேர்த்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தேன். ஒரு வழியாகப் பிரச்னை தீர்ந்தது என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். அந்த நிம்மதி இரண்டு நாட்கள் கூட நீடிக்கவில்லை.

'உங்களுடைய அறிக்கை பொறுப்பற்ற முறையில் உள்ளது என்றும் பாம்பே பிடிக்காத பொழுது எவ்வாறு ரூ 150 செலவழிக்கப்பட்டது என்பதற்குத் தகுந்த முகாந்திரம் கூற வேண்டும் எனவும், பாம்பைப் பார்த்ததாகக் கூறிய திராவிடமணி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் வலியுறுத்திய மேலிடத்து கடிதம், என் நிம்மதியைக் கெடுத்தது.

இந்தப் பிரச்னையிலிருந்து எப்படி மீளலாம் என நான் குழம்பிக் கொண்டிருந்த பொழுதுதான், மோகன கிருஷ்ணன் அந்த ஐடியாவைக் கூறினார். உடனே பாம்புப் பிடாரனுக்கு ஆள் அனுப்பப்

பட்டது. மோகனகிருஷ்ணனின் யோசனைப் படி பாம்புப் பிடாரனின் கையில் பாம்பு ஒன்றைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி, அருகில் அலுவலக ஊழியர்கள் நின்று கொள்ள, புகைப்படம் ஒன்று எடுத்துக் கொள்ள முடிவானது. பாம்புப் பிடாரன் மகிழ்ச்சியுடன், "இதோ போய் வீட்ல யிருந்து ஒரு பாம்பை எடுத்துட்டு வந்துர் றேன்" என்று சொல்லி விட்டுப் போனான். புகைப்படக்காரரும் வரவழைக்கப் பட்டார். பாம்புப் பிடாரன் ஃபோட்டோ என்றதும் தனது சகோதரனையும் அழைத்து வந்து விட, அவர்கள் இருவரும் ஆளுக்கொரு பாம்பைக் கையில் பிடித்துக் கொண்டு நடுவில் நிற்க, அலுவலக ஊழியர்கள் சுற்றி நிற்க, புகைப்படம் எடுக்கப்பட்டது.

புகைப்படத்தின் பிரதி கிடைத்தவுடன் மாவட்ட ஆட்சியருக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் பதிவறை சோதனையிடப் பட்டது என்றும், அப்பொழுது இரண்டு பாம்புகள் பிடிக்கப்பட்டன எனவும், பிடிக் கப்பட்ட பாம்புகளின் புகைப்படம் இத் துடன் அனுப்பப்படுகிறது எனவும் இம் முறை அறிக்கை அனுப்பப்பட்டது. ஒரு வழியாக இந்த பிரச்னையிலிருந்து தீர்வு கண்ட மகிழ்ச்சியில் அடுத்த இரண்டு நாட் களை நிம்மதியாகக் கழித்தேன்.

மூன்றாம் நாள் காலை பதிவுத் தபாலில் வந்த அந்தக் கடிதத்தைப் பிரித் தேன்: 'பதிவறையில் இருந்த ஒரு பாம்பைப் பிடிக்க ரூ 150 கோரிய நீங்கள், அதே தொகைக்கு இப்போது இரண்டு பாம்பு களைப் பிடித்துள்ளீர்கள். எனவே, அப் பணத்தில் ஒரு பகுதியைக் கையாடும் உள் நோக்கத்துடன் செயல்பட்டிருக்கிறீர்கள் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது. உங்கள் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது?' என விளக்கம் கோரியிருந்த கடி தத்தைப் படித்துவிட்டு, நான் மயக்கமுற்றுச் சாய....

அலுவலக ஊழியர்கள் என்னை நோக்கி ஓடி வருவது மங்கலாகத் தெரிந்தது.





சிவகாமியின் சபதம்

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

மர்ம ஓலை

இராஜாதிராஜனான புலிகேசி மன்னன் ஒல்லியாக உயர்ந்த ஆகிருதியும், வற்றி உலர்ந்து எலும்புகள் தெரிந்த தேகமும் உடையவனாக இருந்தான். அவனுடைய முகத் தோற்றம் இரும்பையொத்த நெஞ்சத்தையும், தயை தாட்சண்யம் இல்லாத கடூர சுபாவத்தையும் பிரதிபலித்தது. கோவைப் பழம் போல் சிவந்து அனல் கக்கிய அவனுடைய கண்களைப் பார்க்கும்போது, கழுகின் கண்களைப் போன்று தூரதிருஷ்டியுடைய கண்கள் அவை என்று தோன்றியது.

புலிகேசியின் முகத்தைப் பார்த்ததும் நமக்கு ஒரு கணம் திகைப்பு ஏற்படுகிறது. 'ஆ! இந்த முகத்தை இதற்கு முன்னால் எங்கேயாவது பார்த்திருக்கிறோமா என்ன?' என்று வியப்புறுகிறோம். 'கம்பீரக் களையுடன் கடூரம் கலந்த இந்த முகத்தையும் அறிவொளியுடன் கோபக் கனலைக் கலந்து வீசும் இந்தக் கண்களையும் வேறு எங்கேயும் பார்த்திருக்க முடியாது' என்று தீர்மானிக்கிறோம். 'இத்தகைய முகம் வேறு யாருக்காவது இருப்பதென்றால், அது யமதர்மராஜனாகத்தான் இருக்கவேண்டும்!' என்ற முடிவுக்கு வருகிறோம்.

புலிகேசியின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பரஞ்சோதியும் அதே முடிவுக்குத்தான் வந்தான்.

பரஞ்சோதியைப் பிடித்துக் கொண்டு வந்த வீரர்களின் தலைவன் சத்யாச்ரய புலிகேசிக்கு வணக்கம் செலுத்தி விட்டு, வடபெண்ணை நதிக்கரையிலுள்ள பௌத்த மடத் தலைவர் இந்த வாலிபனைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போகச் சொன்னதிலிருந்து நடந்தவற்றை விவரமாகக் கூறிவந்தான்.

அவன் சொல்லிமுடிப்பதற்குள்ளே புலிகேசி பொறுமை இழந்தவனாய், "அதெல்லாம் இருக்கட்டும்; இவன் யார்? எதற்காக இவனைக் கொண்டுவந்தீர்கள்?" என்று கோபக்குரலில் கர்ஜித்தான்.

வீரர் தலைவன் நடுங்கிய குரலில், "நாகநந்தி பிக்ஷுவிடமிருந்து சத்யாச்ரயருக்கு ஓலை கொண்டுவந்ததாக இந்த வாலிபன் சொல்லுகிறான். இதோ அந்த ஓலை!" என்று கூறி, பரஞ்சோதியிடமிருந்து வழியில் கைப்பற்றிய ஓலையைப் புலிகேசியிடம் சமர்ப்பித்தான்.

புலிகேசி ஓலையைப் பிரித்து, கவனமாகப் படித்தான். அப்போது அவனுடைய முகத்தில் வியப்புக்கும் குழப்பத்துக்கும் அறிகுறிகள் ஏற்பட்டன. ஒரு தடவைக்கு இரண்டு தடவை படித்த பிறகும் தெளிவு ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

அவன் ஓலையைப் படித்த போது, அவனுக்கு எதிரில் இருந்த படைத் தலைவர்கள் அவனுடைய முகத்தையே பார்த்த வண்ணம் இருந்தனர்.

பரஞ்சோதியோ சொல்லமுடியாத மனக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தான். அவன் நாகநந்தியின் ஓலையை எடுத்துக்கொண்டு கிளம்பியபோது, இம்மாதிரி பகைவர்களிடம் சிறைப்பட்டு எதிரி அரசன் முன்னால் நிற்க நேரிடுமென்று நினைக்கவே இல்லை. அந்த எதிரியின் பாசறையில் வஜ்ரபாஹுவைச் சந்தித்ததும், அவன் போகிற போக்கில், "சத்யாச்ரய புலிகேசியிடம் உன்

மையை உள்ளபடி சொல்லு!'' என்று கூறியதும் அவனுடைய மனக் குழப்பத்தை அதிகமாக்கின.

இன்னும் நாகநந்தி தன்னிடம் ஓலையைக் கொடுத்தபோது கூறிய வார்த்தைகள் நினைவு வந்தபோது அவன் தலையே கிறுகிறுக்கும் போல் ஆகிவிட்டது. 'இந்த ஓலையை நீ சத்யாச்ரயரிடமே கொடுக்க வேண்டும். வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாது. சத்யாச்ரயரை ஒருவேளை நீ வழியிலேயே சந்தித்தாலும் சந்திக்கலாம். எப்போது எந்தக் கோலத்தில் அவர் இருப்பார் என்று சொல்லமுடியாது. அவரை எந்தக் கோலத்தில் பார்த்தாலும் நீ அதிசயப் படாதே!' — இவ்விதம் நாகநந்தி பிக்ஷு கூறியது அவனுக்கு நினைவு வந்தது. 'நாக நந்தி கூறிய சத்யாச்ரயர் இந்த வாதாபி சக்கரவர்த்தி புலிகேசியா? நாம் கொண்டு வந்த ஓலையில் உள்ள விஷயம் அஜந்தா வர்ணக் கலவை சம்பந்தமானதுதானா? அல்லது, ஒரு பெரிய மர்மமான சூழ்ச்சியில் நாம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோமா?' என்று பரஞ்சோதி எண்ணிய போது, அவன் அறிவு குழம்பியது.

புலிகேசி சட்டென்று தலையைத் தூக்கி, எதிரே இருந்த படைத் தலைவர்களைப் பார்த்து, ''இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா?'' என்று கேட்டான். உடனே, ''உங்களால் ஒரு நாளும் ஊகம் செய்ய முடியாது'' என்று தானே மறுமொழியும் கூறிவிட்டு, இடிஇடியென்று சிரித்தான்.

இடி முழக்கம் நிற்பது போலவே சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு, காவலர்களுக்கு நடுவில் கட்டுண்டு நின்ற பரஞ்சோதியை உற்று நோக்கினான். புலிகேசியினுடைய கழுகுக் கண்களின் கூரிய பார்வை பரஞ்சோதியின் நெஞ்சையே ஊடுருவுவது போலிருந்தது.

புலிகேசி அவனைப் பார்த்துக் கடுமையான குரலில், ''பிள்ளாய்! உண்மையைச் சொல்! நீ யார்! எங்கு வந்தாய்? இந்த ஓலையைக் கொடுத்தது யார்? இதிலுள்ள விஷயம் இன்னதென்று உனக்குத் தெரியுமா?'' என்று சரமாரியாகக் கேள்விகளைப் போட்டான். அந்தக் கேள்விகளில் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாதவனாய், பரஞ்சோதி மௌனம் சாதித்த வண்ணம் நின்றான்.

அதனால் புலிகேசியின் கோபம் கணத்துக்குக் கணம் பொங்கிப் பெருகிற்று. அதைப் பார்த்த படைத் தலைவர்களில் ஒருவன், ''பிள்ளையாண்டான் செவிடு போலிருக்கிறது!'' என்றான்.

இன்னொருவன், ''இல்லை ஊமை!'' என்றான்.

மற்றொருவன், ''அதெல்லாம் இல்லை. பையனுக்கு நம்முடைய பாஷை புரியவில்லை! அதனால்தான் விழிக்கிறான்!'' என்றான்.

அப்போது புலிகேசி, ''ஆமாம்; அப்படித்தான் இருக்க வேண்டும். ஜைன முனிவர்கள் கோபித்துக் கொண்டு போனதில் அதுதான் ஒரு சங்கடம். அவர்கள் இருந்தால் எந்த பாஷையாக இருந்தாலும் மொழி பெயர்த்துச் சொல்லி விடுவார்கள். போகட்டும், இவனைக் கொண்டுபோய்ச் சிறைப்படுத்தி வையுங்கள். பிறகு பார்த்துக் கொள்வோம்!'' என்று கூறியவன், திடீரென்று, ''வேண்டாம், இவன் இங்கேயே இருக்கட்டும். சற்றுமுன்பு வந்திருந்த வீரன் வஜ்ரபாஹுவை உடனே போய் அழைத்து வாருங்கள்!'' என்றான்.

வஜ்ரபாஹுவை அழைக்க ஆள் போனபிறகு, புலிகேசி படைத் தலைவர்களைப் பார்த்துக் கூறினான்:

''இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது, தெரியுமா? கேளுங்கள் அதிசயத்தை! இந்த ஓலை கொண்டுவருகிற பையனிடம் அஜந்தா வர்ண இரகசியத்தைச் சொல்லி அனுப்ப வேணுமாம்: இரண்டு வருஷம் நான் அஜந்தா குகைகளிலேயே வசித்திருந்தும் அந்தப் புத்த பிக்ஷுக்களிடமிருந்து வர்ண இரகசியத்தை என்னால் அறிய முடியவில்லை. பிக்ஷுக்கள் அவ்வளவு பத்திரமாக அஜந்தா வர்ண இரகசியத்தைப் பாதுகாக்கிறார்கள். அப்படியிருக்க இந்தப் பிள்ளையிடம் அதைச் சொல்லி அனுப்பும்படி இந்த ஓலையில் எழுதியிருக்கிறது. எழுத்தோ நம் பிக்ஷு எழுதியதாகவே தோன்றுகிறது. இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர், மைத்ரேயரே!'' என்று சொல்லிக் கொண்டே புலிகேசி மன்னன் அந்த ஓலையை ஒற்றர் படைத்தலைவனிடம் நீட்டினான்.

மைத்ரேயன் ஓலையை வாங்கிக் கவனமாகப் படித்தான். பின்னர் சக்கரவர்த்தியைப் பார்த்து, ''சத்யாச்ரயா! இதில் ஏதோ மர்மமான செய்தி இருப்பதாகத் தெரிகிறது. பையனை விசாரிக்கிறபடி விசாரித்தால் தெரிகிறது!'' என்றான்.

அமரர் கல்கி

''அழகுதான், மைத்ரேயரே! பையனை விசாரித்தாலும் அவன் சொல்கிறது நமக்கு விளங்கினால்தானே உபயோகம்? அதற்காகத்தான் வஜ்ரபாஹுவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான் புலிகேசி.

இப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வஜ்ரபாஹு கூடாரத்துள் நுழைந்தான். புலிகேசியின் அருகில் வந்து வணங்கி, ''இராஜாதிராஜனே! மறுபடியும் ஏதாவது ஆக்ஞை உண்டா?'' என்று கேட்டான்.

''வஜ்ரபாஹு, உம்மைப் போலவே இந்தப் பையனும் எனக்கு ஓர் ஓலை கொண்டு வந்திருக்கிறான். ஆனால், அதிலுள்ள விஷயம் மர்மமாக இருக்கிறது. ஓலையை யார் கொடுத்தார்கள், யாரிடம் கொடுக்கச் சொன்னார்கள் என்பதை விவரமாக விசாரித்துச் சொல்லும். அதற்காகத்தான் உம்மை மீண்டும் தருவித்தேன்'' என்றான்.

வஜ்ரபாஹு பரஞ்சோதியின் பக்கம் திரும்பி உற்றுப் பார்த்து, ''ஆகா! இந்தப் பையனா? இவனை நான் முந்தாநாள் இரவு மகேந்திர மண்டபத்தில் பார்த்தேனே! இவனைப் பார்த்ததுமே எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. விசாரித்தேன்; ஆனால், பையன் அழுக்கன்; மறுமொழியே சொல்லவில்லை!'' என்றான்.

''இப்போது விசாரியும், மறுமொழி சொல்லாவிட்டால், நாம் சொல்லச் செய்கிறோம்'' என்றான் வாதாபி அரசன்.

''மன்னர் மன்னா! இவன் சுத்த வீரனாகக் காண்கிறான். இவனைப் பயமுறுத்தித் தகவல் ஒன்றும் அறிய முடியாது; நானே விசாரித்துப் பார்க்கிறேன்'' என்று வஜ்ரபாஹு கூறிவிட்டுப் பரஞ்சோதியை



நோக்கி, ''தம்பி! நான் அப்போதே சொன்னேனல்லவா. அதன்படி சத்யாச்ரயரிடம் உள்ளது உள்ளபடி சொல்லு! பயப்பட வேண்டாம். நான் உன்னைத் தப்புவிக்கிறேன்'' என்றான்.

அதற்குப் பரஞ்சோதி, ''ஐயா, எனக்குப் பயமே கிடையாது. எதற்காகப் பயப்பட வேண்டும்? உயிருக்குமேல் நஷ்டமாகக் கூடியது ஒன்றுமில்லை அல்லவா? இந்த ஓலையை நாகார்ஜுன பர்வதத்துக்குக் கொண்டு போய்ச் சத்யாச்ரயரிடம் கொடுக்கும்படி நாகநந்தி பிக்ஷு கூறினார். நீங்கள் சொல்லுகிறபடி இவருக்குத்தான் இந்த ஓலை என்றால், பெற்றுக் கொண்டு விடை எழுதிக் கொடுக்கட்டும். நான் எடுத்துக் கொண்டு திரும்புகிறேன். அல்லது இந்த ஓலை இவருக்கு அல்ல என்றால் ஓலையைத் திருப்பிக் கொடுக்கட்டும். வேறு என்ன நான் சொல்லக் கூடும்?'' என்றான்.



வஜ்ரபாஹு புலிகேசியைப் பார்த்து, ''அரசர்க்கரசரே, ஓலையை நாகநந்தி பிக்ஷுதான் கொடுத்ததாகவும், அதில் ஏதோ அஜந்தா வர்ணச் சேர்க்கையைப் பற்றி எழுதியிருப்பதாகவும் பிள்ளையாண்டான் சொல்கிறான். அந்த ஓலையை நான் சற்றுப் பார்வையிடலாமா?'' என்று கேட்டான்.

புலிகேசி ஓலையை வஜ்ரபாஹுவிடம் கொடுத்து; ''இதிலிருந்து தெரியக் கூடியது ஒன்றுமில்லை. நீர் வேணுமானாலும் பாரும்'' என்றான்.

வஜ்ரபாஹு ஓலையில் சிறிது நேரம் கவனம் செலுத்திவிட்டு, ''பிரபு! நாகார்ஜுன பர்வதத்திலுள்ள புத்த சங்கராமத்தின் தலைவரின் திருநாமம் சத்யாச்ரய பிக்ஷுதானே?'' என்று கேட்டான்.

''ஆமாம்; அதனால் என்ன?''

''இந்த ஓலை அவருக்கே இருக்கலாம் அல்லவா?''

''இருக்கலாம்; ஆனால் நாகநந்தி அவருக்கு இம்மாதிரி விஷயத்தைப் பற்றி எழுத நியாயமே இல்லையே?''

''பிரபு! இந்த ஓலையைப் படித்ததும் நாகநந்தி பிக்ஷு கூறிய ஒரு விஷயம் எனக்கு ஞாபகம் வருகிறது. கிருஷ்ணா நதிக் கரையோடு வேங்கி ராஜ்யத்தின் மேல் படையெடுத்துச் செல்லும் தங்கள் சகோதரருக்கும் செய்தி அனுப்ப வேண்டும் என்றும் அவர் சொன்னார். ஒரு வேளை தங்கள் சகோதரர் விஷ்ணுவர்த்தன மகாராஜாவுக்கு இதில் ஏதாவது செய்தி இருக்கலாம் அல்லவா?''

இதைக் கேட்டதும் புலிகேசியின் முகம் பிரகாசமடைந்தது. ''வஜ்ர

பாஹு! நீர் மகா புத்திசாலி. நம்முடனேயே நீர் இருந்து விடலாமே? பல காரியங்களுக்கு அனுகூலமாயிருக்கும்'' என்றான்.

பிறகு, தன் படைத் தலைவர்களிடம் சிறிது கலந்து யோசித்து விட்டு, ''எப்படியும் விஷ்ணுவர்த்தனனுக்கு நான் ஓலை அனுப்ப வேண்டியிருக்கிறது. ஓலையுடன் ஒன்பது வீரர்கள் போகட்டும். அவர்களுடன் இந்தப் பையனையும் அனுப்புங்கள். இவனுடைய ஓலையின் விஷயம் என் தம்பிக்கும் விளங்காவிட்டால், இவனை உடனே சிரச்சேதம் செய்யக் கட்டளையிட்டு அனுப்புங்கள்!'' என்றான். பிறகு வஜ்ரபாஹுவை நோக்கி, ''இந்த விஷயத்தைப் பையனிடம் சொல்லும்'' என்று ஆக்ஞாபித்தான்.

வஜ்ரபாஹு பரஞ்சோதியிடம், ''தம்பி! நாகார்ஜுன மலைக்கு இங்கிருந்து சக்கரவர்த்தியின் ஓலையுடன் ஒன்பது வீரர்கள் நாளைக் காலையில் போகிறார்கள். அவர்கள் உன்னையும் அழைத்துப் போவார்கள். நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நாளை இராத்திரி உன்னை அநேகமாக நான் வழியில் சந்திப்பேன்'' என்றான்.

பரஞ்சோதி அகமும் முகமும் மலர்ந்தவனாய், ''ஐயா! தங்களுடன் பிராயணம் செய்வதாயிருந்தால் நரகத்துக்கு வேணுமானாலும் வரச் சித்தம். தங்களிடம் கதை கேட்க அவ்வளவு ஆவலாக இருக்கிறது!'' என்றான்.

''பையன் என்ன சொல்கிறான்?'' என்று புலிகேசி கேட்டதற்கு, ''பிள்ளையாண்டான் பலே கைகாரன்; தான் கொண்டு வந்த ஓலை தங்களுக்கு இல்லையென்றால் தன்னிடம் திருப்பிக் கொடுத்து விடும்படி கேட்கிறான். இளங்கன்று பயமறியாது என்று தமிழிலே ஒரு பழமொழி உண்டு!'' என்றான் வஜ்ரபாஹு.

புலிகேசி சிரித்துவிட்டு, ''அப்படியா? நல்லது; ஓலையைப் பையனிடமே கொடுத்து வைக்கலாம். இப்போதைக்கு அவனுடைய கட்டையும் அவிழ்த்துவிடுங்கள்!'' என்றான்.

ஓலையைப் பரஞ்சோதியிடம் கொடுத்ததோடு, அவனுடைய கட்டுக்களையும் உடனே அவிழ்த்துவிட்டார்கள். பிறகு, அவனைச் சக்கரவர்த்தியின் சமூகத்திலிருந்து அழைத்துச் சென்றார்கள்.

மறு நாள் அந்தி மயங்கும் சமயத்தில் பரஞ்சோதியும் அவனுக்கு முன்னும் பின்னுமாகச் சென்ற ஒன்பது வீரர்களும் காட்டு மலைப் பாதையில் ஒரு குறுகிய கணவாயைத் தாண்டி, அப்பால் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பழைய பாழடைந்த வீட்டை அடைந்தார்கள். அந்த வீட்டின் வாசல் திண்ணையில் ஒரு முதிய கிழவன் உட்கார்ந்திருந்தான். தலையும் தாடியும் நரைத்த அக்கிழவன் உலகப் பிரக்ஞையே அற்றவனாய்க் கையிலிருந்த ஜபமாலையை உருட்டிக் கொண்டிருந்தான். பத்துக் குதிரைகள் சேர்ந்தாற்போல் வந்து அவ் வீட்டின் வாசலில் நின்றதைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை.

வந்த வீரர்களில் ஒருவன் கிழவனை என்னவோ கேட்க, அவன் இரண்டொரு வார்த்தையில் மறுமொழி கூறிவிட்டு மறுபடியும் ஜபமாலையை உருட்டலானான்.

அன்றிரவு அந்தப் பாழ் வீட்டிலேயே தங்குவதென்று அவ்வீரர்கள் முடிவு செய்தார்கள். தங்களில் நாலு பேரை நாலு ஜாமத்துக்குக் காவல் செய்யவும் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

எல்லாரையும்விட அதிகக் களைப்புற்றிருந்த பரஞ்சோதிக்குப் படுத்தவுடனே கண்ணைச் சுற்றிக்கொண்டு தூக்கம் வந்தது. தூக்கத்தில் ஆழ்வதற்கு முன்னால் அவன் மனத்தில் கடைசியாக 'வஜ்ரபாஹு இன்றிரவு சந்திப்பதாகச் சொன்னாரே? இனி எங்கே சந்திக்கப் போகிறார்?' என்ற எண்ணம் தோன்றியது.

பரஞ்சோதி அன்றைக்கும் தூக்கத்தில் கனவு கண்டான். புலிகேசியின் கூரிய கழுகுப் பார்வை ஒரு கணம் அவன் நெஞ்சை ஊடுருவியது. 'இவனை யானையின் காலால் இடறச் செய்யுங்கள்!' என்று புலிகேசி கட்டளையிடுகிறான். பரஞ்சோதி தன்னை இடற வந்த யானையின் மீது வேலை எறிந்துவிட்டு ஓடுகிறான். யானை அவனை விடாமல் துரத்தி வருகிறது. கடைசியில், அது கிட்ட நெருங்கி விட்டது. யானையின் தும்பிக்கை தன் தோளில் பட்டதும், பரஞ்சோதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறான். பார்த்தால் யானையின் முகம் அந்த வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஜபமாலை உருட்டிக் கொண்டிருந்த கிழவனின் முகமாகவும், துதிக்கை அக்கிழவனின் கையாகவும் மாறியிருக்கின்றன.

இது கனவில்லை; உண்மையாகவே அந்தக் கிழவன் தன்னைத் தொட்டு எழுப்புகிறான் என்பதைப் பரஞ்சோதி உணர்ந்ததும் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

(தொடரும்)

சனி பகவான் சன்னிதியில்




• கணேச குருக்கள்:
"ராஜகோபுரமில்லை;
மகா கோபுரம்."

• ஆலய முகப்பு





• தியாகராஜ குருக்கள்:
"நான்காவது கோபுரம்,
கட்டலாமா?"



• செல்வசண்முகம்:
வக்கீல் நோட்டீஸ்!

"**ச**னி பகவான் சோதிக்கிறார்; பிரார்த்தித்துக் கொள் எல்லாம் சரியாகப் போய் விடும்" என்று ஆறுதலாகப் பேசுகிறோம். ஆனால் பல சமயங்களில் மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே சோதனைகளை உருவாக்கிக் கொண்டு பகவானையே கூட சோதித்து விடுகிறார்கள்! திருநள்ளாறில் இப்போது அப்படித்தான் நடக்கிறது!

திருநள்ளாறு சனீஸ்வரர் ஆலயத்திற்கு ராஜகோபுரம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து, அதற்கு ஜெயில் சிங்கைக் கொண்டு அடிக்கல்லும் நாட்டச் செய்தது கோவில் நிர்வாகம். கோவில் அர்ச்சகர்களும் ஸ்தானிகர்களும், இக் கோயிலுக்கு ராஜ கோபுரம் கட்டுவது ஆகம விதிகளுக்குப் புறம்பானது என்று கூறி எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்தார்கள். இது நடந்தது 1982 இல்! தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்த போதும் திருப்பணிக்கான வசூல் தொடங்கி, 1990 வரை சுமார் இருபத்திரண்டு லட்ச ரூபாய் வசூலாகி விட்டது! இதில் மூன்று லட்ச ரூபாய் வரை கருங்கல் வேலைகளுக்குச் செலவும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கிறவர்கள் எதிர்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திருநள்ளாறு சென்று, சம்பந்தப்பட்ட சிலரைச் சந்தித்துப் பேசினோம்.

திருப்பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்ட போது கோயில் நிர்வாக அதிகாரியாக இருந்தவர் சதானந்தம். இவர் கூறினார்.

"ராஜகோபுரம் கட்டுவதற்கு எதிர்ப்பு எழுந்தது உண்மைதான். ஆனால் ஆகம விதிகளை மீறுகிறோம் என்று கூறப்படுவதை ஏற்க முடியாது. ஸ்ரீலஸ்ரீ சன்னிதானம் (திருநள்ளாறு கோயில் தருமபுர ஆதீனத்தின் கீழ் வருவது) 1980 லேயே இங்கு வந்த புதுவை (அப்போதைய) சபாநாயகர் ஃபாருக்குடன் இது பற்றிப் பேசித் தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார். ஆகம

கோபுரமாய் உயரும் சர்ச்சைகள்!



விதிகள் பற்றிச் சன்னிதானம் அவர்களுக்குத் தெரியாதா? மேலும் பல்வேறு கட்டங்களாக இத் திருப்பணி நடந்து வருகிறது. அப்போதெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்காதவர்கள் திடீரென்று எதிர்த்தால் என்ன செய்ய முடியும்? திருச்சுற்றுப் பிராகாரம் ஒன்று அமைத்த பிறகே ராஜகோபுரம் கட்ட வேண்டும் என்பது அவர்களின் வாதம். அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றே நான் கூறுகிறேன். எப்படியாவது ராஜகோபுரம் கட்டி முடிக்கப்படும்...''

உறுதியாகச் சொன்ன சதானந்தம், சமீபத்தில்தான் இக் கோயிலின் தனி அதிகாரி பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார்!

தற்போதைய தனி அதிகாரி சீதாராமனோ ''ஒரு கமிட்டி அமைத்துப் பிரச்னையை ஆராயத் திட்டமிட்டுள்ளோம்'' என்றார். ''சனிப் பெயர்ச்சிக்கான ஏற்பாடுகளில் இப்போது மும்முரமாக உள்ளோம். அது முடிந்ததும் அர்ச்சகர்கள், ஸ்தானிகர்கள் ஆகியோருடன் கலந்து பேசுவோம். ஏற்கெனவே, புதுவைக்கு வந்த காஞ்சி ஸ்வாமிகளிடமும் இவ் விஷயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவரும் அனுமதி வழங்கியுள்ளார்'' என்று கூறினார்.

திருநள்ளாறு தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சாமிநாதசாமி தம்பிரான், கோபுரம் கட்டுவதற்கு எதிர்ப்பு உள்ளது என்பதையே ஏற்க மறுத்தார். ''எதிர்ப்பு என்பதை விட சிறு சிறு சந்தேகங்கள் மக்கள் மனத்தில் எழுந்துள்ளன என்று



• சதானந்தம்: ''திடீரென்று எதிர்த்தால் எப்படி...?''



• சாமிநாதசாமி தம்பிரான்: ''எதிர்ப்பு இல்லை; சந்தேகம்...''



• சீதாராமன்: ''கமிட்டி போடுவோம்''



• துவங்கிவிட்ட கருங்கல் திருப்பணிகள்.

தான் சொல்ல வேண்டும். சிறு தடங்கல்கள் மீறப்படும். எம்பெருமான் எல்லாவற்றையும் ஏற்று நடத்துவார்'' என்றார்.

கணேச குருக்களும், ''எங்கள் கோவிலில் கோபுரம் கட்டுவதை நாங்கள் எதற்கு எதிர்க்க வேண்டும்? ஒரு நல்லது நடந்தால் எங்களுக்கும் சந்தோஷம்தானே!'' என்றார்.

''ஆனால் தற்போது திருநள்ளாறில் கட்டப் போவது ராஜகோபுரமாகாது. ஏற்கெனவே உள்ளதுதான் ராஜகோபுரம்.



''பன்னிரண்டு மணிக்கு மானேஜர் உங்களைக் கூப்பிட்டாரு. நீங்க நல்லாத் தூங்கிட்டிருந்தீங்க...''

''ஏன் எழுப்பலே?''

''தூங்கிக்கிட்டிருந்தா டிஸ்டர்ப் பண்ணாதேன்னாரு...!''

புதியதை மகாகோபுரம் என்று வேண்டுமானால் அழைக்கலாம். எங்கள் ஆட்சேபணை இதுதான்: புதிதாகக் கோபுரம் கட்டினால் அதைச் சுற்றியும் ஒரு பிராஹாரம் கட்டாயம் அமைய வேண்டும். ஆனால் தற்போது அவ்வாறு அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை! மட விளாகங்களாக உள்ள தெருக்களை வேண்டுமானால் கோயிலுடன் சேர்த்துக் கொண்டு சுற்றுச் சுவர் எழுப்பலாம். ஆனால், அதற்கும் வேறு ஆட்சேபணைகள் எழும். மேலும், புதிதாக எழுப்பப்படும் கோபுரத்தின் நிழல், ஏற்கெனவே உள்ள கோபுரத்தின் மீது சாயக் கூடாது. தவிர, சித்திரை, வைகாசி மாதங்களின் சில குறிப்பிட்ட தேதிகளில், உதய காலத்துச் சூரியகிரணங்கள் இங்கு பிரதானமாய் வீற்றுள்ள தர்ப்பாரண்யேஸ்வரர் திருமேனியில் விழுவதுண்டு. புதிதாகக் கோபுரம் கட்டினால் இதற்கு இடையூறு ஏற்படாமல் இருக்குமா? என்று சிந்திக்க வேண்டும்.''

— 'நாங்கள் ஏன் எதிர்க்க வேண்டும்?' என்று ஆரம்பித்து வரிசையாக ஆட்சேபணைகளை அடுக்கிய கணேச குருக்கள், புதுவை மாநில குருக்கள் சங்கத் துணைத் தலைவர்.

இதே அமைப்பின் செயலாளர் தியாகராஜ குருக்கள், ''ராஜகோபுரம் கட்டுவது பற்றி எங்களிடமும் கலந்து பேசுவார்கள் என்று நம்பினோம்; ஆனால் நாங்கள் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை'' என்று வருத்தப்பட்டார். ''நாங்கள் இப் பணியை எதிர்க்கவில்லை; ஆலோசனைதான் கூறுகிறோம். ஆனால் கேட்பாரில்லை! இருந்தாலும் சொல்கிறோம். புருஷாகாரமான ஆலய அமைப்பில் ராஜகோபுரம் பாதமாகப் போற்றப்படுகிறது. ஏற்கெனவே ஒரு பாதம் இருக்கும்போது புதிதாக ஒரு பாதம் அமைக்கலாமா? இதனால் பாதஸ்தானம் மட்டும் நீண்டு போகுமே! மேலும், ஏற்கெனவே இவ் வாலயத்தில், ராஜகோபுரம், மொட்டை கோபுரம் (தென்புறம்), கட்டை கோபுரம் என்று மூன்று கோபுரங்கள் உள்ளன. ஆகம விதிப்படி ஒற்றைப்படை எண்ணிக்கையில்தான் (1, 3, 5, 7 ...) கோபுரங்கள் அமைய வேண்டும். இப்போது புதிதாகக் கட்டப் போவது நான்காவது கோபுரமாகவல்லவா இருக்கும்!''

ஸ்தானிகர்கள் சார்பில் பேசிய வழக்கறிஞர் செல்வசண்முகத்தின் வருத்தம் வேறு விதமாயிருந்தது.

''சன்னிதானம் ராஜகோபுரம் கட்டச் சொல்லியிருக்கலாம். ஆனால் யாரையும் கலந்து பேசாமல் அதைச் செய்து விடலாமா? இந்த ஆலயத்திற்கு, தினந்தோறும் வெளியூரிலிருந்து வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளே செய்து தரப்படவில்லை. பஸ் நிலையம் கிடையாது; கோயிலுக்குச் சொந்தமான தங்கு விடுதிகள் இல்லை; கோயில் நந்தவனங்கள் குப்பை மேடுகளாகி வருகின்றன. ஏற்கெனவே உள்ள மதில்களிலும் கோபுரங்களிலும் செடி கொடிகள் படர்ந்து வருகின்றன. இதையெல்லாம் சீர் செய்து செப்பனிடுவதை விட்டு விட்டு, லட்சக்கணக்கில் பணம் செலவழித்து ஆகம விதிக்குப் புறம்பாகக் கோபுரம் கட்டுவானேன்?....

''சரி கோபுரம் கட்டத்தான் முடிவெடுத்தார்கள் இதுவரை திருப்பணி கமிட்டி அமைத்திருக்கிறார்களா? அல்லது 'எஸ்டிமேட் போர்டு' தான் உண்டா? முதலில் பதினைந்து லட்சம் ஆகும் என்றார்கள்; பிறகு இருபத்திரண்டு என்றார்கள். இப்போது முப்பதில் நிற்கிறது...

''ராஜகோபுரம் கட்டுவது சட்ட, சாஸ்திர விதிகளுக்குப் புறம்பானது என்று நிர்வாகத்துக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறேன். இதுவரை பதில் இல்லை. ஆகமத்துக்குப் புறம்பாகக் கோபுரம் கட்டப்படுவதை இறுதிவரை எதிர்ப்போம்'' —அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லி விட்டார் செல்வசண்முகம்.

இப்படிப் பலரது கருத்து மோதல்களுக்கிடையே சனீஸ்வர பகவான் அமைதியாகத் தரிசனம் தந்து கொண்டுதான் இருக்கிறார். கருத்து வேறுபாடு கொண்டுள்ளவர்கள் கூடிப் பேசுவார்களா? பிரச்னை சுமுகமாக முடியுமா? அந்த பகவானுக்கே வெளிச்சம்!

— திருவைக் குமார்.

படங்கள்: கௌரி ஸ்டுடியோ.

கட்டுரைக்கு யோசனை வழங்கிய வாசகர்: செல்லூர் கணேசன், காரைக்கால்.



COUNT DOWN — 1

காத்ரைக் கலைத்த சப்தம்!

பரத்நாயக்கின் வீடு வெளியே பூட்டப்பட்டிருந்தது.

மணிமாறன் கதவை ஏமாற்றத்துடன் பார்த்தான்.

ராணுவத்திலிருந்து விடுப்பில் வீட்டுக்கு வந்திருப்பவன். குடும்பத்துடன் சில நாட்களைக் கழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருப்பவன். இருபத்து நான்கு மணி நேரமும் வீட்டோடு கிடப்பான் என்று எதிர்பார்ப்பது எந்தவிதத்தில் நியாயமாகும்?

உள்ளூரில்தான் இருக்கிறானா? அல்லது எங்காவது வெளியூர் போயிருக்கிறானா என்று தெரிந்தால் போதும். பக்கத்து வீட்டுக் கதவைத் தட்டினான்.

வாயோரம் பீடியை இடுக்கிக் கொண்டு கதவைத் திறந்தவருக்கு முகம் நிறைய மூன் தாடி. பீடி நெஞ்சையே உள்ளிழுத்திருந்தது.

''பரத் நாயக் வீட்டில்...?''


''பை பாஹர் கயே ஹைங்.''

''எங்கே?''

''ஆப் கோன் ஹைங்?''

''நான் அவன் நண்பன். ராணுவத்தில் வேலை செய்பவன்.''

''அச்சா...'' என்றார் அவர். பரத்நாயக்



> தப்பித்து ஓடும் ஒற்றன் நரியைப் போன்றவன். எங்கெங்கே இடைவெளி கிடைக்கிறதோ, அங்கங்கே நுழைந்து, திசை திரும்பி ஓடும் நரி. தடை வரும்போது, பொங்கிச் சீறி, தனக்கேற்ற மாற்றுப் பாதையைத் தேடிக் கொள்ளும் நரியைப் போன்றவன், நல்ல ஒற்றன்.
>
> — டேவிட் கூப்பர்.

தன் தங்கை வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொன்னார். மறுநாள் காலை திரும்புவதாகச் சொன்னார்.

''வந்ததும் எனக்கு போன் பண்ணச் சொல்கிறீர்களா... மிக மிக அவசரம்'' என்று தான் தங்கியிருந்த ஹோட்டலின் போன் நம்பரைக் குறித்துக் கொடுத்தான்.

''ஆப்கா நாம் லாப்?''

''மணி என்று சொல்லுங்கள்...''

மணிமாறன் திரும்பி நடந்தான்.

ஆதவன் ஆகாயத்தில் தேதி மாற்றினான். ஜன்னல்களில் வெளிச்சம் பதித்தான்.

மணிமாறன் கட்டிலில் உட்கார்ந்திருந்தான்.

முந்தைய இரவு முழுவதும் கெட்ட சொப்பனங்கள் நிறைந்த நிலையற்ற தூக்கம். கண்கள் ஏகமாய்ச் சிவந்திருந்தன.

அச்சுதனுக்கு ஹைதராபாத் விவகாரம் தெரிந்திருக்குமா என்ற கவலை மனத்தின் அத்தனை மில்லி மீட்டர்களையும் அரித்துக் கொண்டிருந்தது. சாந்தினியிடமிருந்து உபயோகமான தகவல்கள் கிடைப்பதற்கு முன்பே அவளை மறுபடி இழந்து விட்டது இன்னொரு புறம் வதைத்துக் கொண்டிருந்தது.

வெகு எளிதாக, எல்லைப் பகுதியில் இருந்தபோதே பாகிஸ்தானிற்குள் நுழைந்து சேர்ப்பித்திருக்க வேண்டிய ஒரு டம்மித் துப்பாக்கியை இத்தனை தூரம் இந்தியாவிற்குள் எடுத்து வந்ததே தப்பு. சம்பவத்தின் மீது சம்பவமாக அவனை ஒரே திசையில் விரட்டிக் கொண்டிருப்பதால் நிறைய சந்தர்ப்பங்களில் சுயமாக முடிவெடுக்க வேண்டிய பலவீனமான நிலை வேறு.

அப்படி என்னதான் இருக்க முடியும் அந்தத் துப்பாக்கியில்?

மணிமாறன் தலையணைக்கடியிலிருந்து அந்தத் துப்பாக்கியை எடுத்தான். அதன் அடிப்புறம் பதிந்திருந்த எண்களை ஆராய்ந்தான்.

996090

இந்த எண்களில் எந்தச் செய்தியும் இருந்து விட முடியாது. உள்ளேதான் ஏதோ ரகசியம் புதைந்திருக்க வேண்டும். இதைப் பத்திரமாகப் பாகிஸ்தானில் சேர்த்து விட்டால் உடனே வெளிநாட்டு அக்கவுண்டில் அவன் பெயரில் இரண்டு லட்சம் டாலர்கள். தவிர பாகிஸ்தானிற்குள் அவன் நுழைந்து விட்டால் தேவையான அத்தனை பாதுகாப்புகளும் — அதுவும் அவன் வாழ்நாள் முழுவதும். மேஜர் நாஸர் வாக்குத் தவற மாட்டார்.

'......996090 என்ற எண் பொறிக்கப்பட்ட அந்தத் துப்பாக்கி உடனடியாக பாகிஸ்தான் ராணுவத் தலைமையகத்திற்குத் திருப்பப்பட வேண்டும் — எந்தவித சேதமும் இல்லாமல். ரிபீட்... எந்தவித சேதமும் இல்லாமல்.'

— பாகிஸ்தான் மேலிடத்திலிருந்து அவனுக்கு வந்த உத்தரவு.

துப்பாக்கியைத் திறந்து அதனுள் என்ன இருக்கிறது என்று பார்க்கும் துணிவு அவனுக்கு வரவில்லை.

துப்பாக்கியை, அதனுடைய வெல்வெட் உறையில் பத்திரப்படுத்தினான். மெத்தைக் கடியில் வைத்தான்.

பிரஷ்ஷில் பற்பசையைப் பிதுக்கிக் கொண்டிருந்த போது —

குக் — குக் — குக் என்று எலெக்ட்ரானிக் டெலிஃபோன் அழைத்தது.

''ஹலோ!''

''மணி... நான் பரத் நாயக்.''

மணிமாறனின் உடலெங்கும் புது ரத்தம் பாய்ந்தது.

''நாயக், மிக அவசரமான பொறுப்புடன் வந்திருக்கிறேன். உனக்கு என்றைக்கு லீவு முடிகிறது?''

''இன்றோடு. நாளை புறப்படுகிறேன்.''

''நல்லது. உன்னிடம் நான் ஒரு முக்கிய பொருளை ஒப்படைக்க வேண்டும். அதை நீ சர்வ பத்திரமாக நான் சொல்பவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும்.''

''செய்கிறேன் மணி.''

''உன்னை இப்போது வீட்டில் சந்திக்கலாமா?''

''வேண்டாம். என் பிரதேசத்தில் ஊரடங்கு உத்தரவு அமுலாகி இருக்கிறது. மாலை அது தளர்த்தப்படலாம். இன்று மாலை பஞ்சாரா ஹோட்டலுக்கு வா. ஐந்தாவது தளத்தில் கஜல் ஹால் இருக்கிறது. மாலை ஏழு மணிக்குத் துவங்கி விடும். ஹோட்டலில் இருப்பவர்களின் பொழுது போக்குக்காகப் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிகழ்ச்சி. வி.ஐ.பி.கள் மட்டுமே வெளியில் இருந்து வந்து கலந்து கொள்ளப் போகிறார்கள். என்னிடம் இரண்டு பேருக்கான பாஸ் இருக்கிறது. நமக்கு ஏழாவது எண்ணிட்ட இடம் ரிசர்வ்

செய்யப்பட்டிருக்கிறது. அங்கே நாம் சந்திப்போம். கீழே உட்கார வசதியாகப் பை ஜாமா குர்தாவில் வர வேண்டும் என்று அழைப்பிதழிலேயே அச்சாகி இருக்கிறது.''

''சரியாய் ஏழு மணிக்குக் காத்திருப்பேன் நாயக் — நீ சொன்ன உடையில்.''

மணிமாறன் ரிசீவரை வைத்தான். தசைகளைத் தளர்த்திக் கொண்டான். முறுக்கேறியிருந்த டென்ஷன் வெகுவாகக் குறைந்து விட்டது.

பின் மாலை. ஆறு முப்பது.

மணிமாறன் தனக்கென்று ஏற்பாடு செய்து கொண்ட ஒரு டூரிஸ்ட் காரில் பஞ்சாரா நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். டிரைவர் சீரான வேகத்தில் காரைச் செலுத்தினான். ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருந்தது. இருந்தும் ராணுவத்தின் நடமாட்டம் இருந்தது.

மணிமாறனின் மனத்தில் இலேசாகப் பதைப்பு ஏறியது. தன் காரை யாரும் நிறுத்தக் கூடாது. பரிசோதிக்கக் கூடாது. துப்பாக்கியை யாரும் பார்த்து விடக் கூடாது. மணிமாறன் என்னதான் தன் ஐடென்டிடி கார்டை எல்லாம் கொடுத்தாலும், துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டு விட்டால்....

மணிமாறன் டம்மித் துப்பாக்கியைக் காரின் கார்ப்பெட் நீக்கி அதன் கீழே வைத்தான்.

வைக்கவும் கார் வழி மறிக்கப்பட்டது.

டிரைவர் ஜன்னல் வழியே பார்த்தான். மூன்று ராணுவ வீரர்கள்.

மணிமாறா... அமைதியாய் இரு.. பதற்றப்படாதே. அவசரப்படாதே. இவர்களுக்கு உன்னைத் தேடச் சொல்லி உத்தரவு இருக்காது. ருட்டீன் செக்கிங்காய்த்தான் இருக்கும். அவர்கள் நிச்சயம் ஹைதராபாத்தில் மணிமாறன் என்றொரு கறுப்பு ஆட்டைத் தேட மாட்டார்கள்.

''ஹுஜூர்...'' என்றான் டிரைவர் பின்னால் திரும்பி.

மணிமாறன் பதற்றப்படாமல் தன் ராணுவ ஐடென்டிடி கார்டை எடுத்து நீட்டினான். அவன் முகம் மரத்தால் செதுக்கப்பட்டது போல் உணர்ச்சியின்றிக் காணப்பட்டது.

அவர்கள் கார்டைப் பார்த்தார்கள். அவனைப் பார்த்தார்கள்.

விலகி நின்று ஒரு சல்யூட் அடித்தார்கள்.

இரவு. ஏழு மணி.

ஹைதராபாதிலிருந்து சற்று ஒதுங்கியே இருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலான பஞ்சாராவின் சரிவான கான்க்ரீட் பாதையில் கார் மேலேறியது. போர்டிகோவில்

நின்றது.

மணிமாறன் இறங்கினான். வயிற்றுப் பகுதியைத் தொட்டுப் பார்த்தான். டம்மித் துப்பாக்கி பத்திரமாக இருந்தது.

தோட்டாக்கள் நிரம்பிய தன் துப்பாக்கியை எந்த அவசரத்திலும் சட்டென எடுத்துப் பிரயோகிக்கும் வசதியுடன் பான்ட்டில் பெல்ட் அருகே செருகியிருந்தான்.

தூரத்தில் பச்சைச் செடி வேலியருகே வரிசையாக நிறுத்தப்பட்ட கார்கள். ஒரு சில கார்களில் இருந்து வெடித்த சங்கீதத் துணுக்குகள். சற்றுத் தள்ளி சிமென்ட் தளத்தில் மேலே எறியப்பட்ட செயற்கை நீரூற்று எட்டாத கலர்க் கனவுகள் போல் பாதியில் மடிந்து, வழிந்து பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. ஹைதராபாத் கவலையுடன் இருக்கிறதா? யார் சொன்னது?

மணிமாறன் திரும்பினான். வெள்ளை வெளிச்ச விளக்குகளின் நடுவில் பூமியில் குத்தி வைக்கப்பட்ட கான்க்ரீட் ஈட்டி போல ஹோட்டல் தென்பட்டது. நுழைந்தான்.

மின் தூக்கி அவனை ஐந்தாவது மாடியில் இறக்கி விட்டது.

கஜல் கூடம் என்று ஆங்கிலத்தில் அழைத்த கண்ணாடிக் கதவருகே இருந்த வெள்ளையுடைச் சிப்பந்தி, மணிமாறன் 'பரத் நாயக்கின் விருந்தாளி' என்றதும் கதவைத் திறந்து அவனைக் குளிருக்குள் நடத்திச் சென்றான்.

கஜல் கூடம் அவனைப் பிரமிக்க வைத்தது.

நிஜாம் காலத்து நாட்டியக் கூடம் போல எத்தனை பழைமையான அமைப்பு!

தூண்கள் தெரியாமல் பதிக்கப்பட்ட கண்ணாடிச் சில்லுகள் வர்ண விளக்குகளின் வெளிச்சத்தைப் பதினாறு திக்கிலும் மின்னி எறிந்து கொண்டிருந்தன. முத்துக்கள் கோத்த திரைக் கம்பிகள். கூடத்தின் மையத்தில் வட்டமான நாட்டிய இடம். வரையப்பட்டிருந்த பெயின்ட் கோலம். உயரத்திலிருந்து தொங்கிய கண்ணாடிப் பட்டக நெய் விளக்குகள். கூடத்தில் ஒரு மேஜை இல்லை. ஒரு நாற்காலி இல்லை.

சுற்றிலும் கவிராரமாகப் போடப்பட்டிருந்த விலையுயர்ந்த மெத்தைகளும், திண்டுகளும் இருட்டடிக்கப்பட்டிருந்தன.

ஏழாம் எண்ணுக்கு உரிய இடத்திலும் சரிகை வேலைப்பாடுடன் வெண் மெத்தைகளும், ஜிகினா வேலைப்பாடுடன் அரக்கு நிற உருட்டைத் திண்டுகளும் தூய்மையாகக் காத்திருந்தன.

மணிமாறன் அந்த மெத்தையில் கால்களை மடக்கி உட்கார்ந்தான்.

ஹாலில் ஊதுபத்திகளின் புகை மேகங்கள்.

இன்னும் பரத்நாயக் வரவில்லை.

திடீரென மின் விளக்குகள் அணைந்தன. மெல்லிய லாந்தர் விளக்குகள் எரிந்தன. அவை தெளித்த மஞ்சள் ஒளியினூடே வளையல்களின் கலகலப்பான ஓசை எழ ஒவ்வொரு பெண்ணாக உருவானாள்.

மணிமாறன் கவனத்தை அங்கு திருப்பியதும், அவன் தோள் தொடப்பட்டது.

''ஸாரி மணி லேட்டாகி விட்டது.''

இருட்டில் அவன் நிழலாய்த் தெரிந்தான். மணிமாறனின் அருகே உட்கார்ந்தான்.

சலங்கைகள் கொஞ்சத் தொடங்கின. சிதாரின் நரம்புகளின் மீது தளிர் விரல்கள் நாட்டியமாடின. மிகவும் மெதுவான, அவசரமற்ற ஒரு பாடல் ஆரம்பித்து வினாடிகளுக்குள் உற்சாகப் பூக்களைச் சொரிந்தது. அரங்கம் சுழன்றது. வர்ணங்கள் இறைந்தன. ஆடிய பெண் சிரித்தாள். அழுதாள். ஆச்சரியப்பட்டாள். அழைத்தாள். பயந்தாள். ஓடினாள். தாவினாள்.

''நாயக். நாட்டியத்தை அப்புறம் பார்க்கலாம். எனக்கு அதிக நேரமில்லை. சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொள்'' என்று மணிமாறன் கிசுகிசுத்தான்.

''ம்.''

''உன்னிடம் நான் ஒரு துப்பாக்கி தரப் போகிறேன். டம்மித் துப்பாக்கி. எந்தக் காரணம் கொண்டும் அதை நீ திறந்து பார்க்காதே.''

''ம்.''

''முதல் வேலையாக எல்லைப் பகுதிக்குப் போ. எல்லை தாண்டி பாகிஸ்தானில் நுழை. உன்னை அங்கே எதிர்பார்த்திருப்பார்கள். அப்படி இல்லாவிட்டாலும் உடனே சரணடைந்து விடு. மேஜர் நாஸர் அல்லது மேஜர் ஜெனரல் அப்துல்கரீமைச் சந்திக்க வேண்டுமென்று சொல். இருவரில் ஒருவரை நேரில் சந்தித்து அந்தத் துப்பாக்கியை ஒப்படைத்து விடு. மணிமாறன் அனுப்பினான் என்ற செய்தி மட்டும் கொடு. உனக்கு உடனடியாகப் பரிசு கிடைக்கும். பத்தாயிரமாயிருக்க

உ. பி. முதல்வர் முலாயம் சிங் யாதவிற்கு மது, சிகரெட் போன்ற எந்தக் கெட்டப் பழக்கமும் கிடையாது. ஆனால், தினசரி விடியற்காலையில் அதற்கென நியமிக்கப்பட்ட பயில்வான் ஒரு மணி நேரம் உடலை 'மசாஜ்' செய்ய வேண்டும். அது தவறினால், அவரால் எந்த வேலையும் செய்ய முடியாது. அரசு வேலையாக டெல்லிக்குச் செல்லும் போது என்ன செய்கிறார்? இரவு தவறாமல் அரசாங்க விமானத்தில் லக்னோ திரும்பி விடுகிறார். விடியற்காலையில் அச்சடங்கு முடிந்ததும், டெல்லிக்குச் செல்கிறார். ஒரு முறை விமானத்தில் வந்து போகும் செலவு அதிகமில்லை — 27 ஆயிரம் ரூபாய்தான்!

— ''சன்டே''

தகவல்: அ. ஷண்முகசுந்தரம்.

லாம், ஒரு லட்சமாகக் கூட இருக்கலாம். ஆனால் துப்பாக்கியை எந்தச் சேதமும் இல்லாமல் ஒப்படைக்க வேண்டும்.''

''செய்கிறேன்.''

மணிமாறன் சட்டைக்குள் கை விட்டு வெல்வெட் உறையுடன் எடுத்து நீட்டினான்.

''நாயக்... ஜாக்கிரதை.''

துப்பாக்கி அவன் கையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. அதை அவன் இன்னொரு உறையில் போட்டு மார்புச் சட்டைக்குள் பத்திரப்படுத்துவது அசைவுகளின் சப்தங்களிலிருந்து புலப்பட்டது.

நாட்டியமாடுபவர்களின் மீது விழுந்து தெளித்த வெளிச்சத்தில் பரத் நாயக் இப்போது நன்றாகத் தெரிந்தான்.

இல்லை. இவன் பரத் நாயக் இல்லை!

மணிமாறனின் நெஞ்சுக்குள் எரிமலைகள் வெடித்தன.

''ஏய்... யார் நீ?'' வெகுவேகமாக அவன் இடுப்புத் துப்பாக்கியைத் தொட்டதும் கன்னத்தில் புறங்கை வீசப்பட்டது. அதே நேரத்தில் வலுவான கை அவனுடைய ரிவால்வரைப் பறித்து எடுத்துத் தூர வீசியது.

''யார்... யார்... நீ?''

''ஞான் அச்சுதன் என்று அறியப்படும்.''

மணிமாறன் அச்சுதனைப் பின்னால் உந்தித் தள்ளினான். அச்சுதன் கையில் துப்பாக்கி இருந்தது. மணிமாறன் யோசிக்க அவகாசமின்றி, சிறைப்பட்ட பூனை போல் பாய்ந்தான். அச்சுதனின் மார்பில் பதுங்கியிருக்கும் டம்மித் துப்பாக்கி அவனுக்கு வேண்டும்.

அச்சுதனின் முழங்கால் உயர்ந்து மணிமாறனின் அடிவயிற்றில் பதிந்தது.

திமுரென்ற விநோதமான சப்தங்கள் கேட்டுத் தலைகள் திரும்பின.

விளக்குகள் எரிந்தன.

மணிமாறன் பதறி எழுந்தான். தோல்வியைச் சந்திக்க அவன் தயாராய் இல்லை.

''என்னை நீ பிடிக்க முடியாது'' என்று அலறியவா... கண்ணாடி ஜன்னல் நோக்கி ஓடினான்.

சுஜல் பெண்கள் அலறினார்கள் மற்றவர்கள் பதறி எழுந்தார்கள்.

கண்ணாடி நொறுங்கியது. மணிமாறன் அந்தரத்தில் அரை விநாடி தென்பட்டான்.

நியான் வெளிச்சம் அவனுடைய கடைசி யாத்திரையின் பாதையெங்கும் மஞ்சள் தெளித்தது.

டிக்... டாக்: டிக்.. டாக்: டிக்... டாக்: டிக்.. டாக்.

கீழே கான்க்ரீட் தளத்தில் மணிமாறனின் உடல் சொத் என்று மோதிப் பரவிய சப்தம் காற்றைக் கலைத்தது.



''பரிதாபம்!'' என்றார் கர்னல் அருள்தாஸ். ''பரத்நாயக்கின் வீட்டை நாம் முற்றுகையிட்டதோ, அவன் பேசுவது போல் டெலிஃபோனில் நீ பேசியதோ மணிமாறனுக்குத் தெரிந்திருக்கவில்லை, பாவம்!''

''கர்னல், இதுதானே நீங்கள் கேட்ட துப்பாக்கி? இதற்காகத்தானே அமீர் ஜவஹர் தன் உயிரையே இந்திய மண்ணில் தொலைத்தான்?'' அச்சுதன் முகத்தில் மிக மெலிதான பெருமிதம் இருந்தது.

ராணுவ அலுவலகத்தின் பிரத்தியேக அறையில் அவர்கள் எதிரெதிரே உட்கார்ந்திருந்தார்கள்.

''யெஸ்'' என்ற கர்னல் டம்மித் துப்பாக்கியைத் தலைகீழாகப் பற்றி விசையை முன் தள்ளி இழுத்தார்.

துப்பாக்கி இரண்டாகப் பிளந்தது. உள்ளே வெவ்வேறு சிறு அறைகளில் வட்டம் வட்டமான மினி பார்சல்கள் தென்பட்டன.

''எல்லாம் மைக்ரோ ஃபிலிம்கள். இந்தியாவுக்கு எதிராக எங்கெங்கு பாகிஸ்தான் வன்முறைப் பயிற்சி முகாம்களை நடத்துகிறது என்று இன்னும் அரை மணி நேரத்திற்குள் தெரிந்து விடப் போகிறது அச்சுதன்.''

கர்னல் தன் சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு ரகசிய லேபிற்குள் நுழைந்தார்.

இருபது நிமிடங்களில் அவர் வெளிப்பட்ட போது அவர் முகமெங்கும் திகைப்பு பரவியிருந்தது.

''அச்சுதன், கதை முடிந்து விட்டது என்று நினைத்திருந்தேன். ஃபிலிம்களைப் பார்த்த பின்தான் தெரிகிறது...''

''என்ன கர்னல்?'' அச்சுதன் வியப்புடன் கேட்டான்.

''கதை இனிமேல்தான் ஆரம்பிக்கப் போகிறது அச்சுதன்!''

(தொடரும்)

இன்னும் நெருப்பு எரிகிறது!

இன்னும் நெருப்பு கனன்று கொண்டே இருந்தது. காய்ந்த மரத் துண்டுகள். இரவெல்லாம் எரிந்தும் கூட தணல் குன்றவில்லை.

நீலவானை நோக்கிக் காலை வெய்யிலில் புகை ஒரு நிழலோவியம் வரைந்து கொண்டு சென்றது.

ஐயாக்கண்ணு டூரிஸ்ட் பங்களா வராந்தாவில் நின்று தலை துவட்டியவாறே இரவு காம்ப் — ஃபயருக்குப் போட்ட நெகிடித் தீ தணியாததைக் கவனித்தார்.

'தண்ணீர் ஊற்றி அணைக்கச் சொல்லலாமா?'

நினைப்பு எழவும் பங்களா வாட்ச்மேன் வரவும் சரியாக இருந்தது.

''குட்மார்னிங் சார்!''

வாட்ச்மேன் காலை வணக்கம் சொன்னான். போகும் போது என்னை மறந்து விடாதீர்கள் என்று நினைவூட்டும் குறிப்பு அது. பாவம், இந்தக் காட்டிற்கு இப்படி நாலு பள்ளிக்கூடப் பையன்கள் வந்தால் தான் அவன் நாலு காசு பார்க்க முடியும்.

ஐயாக்கண்ணு பதில் வணக்கம் செய்தார்.

"நெருப்பு எரிஞ்சுக்கிட்டே இருக்கே வாட்ச்மேன்! பசங்களை விட்டு தண்ணி ஊத்தி அவிச்சிடச் சொல்லவா?''

''வேணாம் சார்... அது தானா அவிஞ்சுடும்.''

''பெரிசா காத்து அடிச்சு நெருப்பு சிதறிடுச்சின்னா காட்டுத் தீ புடிச்சுக்காது?''

வாட்ச்மேன் வெள்ளையாகச் சிரித்தான். ஐயாக்கண்ணுவுக்கு அனுபவமில்லை என்று உணர்த்திய சிரிப்பா இல்லை அப்படி நேர விடமாட்டோம் என்று தைரியமூட்டும் சிரிப்பா?

ஐயாக்கண்ணு மனசில் காட்டுத் தீ எரியும் சித்திரம். கருகி விழும் பறவைகள். விறிட்டு ஓடி வரும் விலங்குகள். பல நூறு வருஷத்து மரங்கள் பொசுங்கும் ஜ்வாலை. அதற்கு அடுத்தும் வாட்ச்மேன் சிரிப்பு.

வையவன்

''வேண்டாங்கிறியா?''

''ஆமா சார்.. தோ பாருங்க சாம்பல் பூத்து வருது. தானா அமுந்துடும். ஆமா... எங்க சார் பசங்களைக் காணோம். இன்னொரு சாரைக் காணோம்.''

''எல்லாம் காலையிலே நீர் வீழ்ச்சியிலே குளிக்க பீமன் மடுவுக்குப் போயிருக்காங்க.''

''அது பொல்லாத தண்ணி சார்! பட்டுனு ஜல்பு புடிச்சுக் காச்சல் வந்துரும்.''

அதற்குப் பயந்துதான் ஐயாக்கண்ணு போகவில்லை. அதை இவனிடம் ஒப்புக் கொள்ள வேண்டியதில்லை. பிக்னிக் வந்து ஒரு நீர்வீழ்ச்சி தென்பட்டால் பையன்கள் குதூகலம் அடுத்துக் காத்திருக்கும் ஜுரத்திற்கு அஞ்சுமா என்ன?

''நீங்க போவலையா சார்?''

''இங்கே கணக்குப் பார்க்கற வேலை.''

''சும்மா சொல்லக் கூடாது சார்! ஒங்க பசங்க தங்கம். அத்துமீறித் தப்புத் தண்டாவா ஒரு காரியம் பண்ணலே. கொய்ட்டா நடந்துக்கிட்டாங்க.''

வாட்ச்மேன் மீண்டும் டிப்ஸுக்கு அடி போடுகிறானோ!

இல்லை. ஐயாக்கண்ணுவுக்கே தெரியும். அவர் மாணவர்கள் நல்லவர்கள். அவர்கள் அரட்டை அத்து மீறல் எல்லாம் வகுப்பறையிலும் பள்ளியிலும்தான். வெளியே வந்தால் வித்தியாசம் காட்டுவார்கள்.

குளிக்கப் போன மாணவர்களின் திரும்பி வரும் ஆரவாரம் கேட்டது. ஐயாக்கண்ணு வராந்தாவுக்கு நேர்ப் பார்வையாகத் தெரிந்த காட்டுச் சாலையைப் பார்த்தார்.

தலையில் மடித்துப் போட்ட துண்டு கொடி போல் பறக்க விட்டு வரும் டவல், அண்டர்வேர், லுங்கி.. நடுவில் பாட்டு விசில்.. கூடப் போன பிஸிகல் டைரக்டர் எம். டி. அவர் ஐயாக்கண்ணு மாதிரி அவ்வளவு கறார் இல்லை.

பையன்களைப் பையன்களாகவே நேசிப்பவர். அதுதான் இந்த சுதந்திரம். கூட்டம் ஒவ்வோர் நபராக வர வரக் கடைசியில் இஸ்மாயில் தலை தெரிந்தது.

என்னவோ இடித்தது. மனசில். பிக்னிக்குக்குப் பஸ் ஏறும்போதிருந்தே அவன் தெம்

பாக இல்லை.

வகுப்பறையில் அவன்தான் பளிச்சென்று கேள்வி கேட்பவன். எதிர்பாராமல் ஒரு ஜோக் அடித்து வகுப்பையே சிரிக்கவைப்ப வன். இதற்கு முன் அவர் ஏற்பாடு செய்த டூர்களில் அவன்தான் கும்மாளம் போடுப வன்.

நேற்று காலை.. மத்தியானம்.. காம்ப் ஃபயர்! அப்போதும் இஸ்மாயில் சிரிக்க வில்லை. சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். உள்வாங்கிய பார்வை.

ஐயாக்கண்ணுவுக்கு இந்த பிக்னிக் சோபையுறாதது போல் ஒரு குறையுணர்வு.

என்ன காரணம்? இஸ்மாயில் ஏன் விலகியே நிற்கிறான்?

பையன்களை எல்லாம் ஒட்டுமொத்தமா கப் பார்த்து ''நல்லாக் குளிச்சீங்களா?'' என்று கேட்டார்.

''அனுமந்து நீர்வீழ்ச்சி மேலே ஏறி மூணு தடவை டைவ் அடிச்சான் சார்.''

''தண்ணி ரொம்ப ஜில்லுன்னு பல்லு கடகடக்கற மாதிரி இருந்தது சார்.''

''கோபி சோப்பை அருவியிலே விட்டுட் டான் சார்.''

''இட்ஸ் எ ஒண்டர்புல் பாத் சார்.''

புகார்கள். அனுபவங்கள்.. களிப்பு. இளமையின் துடிப்பு.

வழக்கமாக ஐயாக்கண்ணுவுக்கு இந்த பிரகாசமான முகங்களைப் பார்க்கும் போது இன்னதென்று உணர்த்த முடியாத ஒரு பூரிப்பு வரும். இன்று அது மட்டுப் பட்டது.

''என்ன இஸ்மாயில்... நீ நல்லாக் குளிச் சியா?''

''ம்ம்'' அவன் ஆழமாகப் பார்த்து விட்டு முனகினான்.

ஐயாக்கண்ணு அவன் முகத்தையே உற்றுப் பார்த்து அதற்குக் காரணம் தேடி னார். இரண்டு மூன்று விநாடிகள் கடந்தன.

''சரி... சீக்கிரம் எல்லாரும் டிரஸ் சேஞ்ச் பண்ணுங்க. கொஞ்ச நேரத்துக்கு முன் னாடியே டிபன் கடைக்காரர் வந்து பார்த் துட்டுப் போய்ட்டார். பத்து நிமிஷத்திலே இங்கேயே அனுப்பிச்சுடுங்கன்னு சொல்லி அனுப்பிச்சேன். டிபன் வந்துடும். சாப்பிட் டதும் கௌம்பறதுதான். கமான் கெட் ரெடி.''

பையன்கள் தடதடவென்று குதித்துக் கொண்டு படியேறினார்கள்.

ஐயாக்கண்ணு திரும்பி வாட்ச்மேனைப் பார்த்தார்.

''உங்ககிட்டே சைக்கிள் இருக்கா?''

''எதுக்கு சார்... ஓட்டல் கடைக்காரன் கிட்டே சொல்லணுமா?''





"புதுசா வேலையில் சேர்த்திருக்கீங்க. உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம்!"

"அஞ்சு மணிக்கு மேல அசந்து தூங் கினால் O.T. உண்டா சார்?"

— வி. ராஜப்பா.

"ஆமா."

"பையன்கள் ரெடியாவட்டும். அஞ்சு நிமிஷத்திலே அவனை வெரட்டி இட்டா றேன்" என்று வாட்ச்மேன் தன் சைக்கிளை மிதித்து வரப் போனான்.

எல்லாப் பையன்களும் போன பின்பு இஸ்மாயில் உள்ளே நுழைந்தான்.

அவரைக் கடந்து பிஸிகல் டைரக்டர் போக முயன்ற போது அவர் தோள் மீது கை வைத்து நிறுத்தினார் ஐயாக்கண்ணு.

எம். டி. திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"இஸ்மாயிலுக்கு ஒடம்பு சரியில்லியா?"

"தெரியலே சார்!"

"சாப்பிட்டானா?"

"சாப்பிட்டான்."

"வித் த க்ரூப்?"

"இல்லே.. தனியா."

"பிக்னிக் ஆரம்பிச்சதிலேர்ந்தே அவன் 'மூட்' சரியா இல்லே."

"கவனிச்சீங்களா நீங்களும்?"

"ஆமா சார்."

"ஸம்திங் ராங்!"

"............."

"அவனைத் தனியா ஒதுங்க இவங்க எல்லாம் எப்படி அனுமதிச்சாங்க?"

"..........."

"ஒருவேளை எல்லாமா சேர்ந்து அவனை டீஸ் பண்றாங்களோ?"

"விசாரிக்கட்டுமா சார்?"

"நோ நோ. கொஞ்சம் பொறுங்க. ஒருத் தன் சந்தோஷமா இல்லேன்னாலும் பிக்னிக் ஒரு தோல்வி. அவனை நான் கூப்பிட்டதா அனுப்புங்க. நானும் அவனும் டிபன் கடை வரைக்கும் போய்ட்டு வர்றோம்."

"அதான் வாட்ச்மேன் போறாரே..." என்று ஆரம்பிச்ச பிஸிகல் டைரக்டர் எம். டி. அவர் எதற்குச் சொல்கிறார் என்று சட்டென்று புரிந்து கொண்டு "சரி சார்" என்று பதிலிறுத்தார்.

இஸ்மாயில் உடனே வரவில்லை. டீ ஷர்ட் மாட்டி பாண்ட் போட்டு தலைவாரிப் பவுடர் போட்டுக் கொண்டு நிதானமாக வந்தான். இதுவே வித்தியாசம்.

இஸ்மாயில் இப்படிப்பட்டவன் அல்ல. கூப்பிட்டதும் சட்டென்று வந்து நிற்பவன். நிச்சயமாக ஏதோ நடந்திருக்கிறது. இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது.

அவரை நிமிர்ந்து ஒருமுறை பார்த்துக் கண்ணைத் தாழ்த்திக் கொண்டு "கூப்டீங்களா சார்?" என்றான்.

"ஆமாம். வா அந்த டிபன் கடை வரைக்கும் போய்ட்டு வரலாம்."

அவன் தயங்குவது போல் பார்த்தான்.

"ஏன் இஸ்மாயில், ஒனக்கு வர விருப்பம் இல்லியா?"

கேள்வியின் கூர்மை அவனைத் தாக்கி விட்டது. மீண்டும் அவன் மாணவன் ஆனான். அவர் அறிந்த பழைய இஸ்மாயில் ஆனான்.

இருவரும் இறங்கி நடந்தனர். இரு புறமும் மரங்கள். குளிர் கவிந்த காற்றின் இடையே இதமான வெயில்.

"இஸ்மாயில் உனக்காகப் பரோட்டா போடச் சொன்னேன்."

"ம்ம்."

"பரோட்டா சிக்கன் குருமா."

அவன் பதில் சொல்லவில்லை.

"பிக்னிக் எப்படி இருந்தது ஆனந்தமா இருந்ததா?"

"நல்லா இருந்துச்சு சார்."

அவன் தயங்கியே பேசினான்.

"யூ ஆர் நாட் ஹாப்பி.. நான் சொல்றது சரியா?"

அவன் தலைகுனிந்து நடந்து வந்தான்.

"நீ கலகலப்பாவே இல்லியே" பசங்களோட தகராறா?"

அவன் சட்டென்று நின்று விட்டான். ஐயாக்கண்ணு திரும்பி அவன் முகத்தைப் பார்த்தார். அவன் முகம் சிவந்திருந்தது. உதடும் மூக்கும் துடித்தன.

ஐயாக்கண்ணு நெருங்கி அவன் தோள் மேல் கை வைத்தார்.

"ம்ஹ்ம்ப்ப்" என்று அவன் வெடித் தெழுந்த ஒரு விசும்பலைக் கட்டுப்படுத்தினான்.

"இஸ்மாயில்.. இஸ்மாயில்" அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார் ஐயாக்கண்ணு.

அவன் கதறிவிடக் கூடும் என்று அவர் பயப்படும்படியாக இருந்தது அந்த விசும்பல். ஆனால் அவன் அதைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

"என்ன விஷயம்.. சொல்லுப்பா சொல்லு" என்று அவர் அவன் தோளைத் தொட்டுக் கேட்டார்.

"ஒண்ணுமில்லே சார்."

"இல்லே.. என்னமோ நடந்திருக்கு."

''இங்கே ஒண்ணும் இல்லே சார்.''

''பின்னே க்ளாஸ்லயா? ஸ்கூல்லயா? எப்ப...?''

''போன வியாழக்கிழமை தேர்ட் பீரியட்.''

''போன வியாழக் கிழமை?'' ஐயாக்கண்ணு நெற்றியைச் சுருக்கினார்.

''ஹிஸ்டரி நடத்தறப்ப...''

''என்ன நடந்தது?''

''முகமதியர்களின் படையெடுப்புக்கு அப்புறம் மொகலாயர்களின் படையெடுப்பு நடந்துதுன்னு பாடம் எடுக்கறப்ப...''

ஐயாக்கண்ணு பாடம் நடத்தும்போதே வகுப்பறையில் ஒரு முஸ்லீம் மாணவன் இருக்கிறான் என்ற உள்ளுணர்வு உறுத்த உறுத்தவே சொன்ன தகவல்கள் பனிச் சென்று அவருக்குள் திரும்ப எதிரொலித்தன.

''ஓ... அது வெறும் பாடம். ஜஸ்ட் ஓல்ட் ஹிஸ்டரி.''

''அவங்க அப்படி எடுத்துக்கலே சார்.''

பளிச்சென்று சவுக்கடி விழுந்தது போல் உணர்ந்தார் ஐயாக்கண்ணு.

''இஸ்மாயில் டேக் இட் ஈஸி.''

''அவங்க ஈஸியா எடுத்துக்கலே சார்.''

ஐயாக்கண்ணுவுக்கு வகுப்பறைகள் சில சமயம் நீதிமன்றங்களாகி விடும். சமூக முரண்பாடுகள் அவரை ஒரு கூண்டில் நிறுத்தி விடும். நடந்து கொண்டிருப்பது ஒன்று. சொல்லிக் கொடுக்க வேண்டியது ஒன்று என்று உண்மையின் இரு முகங்கள் அவரை நோக்கி எள்ளிச் சிரிக்கும்.

அந்த அனுபவம் இப்போது ஏற்பட்டது.

ஐயாக்கண்ணு ஆசான் அந்தஸ்து போய் போதிக்கும் யந்திரமாய்விட்ட உணர்வு பெற்றார். யந்திரத்தின் இயக்கு விசைகள் அவரிடமில்லை. மேலே எவரெவரிடமோ.

ஒரு பக்கம் மத ஒற்றுமை. ஒருமைப்பாடு என்று வற்புறுத்திக் கொண்டே மறுபுறம் எத்தனை வேற்றுமை உண்டோ அத்தனைக்கும் கடை பரப்பிக் கூட்டம் சேர்த்துக் கொடி பிடிக்கும் சமூக முரண்பாட்டின் கையில் தான் அந்த விசைகள்.

இஸ்மாயிலின் மனத்தில் போன புதன் கிழமை ஒரு சுதந்திரமான நாள். விகல்பமில்லாத நாள். வியாழனில் வேற்றுமையின் விதை ஊன்றும் என்ற விபத்து தெரியாத நாள்.

''யாராவது ஒன்னை டீஸ் பண்ணாங்களா?''

''இல்லே சார்.'' இதற்கு மேல் தான் எதுவும் தெரிவிக்கச் சித்தமில்லாத உறுதி அவன் முகத்தில் வெளிப்பட்டது.



''ரொம்ப அலட்டிக்காதே! நான் காபினெட் மினிஸ்டர் ஜோசியர், நீ டெபுடி மினிஸ்டர் ஜோசியர்தான்! ஞாபகம் வெச்சுக்க!''

கூடையை அவர்கள் நெருங்கும்போதே வாட்ச்மேன் சைக்கிள் கேரியரில் ஒரு கூடையும், ஒரு டிபன் காரியரும் வைத்துத் தள்ளிக் கொண்டே டிபன் கடைக்காரன் எதிர்ப்பட்டான்.

''எதுக்கு சார் இம்மாந்தொலவு வந்தீங்க? அதான் நான் பத்து நிமிஷத்திலே வர்றேன்னேனே.''

அவர் இஸ்மாயிலுடன் திரும்பினார். அவர் மனம் கனத்திருந்தது.

தற்போது அவர்கள் எல்லாமே அவர் மாணவர்கள். அவர் வாக்கை, அவர் அன்பை மதித்துப் போற்றுகின்ற பையன்கள்.

''சும்மாச் சொல்லக் கூடாது சார். ஒங்க பசங்க தங்கம்!'' என்று வாட்ச்மேன் சொன்னது நினைவு வந்தது.

எல்லாவற்றையும் இப்போது அவரால் சரிசெய்து விட முடியும். இந்த பிக்னிக் முடிகிற வரை கூட பிஸிகல் டைரக்டர் உண்டு. பையன்களின் ஃபேவரிட். அவர் சிரிக்க வைத்து விடுவார். ஐயாக்கண்ணு அவர் இல்லாமல் கூட நிலைமையை சுமுகமாக்கி விட முடியும்.

ஆனால்... ஆனால்...

அவருள் ஒரு குற்ற உணர்வு கனத்தது. அது நேரடியாக அவர் சம்பந்தப்படாதது தான். படையெடுத்து வந்ததும் கோயில்களை இடித்ததும் கொள்ளை அடித்ததும் இஸ்மாயில் அல்ல. இஸ்மாயில் அல்ல.

எனினும் இப்போது அவனுக்கு ஒரு மௌன தண்டனை. தனக்கும் கூடத்தான்.

பாரஸ்ட் பங்களாவில் படியேறி வராந்தாவில் காலை வைக்கும் போது தன்னையறியாமல் அவர் முகம் திரும்பி நெடுந்தீயைப் பார்த்தார்.

இன்னும் நெருப்பு புகைந்து கொண்டிருந்தது.

கதைக் கருவுக்கு யோசனை வழங்கிய வாசகர்: பி. பாஸ்கரன், கோவை.



• உமா ரங்கநாத்

• பாபு





• தாரணி — உதயன்



90-ல் நுழைந்தவர்களுக்கு 91 எப்படி..?



தமிழ்த் திரையுலகில் போன வருடம் நுழைந்தவர்கள் சிலரைச் சந்தித்து, 'இந்த வருடம் எப்படி இருக்கும்?' என்று கேட்டோம்:

சுமா ரங்கநாத்: கன்னடப் படவுலகில் ஏற்கெனவே பெயரெடுத்தவர். 'புதுப் பாட்டு' மூலம் தமிழில் அறிமுகமானவர். அந்தப் படம் 'ஹிட்' ஆகாவிட்டாலும் சுமா, 'ஹிட்' ஆகிவிட்டார்! ஏ.வி.எம். உள்படப் பல பெரிய 'பானர்'களுக்கு நடிக்கவிருக்கிறார். "ஏ.வி.எம்.மின் 'மாநகரக் காவல்' படத்தில் விஜயகாந்துடன் நடிக்கிறேன். பெரிய கம்பெனிகளுக்குப் பணியாற்றினால் நல்ல பெயரும் புகழும் கிடைக்கின்றன. இன்னும் அரை டஜன் படங்கள் 'புக்' ஆகியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, 'பெரும்புள்ளி,' 'மேட்டுப்பட்டி மிராசு'" என்கிறார் சுமா.

தாரணி, உதயன்: 'பாலைவனப் பறவைகள்' படத்தில் அறிமுகமான இந்த ஜோடி 'அன்புச் சங்கிலி'யிலும் நடிக்கப் போகிறது — ஆனால் ஜோடியாக இணைந்து அல்ல! தவிர, தாரணிக்கு மேலும் இரண்டு தமிழ்ப் படங்கள் கையில் உள்ளன. உதயன் தெலுங்கு திசையில் போய்விட்டார்.

'பாலைவனப் பறவைகள்' வேறு பல புது முகங்களையும் ஃபீல்டுக்குக் கொண்டு வந்தது. உதாரணம்: இசையமைப்பாளர் இளையகங்கை, படத்தொகுப்பாளர் இளங்கோ (இளையகங்கை இளையராஜாவின் அண்ணன் மகன்.) 'அன்புச் சங்கிலி' இவர்களையும் பிணைக்கப் போகிறது!

லட்சுமிகாந்த்: "தொடர்ந்து வில்லன் வேடங்கள் கிடைத்தாலே நான் வாழ்வு பெற்றுவிடுவேன்" என்கிறார் லட்சுமிகாந்த். 'தீச்சட்டி கோவிந்தன்' என்ற பொங்கல் ரிலீஸ் படத்தில் இவர்தான் பிரதான வில்லன். 'கிழக்கே வரும் பாட்டு' படத்திலும் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் மலையாளத்தில் சதம் + 20 போட்டு, தெலுங்கு, இந்தியையும் எட்டிப் பார்த்துவிட்டு வந்திருக்கும் லட்சுமிகாந்த்.



• வசந்த்



• திவ்யபாரதி

ரமா: பாரதிராஜாவின் கதாநாயகிகள் யாருமே சோடை போனதில்லை என்ற சரித்திரத்தை மாற்றியவர்! 'என்னுயிர்த் தோழ'னுக்குப் பிறகு இவருக்குப் பெரிய படங்கள் வரவில்லை. கையில் படங்கள் இல்லாவிட்டாலும் கவலைப்படாமல் இருக்கிறார். "புத்தாண்டு, பொலிவுடன் நல்லாண்டாக மலரும் என்று எதிர்பார்க்கிறேன். என்னை அடையாளம் காட்டிய பாரதிராஜா அவர்களே மீண்டும் எனக்கு நல்லதொரு வாய்ப்புத் தருவார்" என்கிறார் ரமா.

பாபு: 'என்னுயிர்த் தோழனா'ல் உயர்ந்த கதாநாயகன்! மகிழ்ச்சியுடன் நம்மை வரவேற்றார். "முதல் நிலைக் கதாநாயகனாக



"என்னடா, நேத்து உன் நண்பனுடைய தங்கைக்குக் கல்யாணம் சிறப்பா நடந்ததா?"

"கல்யாணமெல்லாம் ஜாம் ஜாம்னு தான் நடந்தது. ஆனால் ஒரு குறை: செருப்புக்கு 'டோக்கன் ஸிஸ்டம்' ஏற்பாடு பண்ணிட்டாங்க...!"

— அ. தெய்வசிகாமணி.

வேண்டும் என்ற எனது ஆசை நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இப்போது சுமார் ஆறு படங்களில் நடித்து வருகிறேன். 'தாயம்மா,' 'பெரும்புள்ளி,' 'பொண்ணுக்குச் சேதி வந்தாச்சு' ஆகியவை குறிப்பிடத்தக்கவை..." — சந்தோஷப்படுகிறார் பாபு.

திவ்ய பாரதி: படம் வெளியாவதற்கு முன்பே பெயரெடுத்த நடிகை உண்டானால் அது இவர்தான்! 'நிலாப் பெண்ணே' ஓடியதும் இவரால்தான் என்று அடித்துச் சொல்லலாம். "தற்சமயம் தமிழில் எனக்குப் படங்கள் இல்லாவிட்டாலும் சந்தோஷமாக இருக்கிறேன்; தெலுங்கில் நிறைய வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அதனால் அதிக பணமும் புகழும் கூடக் கிடைக்கின்றன! தமிழ் — தெலுங்கு — இந்தி என்று மாறிப் போய் வேரூன்றுகிறார்கள் இல்லையா? நானும் அவ்வழியைப் பின்பற்றுகிறேன்" என்கிறார்.

வசந்த்: அதிரடி அறிமுக இயக்குனர்! கேட்டால், "ஒரு படம் முடிந்த பிறகுதான் அடுத்ததை எடுத்துச் செய்வேன்," என்கிறார். "இப்போது கவிதாலயாவுக்காக 'நீ பாதி நான் பாதி' என்ற படத்தை இயக்கி வருகிறேன். விவேக் சித்ராவுக்காக இன்னொரு படம் செய்ய ஒப்புக் கொண்டுள்ளேன். அதிகமாக ஒப்புக் கொண்டு அவஸ்தைப்பட நான் தயாராயில்லை. ஒவ்வொரு படமும் எனக்குப் பெயர் வரும்படியாக அமைய வேண்டும் என்பதே என் ஆசை." வசந்தின் வைராக்கியம் நீடித்து நிலைக்கட்டும்!

— சலன்.

அருள்வாக்கு



அஸுரன் என்று வெளியில் யாருமில்லாமல் ஸர்வ ஜனங்களுக்குள்ளேயும் புகுந்து கொண்டிருக்கும் போது எப்படி ஸம்ஹரிப்பது? விச்வாமித்ரருக்கு யாகம் செய்யணுமென்று தர்மமான எண்ணம் இருந்தது. அஸுரர் என்று வெளியிலே இருந்த சிலர் இடைஞ்சல் பண்ணினார்கள். ராமர் போய் அவர்களை வதைத்து — துஷ்க்ருத்களை விநாசம் செய்து — யஜ்ஞ ரக்ஷணமும் ஸாது பரித்ராணமும் பண்ணினார். கலியில் விச்வாமித்ரர் இருந்தால் அவருடைய மூளைக்குள்ளேயே அஸுரன் போய், முதலுக்கே அவருக்கு யாகம் செய்யத் தோன்றியிருக்காது! இப்படி தர்ம கார்யங்கள் அரூபமான துஷ்ட சக்திகளால் நின்று போய் விடுகிற ஸமயத்தில் ஓர் அவதாரத்தைக் கொண்டு துஷ்ட சிக்ஷணம், சிஷ்ட ரக்ஷணம், தர்மோத்தரணம் ஆகியவற்றைச் செய்வதென்றால் எப்படி?

நம்மாலானால் இதற்கு ஸொல்யூஷன் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். பரமாத்மாவின் அவதாரமான ஆதி சங்கரரானதால் ஸுலபமாகக் கண்டு பிடித்து விட்டார்! "கலிகால அவதாரங்களில் துஷ்ட ஜனங்களை ஸம்ஹரிப்பதில்லை. ஜனங்களுக்குள்ளே புகுந்து கொண்டிருக்கும் துஷ்டத்தனத்தையே ஸம்ஹரிக்க வேண்டும். இப்படிப் பண்ணி ஜனங்களை நல்லவர்களாக்கி விட வேண்டும். 'விநாசாய சதுஷ்க்ருதாம்' — கெட்ட கார்யம் செய்பவர்களுடைய அழிவின் பொருட்டு, — என்பதற்கு ஓர் அமெண்ட்மெண்ட் போட்டு விட்டால் போதும். 'துஷ்க்ருதாம்' (கெட்ட கார்யம் செய்பவர்களுடைய) என்பதை 'துஷ்க்ருத்யானாம்' (கெட்ட கார்யங்களுடைய) என்று 'அமெண்ட்' செய்து விட்டால் போதும்" என்று (பரமாத்மா — ஆதிசங்கரர்) ஸொல்யூஷன் கண்டுபிடித்து விட்டார்!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அரசியலே சினிமாதான்; சினிமாவே அரசியல்தான்!

●● 'லெட்' மோகம் மாறி அசல் லொகேஷனுக்குப் போனது போல் இப்போது கதாபாத்திரங்களுக்கு அசல் ஆசாமிகளைப் பிடித்துப் போடுகிறார்கள். 'இந்திர ஜாலம்' என்ற மலையாளப் படத்தில் ஒரு போலீஸ் கமிஷனர் ரோலுக்குக் கொச்சின் போலீஸ் கமிஷனர் ஏ.டி. ஜோஸையே நடிக்க வைத்திருக்கிறார்கள்! அவர்தான் படத்தில் முக்கிய வில்லன்! ஹீரோ மோகன்லால். இந்தப் போக்கு வளர்ந்தால் எங்கே போய் முடியுமோ!



• ஜனசக்தி — சாரதா.

●● 'மண்டல்' கமிஷன் அறிக்கையை அமுல்படுத்த அரசு முயற்சி செய்கிறது. உடனே ஓர் அமைச்சர், ''இது பிற்படுத்தப்பட்டவர்களின் வோட்டைப் பெறப் போடப்பட்ட திட்டம். மற்ற ஜாதியினர் என்ன பாவம் செய்தார்கள்?'' என்று எதிர்ப்புத் தெரிவிக்கிறார். மக்களும் போராட்டத்தில் குதிக்கிறார்கள். விளைவு, அரசு கவிழ்ந்து விடுகிறது. அந்த அமைச்சர் ஆட்சியைப் பிடித்து விடுகிறார்... இது என்ன, இப்போதைய அரசியல் நிலவரத்தைச் சொல்லுகிறீர்களா, என்கிறீர்களா? இல்லை. இது ''உட்சமம்'' என்ற தெலுங்குப் படத்தின் கதை. பானுசந்தர் — யமுனா நடிக்கும் ''உட்சமம்' தமிழில் 'அரசியல்வாதி' என்று மொழி மாற்றப்பட்டு வெளிவரவிருக்கிறது. நம் நாட்டில்தான் அரசியல் எது, சினிமா எது என்றே புரியாமல் எல்லாமே ஒன்றாகிப் போய் விட்டதே!



• அரசியல்வாதி — பானுசந்தர்; யமுனா.

●● நடிகை சாரதா இன்னும் கூடத் தெலுங்கில் கதாநாயகியாகவே வலம் வந்து கொண்டிருக்கிறார். அங்கு நடுத்தர வயதானவர்களுக்கும் நாயகி வாய்ப்புக் கிடைப்பதற்குக் காரணம், சமீப காலமாகத் தெலுங்குப் பட உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் 'அரசியல் பின்னணி' கொண்ட கதைகள்தாம். சத்தியரெட்டி டைரக்ஷனில் ''நாயக்கராலு'' படத்தில் 'முதலமைச்சராக' நடித்தார் சாரதா. படம் ஹிட். (தமிழில் இதை 'ஜன சக்தி' என்று டப் செய்துள்ளார்கள்) இதைத் தொடர்ந்து அமைச்சர், எம். எல். ஏ., எம். பி. என்று கதாநாயகியாகவே இரண்டு மூன்று படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இங்கு அம்மா, அக்கா என்று நடித்துக் கொண்டிருக்கும் மாஜி கதாநாயகிகள் தெலுங்குக்குப் போகலாமே?

— எஸ். பாலு.

மாணவர் கட்டுரைப் போட்டி:

உடம்பு தெளித்த தொலைபேசி!

ரூ. 50 பரிசு பெறும் கட்டுரை

பதினைந்து நாட்களாகக் கோமாவில் கிடந்த தொலைபேசி ஒரு வழியாய் உடம்பு தெளிந்து மூச்சு விட்டது. சிலருக்கு உயிர் போனது. சிலருக்கு உயிர் வந்தது. உயிர் போனது ஹாஸ்டல் வாட்ச்மேனுக்கு. ஏனெனில் அவருக்கு எதிரில் உள்ள மேசையில்தான் தொலைபேசி உள்ளது. உயிர் வந்தது தொலைபேசி மூலமாகவே தொடர்பு ஏற்படுத்தியிருந்த எங்கள் மாணவர்களுக்கு.

ராங் நம்பர் ஏற்படுத்துவதில் எங்கள் தொலைபேசிக்கு எதுவும் ஈடாகாது. எனவே ராங் நம்பர் மூலமாகவே பல ரைட் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர் எங்களில் பலர். இத்தகைய தொடர்புகளில் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால், ராங் நம்பர் மூலம் ஒரு ரைட் தொடர்பை ஏற்படுத்தி, பலப்படுத்திக் கொண்டபின், அந்த ராங் நம்பர் தொடர்பின் ரைட் நம்பரை அடித்தால் வேறொரு ராங் நம்பர் வரும். எனவே நாங்கள் ஒவ்வொரு தொடர்புக்கும் ரைட் நம்பர், ராங் நம்பர், ரைட் நம்பர் மூலம் கிடைக்கும் ராங் நம்பர் ஆகிய மூன்றையும் வைத்திருப்போம்! "ஒரு ராங் நம்பர் தொடர்புக்குரிய ரைட் நம்பரைக் கூப்பிட, அதன் ராங் நம்பரைத்தான் கூப்பிட வேண்டும்" என்பது நாங்கள் மனப்பாடம் செய்துள்ள பௌதிக டெலிஃபோன் சூத்திரம்.

ஒரு வழியாக வேலை நிறுத்தம் முடிவுற்றதும் டெலி நண்பர்களாகிய நாங்கள், எங்களுடைய நண்பிகளுடன் பேச ஆவலுடன் 'ராங்கனை' (Wrongcon—தொலைபேசியின் செல்லப் பெயர்) நோக்கிப் பாய்ந்தோம். என்ன ஏமாற்றம் வேலை நிறுத்தம் முடிந்ததும் நடந்த சீரமைப்புப் பணியில் எங்கள் லைனும் சரிபார்க்கப்பட்டு விட்டது. இப்போது ராங் நம்பரே கிடையாது! தவித்துப் போனோம். எங்கள் தொடர்புகள் அறுந்தன. 'ராங்கன்' தனது பட்டத்தை இழந்தான்.



இருப்பினும் எங்கள் தொலைபேசி விரைவில் பழையபடி ''நன்கு'' வேலை செய்யும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

— வி. பி. மாதவன்,
மின்னணுவியல் மற்றும் தொடர்பியல்,
இறுதியாண்டு,
அரசினர் பொறி இயற் கல்லூரி,
சேலம்.

டயலாய்ச் சுற்றிய தலை!

கோமாவில் கிடந்த தொலைபேசி ஒரு வழியாய் உடம்பு நெளித்து மூச்சு விட்டது. குழலினிது, யாழினிது இளையராஜா இசையினிதுக்குப் பிறகு அன்று காதில் ஒலித்த தொலைபேசி மணியோ இனிதோ இனிது. தொட்டு டயல் செய்த போது உடல் சிலிர்த்தது. காதலியைத் தொடுவது போல். எல்லோர் வீட்டுக்கும் போன் செய்து உடல் நலம் + டெலிபோன் நலம் எல்லாம் விசாரித்தாயிற்று. எல்லா பரபரப்பும் அரைநாள் தான். பிறகு? மணியடித்ததும் ஓடி வந்து எடுக்கையில் தொலைபேசி அடுத்த, எதிர்த்த வீடுகளை அழைத்துக் கொஞ்சிச் சிரித்தது. வெறுப்புற்று மணி அடிக்கும் போது தாமதித்தாலோ, எடுப்பதற்கு முன் நின்று 'யாராக இருக்குமோ?' என்று யோசனை பண்ண வைத்து மண்டையைக் குடைந்தது! கைக் குழந்தை போல் அடிக்கடி சிணுங்கி வீட்டின் அமைதியைக் கெடுத்தது. அம்மா, ''என்ன சனியன் இது ஓயாமல்!'' என்று உரிமையோடு திட்ட ஆரம்பித்தாள். அதற்கெல்லாம் சளைக்காமல் அது பாதி நேரம் தெருவில் குடியிருக்கும் ஏகப்பட்ட பேருடன் உறவு கொண்டாடியது. மீதி நேரம் அவர்கள் (ஓசியில்தான்) உறவு கொண்டாடினார்கள். எங்கள் கொடைத் தன்மையைப் புகழ்ந்தே வாயை அடைத்தார்கள்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல் இன்று வந்த தொலைபேசி பில்லைப் பார்த்ததும் எங்கள் தலை டயலாய்ச் சுற்றியது. ஒரு மாதமாய் பெட் ரிடனாய் இருந்த டெலிபோனுக்கு பில் ஆயிரம் ரூபாய்!

இப்போது டிரிப்ஸ் ஏற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது நாங்கள்தான்.

பிளீஸ் யாராவது டெலிபோனுக்குப் பழையபடி கோமா வர ஒரு வழி சொல்லுங்களேன்!!

— எஸ். அதுலன்,
எம். எஸ்ஸி (கணிதம்) இரண்டாமாண்டு,
மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரி,
சென்னை — 1/14.

இயக்குநர் இருள் பாரதி அவர்களே!
உனக்கு ஒண்ணு சொல்லட்டுமா?
சொன்னாக் கோவிச்சுக்காதே,
படத்தைப் பார்த்தாக்க
என்னத்தை எடுக்கிறே நீ?
மூளை மழுங்கிடிச்சா?
அறிவிருக்கா உனக்கு?
இதுவா உன் தரம்?
உகரை வாங்கிட்டயே!
இனிமே எடுக்காதே!
கோபத்தைக் கிளப்பாதே!
எடுத்தா நான் விட மாட்டேன்!
இதுதாண்டா செருப்பு
துடைப்பம் கிடைச்செச்சி
ஓங்கி ஒண்ணு வைச்சா
படவா, நீ 'பீஸ்' ஆயிட்டே

ஆகிய வெற்றிப்படங்களைத் தந்த உங்களைப் பாராட்டுவதில் பெருமையடைகிறேன்!

— அகிலா கார்த்திகேயன்.



தவித்துப் போன தலைவர்கள்

பதினைந்து நாட்களாக 'கோமா'வில் கிடந்த தொலைபேசி ஒரு வழியாய் உடம்பு நெளித்து மூச்சு விட்டது. இந்தப் பதினைந்து நாட்களுக்குள் மக்களும் தலைவர்களும் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமா?

அரசியல் தலைவர்களுக்குச் சாதாரணமாக மிரட்டல்கள் தொலைபேசியில்தான் வருவது வழக்கம். இந்தப் பதினைந்து நாட்களும் தபாலில்தான் வந்தன. மிரட்டுபவர்கள் தபாலில் எழுதி அனுப்ப, பாவம், எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள்! எனக்கு ஃபோனில் மிரட்டல் வருகிறது என்று பெருமையோடு போன் பண்ணிப் பத்திரிகைக் காரியாலயத்துக்குக் கூற முடியாத தலைவர் எத்தனை வேதனைப் பட்டிருப்பார்! ஒரு அரசியல் தலைவர் வழக்கம் போல் என்னுடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகின்றது என்று மேடை ஏறி அறிக்கை விட்டு விட்டார். விசாரித்த சி. பி. ஐ. தொலைபேசி கோமாவில் இருக்கும் போது ஒட்டுக் கேட்க முடியாது. எனவே அந்த அரசியல்வாதி சொன்னது பொய் என்று கண்டுபிடித்தனர்.

— ஐ. எஸ். எம். அரசு,
முதுகலை முதலாம் ஆண்டு (தமிழ்)
எம். டி. டி. இந்து கல்லூரி,
திருநெல்வேலி — 10.

எல்லோரும் பாராட்டி போற்றும் புத்தகம்!



நாடோடியின் **ஆன்மிகச் சிந்தனைகள் 592 பக்கங்கள்** விலை ரூ. 55/- தினமணியில் வெளியான 365 ஆன்மீகம் கட்டுரைகளை தொகுத்தது. இந்தப் புத்தகத்தை எடுத்தால் ஒரே மூச்சில் படித்து முடித்துவிடவேண்டும் என்று எண்ணத்தோன்றும் ரூ. 55/- M.O. செய்தால் எங்கள் செலவில் புத்தகம் அனுப்புகிறோம். V.P.P. செலவு தனி. **வெளிவந்து பரபரப்பாக விற்பனையாகிறது.** ஜோதிட ரத்னா மயிலை பூபதிராஜன் (A.M. பிள்ளை) எழுதிய ராசி பலன் 1991 ஆம் ஆண்டு 12 ராசிக்கும் ஒரே புத்தகமாக வெளிவந்துவிட்டது. தரமானது. துல்லியமானது. உள்ளது உள்ளபடியே பலிதமாகக் கூடியது என்று படித்தவர்கள் பாராட்டி எழுதுகின்றனர். விலை ரூ. 6/-. M.O. செய்யவும் புத்தகத் தபாலில் அனுப்புகிறோம். வி.பி.பி.யில் ரூ. 8/- க்கு அனுப்புகிறோம்.

தமிழ் நாட்டின் பிரபல நாவலாசிரியர்கள் சுஜாதா, பாலகுமாரன், பட்டுக்கோட்டை பிரபாகர், ராஜேஷ்குமார், சுபா, மணியன், கலாதர், சத்தியப்பிரியன், வாஸந்தி, இந்துமதி, லட்சுமி ராஜரத்னம், சீதா பென்னெட் நாவல்களின் தேவைக்கு எழுதவும்.

- சென்னை காயிதே மில்லத் பெண்கள் கல்லூரியில் 4.1.91 முதல் 14.1.91 முடிய நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் எங்கள் புத்தகங்கள் யாவும் கிடைக்கும்.

(குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001.)

12

சிகரங்களை நோக்கி...

உணர்ச்சிவசப்பட்ட ஓவியாவை அப்போதுதான் அவன் பார்த்தான்.

நிலவு தளும்புமா?

தென்றல்கூட வீசாமல் நின்று வேலை நிறுத்தம் செய்யுமா?

நட்சத்திரங்கள் கூட நனையுமா?

அவன் விழிகளில் ஒரு சோகமேகம் ஒரு துளி மழைசிந்தி உடனே கலைந்தது.

திருஞானம் திகைத்தான்.

இப்போது காயங்கள் இல்லாத இடத்திலும் அவனுக்கு வலித்தது.

''புண்படுத்தி விட்டேனா?

விழியிழந்தவர் என்று தெரியாமல் 'உங்கள் கண்கள் நலமா' என்று கேட்டுவிட்டேனா?

பெண்மயிலைப் பார்த்து 'உன் தோகை சுகமா' என்று விவரந்தெரியாமல் விசாரித்து விட்டேனா?''

பேச நினைத்து, தொண்டைக் குழிக்குள் அவன் தேக்கிய வாக்கியங்கள் வழுக்கி விழுந்தன.

''ஓவியா! உன் தந்தை ஏதேனும் விபத்தின் விஷப் பள்ளத்தில் விழுந்து விட்டாரா?

அம்மாவைப் பார்த்ததும் மண்தின்னும் குழந்தை தன் கையை மறைத்துக் கொள்வது மாதிரி அவள் தன் கண்ணீர்த் துளிகளை புறங்கையால் மறைத்துக் கொண்டே பொருமினாள்.

''இல்லை; அது விபத்தில்லை. விபத்தில் பெரும்பாலும் உறுப்புகள் மட்டுமே ஊனமுறும்.

வைரமுத்து

ஆனால் அது என் தந்தையின் உள்மனத்தை ஊனப்படுத்தியது.

அது விபத்தில்லை; வினை.''

''விளங்கவில்லை.''

''நான் இன்னும் விளக்கவேயில்லை. கடல்நீரைக் குடிநீராய் மாற்றும் நுண்ணுயிர்களைக் கண்டறியும் முதற்கட்ட ஆராய்ச்சி நோக்கி என் தந்தை முன்னேறிக் கொண்டிருந்தார்.

ஜெனீவாவில் நிகழவிருந்த அகில உலக விஞ்ஞானிகள் மாநாட்டுக்கு இந்தியா அவர் பெயரை மட்டுமே முன்மொழிவதாய் இருந்தது.

ஆனால் பொறாமையின் பொய்மை அவரது பெயரை அடித்தெழுதியது.''

''பொறாமைக்கு என்ன காரணம்?''

''விதை மட்டும்தான் விதைக்கிறோம்;



களையும் முளைக்கிறதே! என்ன காரணம்?

விளக்கைத்தான் ஏற்றுகிறோம். ஆனால் அது கூட
புகை என்னும் கறுப்பு எச்சில் துப்புகிறதே! என்ன காரணம்?

மரங்களைத்தான் நட்டோம்; ஆனால் சிலுவைகள்
விளைந்தன. என்ன காரணம்?

பொறாமை என்பது மனத்தின் மலம்.

பொறாமை என்பது மரணத்தின் கருப்பை.

தன்னம்பிக்கை அழிந்தவன் எவனோ
அவனே பொறாமையின் புத்திரன்;
அவனே பொறாமையின் பிதா.

பொறாமை என்பது தோல்வியின் தொடக்கம்;
தோல்வி என்பது பொறாமையின் முடிவு.''

''யார்...? யார் பொறாமை கொண்டது?''

''என் தந்தையோடு இருந்த ஒரு விஞ்ஞானி;
வெளியுறவு அமைச்சரின் உள்நாட்டு உறவினர்.

அவர் என் தந்தையின் கோப்பு திருடித் தன் பெயரெழுதினார்.

ஒரே ராத்திரியில் நடந்து முடிந்தது நம்ப முடியாத ஒரு மகாபாரதம்.

அர்ச்சுனன் அம்பை — திருதராஷ்டிரன் திருடிக் கொண்டான்.''

''எப்படி அது சாத்தியம்?''

''எது சாத்தியமில்லை.

இங்கே அதிகாரமணி அடிக்கிற திசையில்
மட்டுமே அசோகச் சக்கரம் ஓடுகிறது.

தங்க எலும்புகள் விட்டெறிந்தால் போதும்;
ஸ்தூபிவிட்டு இறங்கிவந்து சிங்கங்கள்
வால் குழைக்கும்.

அரிச்சந்திரனைப் பொய்யன் என்று
நிரூபிக்க ஓர் அரசாங்க முத்திரை போதும்.

இந்த மண்ணில்தான் உண்மைகள் கூடத்
திருடப்படுகின்றன.

என் தந்தையின் விஞ்ஞானம்
திருடப்பட்டது.

என் தந்தைக்குப் பிறந்த குழந்தையை
ஓர் அலி தனதென்று கொண்டாடிக் கொண்டதைக்
கூடச் சகித்துக் கொள்ள முடிந்தது. ஆனால்
அந்த அலி என் தந்தையின் அறிவின்
ஆண்மையைச் சந்தேகித்துச் சந்தி சிரிக்க
வைத்ததைத்தான் சகித்துக் கொள்ள
முடியவில்லை.

மனிதனுக்கு இன்னொரு வாழ்க்கையை



ஈன்று கொடுக்கும் ஒரு கருவைச் சுமந்து வந்தார் என் தந்தை.

ஆனால் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு முட்டையில் இடிவிழுந்த மாதிரி அவர் முற்றும் உடைந்து போனார்.

நின்று போனது வார்த்தை.
நிலைத்துவிட்டது பார்வை.
உடைந்து போனது வாழ்க்கை.
உறைந்து போனது காலம்.

வாழ்வதற்கு இந்த வானத்தின்கீழ் எதுவுமே இல்லை என்ற தப்பான முடிவுக்கு அவர் தள்ளப்பட்டார்.

இறகை இழந்த ஈசல் ஊர்ந்து ஊர்ந்து வருவது மாதிரி மௌன நடை போட்டு இந்த மலையூத்துக்கு வந்தார்.

"இந்த மலைபூமிக்கு வந்த நோக்கம்?"

"உடம்பில் உயிர் இருக்கும் இடத்தை எப்படி உணர முடியவில்லையோ அப்படி அவர் அடிமனசின் ஓட்டத்தையும் அறிய முடியவில்லை.

ஒரு வேளை... தனிமையின் கர்ப்பப்பையில் புகுந்து இன்னொருமுறை ஜனிக்க வந்திருக்கலாம்.
வார்த்தைகளால் விளைந்த வடுக்களுக்கு
மௌன ஒத்தடம் கொடுக்க வந்திருக்கலாம்.

தாளிப்புவாசனை பிடிக்காத கர்ப்பிணிகள் மாதிரி
மனிதவாசனை பிடிக்காமல் இங்கு மறைந்துவாழ வந்திருக்கலாம்.

இருந்தாலும் அவர் ஆராய்ச்சிச் சங்கிலி இன்னும் அறுந்துவிடவில்லை என்றே நினைக்கிறேன்."

"எப்படி?"

"இந்தப் பறவைகள் — இந்த வெள்ளெலிகள் — இந்த முயல்கள் எல்லாம் அவர் ஆராய்ச்சியின் உயிர்ச் சாட்சிகள்.

அவருக்குப் பாஷை மறந்து போனது;
அவருக்கு மனித பாஷை மறந்து போனது;
விலங்கு பாஷை விளங்கிப் போனது."

"என்னதான் அவரது வாழ்க்கை முறை?"

"சொல்லாத வார்த்தைக்குப் பொருள் ஏது?
இல்லாத வாழ்க்கைக்கு முறை ஏது?

எப்போதாவது எதிரெதிர் திசையில் செல்லும் ரயில்களைப் போல நாங்கள் சந்தித்துக் கொள்கிறோம்.

அவர் தன்னிலிருந்து பூமியைத் துண்டித்து விட்டார்.
சூரியனுக்குத் திரை கட்டிக் கொண்டார்.

ஒன்று மட்டும் நிச்சயம்...

அவருக்கு இப்போது சாலைகள் இல்லை;
ஆனால் அவர் பயணங்கள் முடியவில்லை."

"உணவு...?"

"கனவு.
எப்போது கனவு வரும்? எவருக்கும் தெரியாது.
அவர் எப்போது உணவு கொள்வார்?

எனக்கும் தெரியாது.

கடவுளுக்குப் படையல் இடுவது மாதிரி அவர் உணவை
நிலவறை வாசலில் நான் நித்தம் வைப்பேன்.

பல நேரங்களில் கடவுள் மாதிரியே அவரும் அதைத் தொடுவதில்லை.

எது உதயம் எது அஸ்தமனம் என்று தீர்மானிக்கிற வசதி இப்போது அவர் வாழ்க்கையில் இல்லை."

திருஞானம் புன்கணோடு புன்னகைத்தான்.

"அவரும் என் ஜாதிதான் போலும்."

ஒவியா மறுத்தாள்.

"இல்லை; இருவருக்கும் வேறுபாடு இருக்கிறது."

"என்ன...? என்ன வேறுபாடு?"

"அவர் — வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு பூமியின் கீழே
தேடிக் கொண்டிருப்பவர்.

நீங்கள் — வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு வானத்தின் மேலேதேடிக்கொண்டிருப்பவர்.

திருஞானத்தின் கண்களில் கோபங்கள் கோடுபோட்டன.

"இன்னும் என்னைக் கானல் நீரில் மீன் பிடிப்பவன் என்றே
கருதுகிறாயா ஒவியா?"

"இல்லை; இல்லை. கானல் நீரில் பிடித்த மீனைக் கனவுகளில் நழுவ விட்டவர் என்றே கருதுகிறேன்."

திருஞானம் பிசிறடிக்காத ஒரு பெருமூச்சு விட்டான்.

"என்னை மனிதக் கணக்கிலேயே வரவு வைக்க மாட்டாயா ஒவியா?"

"எப்படி...? எப்படி வைப்பேன்.

தன் உலைகளில் நட்சத்திரங்கள் வேக வேண்டுமென்று ஆசைப்படுகிறவரை எப்படி நான் மனிதக் கணக்கில் எழுதி வைப்பேன்?"

நீங்கள் உழைக்க வேண்டும்! உழைப்பவன் மட்டும்தான்
யதார்த்தவாதியாய் இருக்க முடியும்.

வியர்வைக் காசுகளை ஈட்டாதவனுக்கு வெள்ளிக் காசுகளைச் செலவழிக்க உரிமையில்லை. நீங்கள் இப்போது ஒரு விளிம்பின் விளிம்பில் நிற்கிறீர்கள். இனிமேல் எட்டு வைக்க இடமில்லை தெரியுமா?''

''ஏன் இல்லை?''

''உங்கள் வீடு விழுந்து விட்டது. உடைமைகள் உடைந்து போயின.

உங்கள் ஜோல்னாப்பை கிழிந்ததில் கனவுகள் கசிந்து வழிந்தோடிவிட்டன.

இப்போது மிச்சமிருப்பவை — நீங்களும் நிஜமும் மட்டும்தான்.

அவன் மிரண்டான்.

அவன் கண்களுக்கு மேலே மொய்த்துக் கொண்டிருந்த பதினாயிரம் பட்டாம் பூச்சிகள் பறந்தோடி மறைந்தன.

அவன் இதயச் சிலேட்டின் கிறுக்கல்கள் ஒவ்வொன்றாய் அழிந்தன.

அவன் தலையில் யாரோ சம்மட்டி கொண்டு தட்டியதில் மூளைக்குள்ளே துருப்பிடித்துக் கிடந்த ஆணிகள் துருத்திக் கொண்டு வெளிவந்தன.

அவன் சிகிச்சை தொடர்ந்தது.

''நாளை உங்களுக்கு உடை வேண்டும். மேகத்தைக் கத்திரித்துத் தைத்து நட்சத்திரப் பொத்தான் வைத்துப் போட்டுக் கொள்ள முடியாது.

நாளை உங்களுக்குப் பசியெடுக்கும். உங்கள் இரைப்பை கனவுகளால் நிரம்பாது.

உங்களுக்கும் தாகமெடுக்கும். நிலாக்கனி பிழிந்து வெண்ணிலா பானம் பருக முடியாது.

உங்களுக்கும் வீடு வேண்டும்.

வானத்தைக் கொஞ்சம் கிழித்துக் கூடாரம் போட்டுக் குடியிருக்க முடியாது.

சாட்டையடி பொறுக்காமல் நெளிந்து கொடுக்கும் மாட்டைப் போல, யதார்த்தத்தின் சூட்டைப் பொறுக்க முடியாமல் அவன் புரண்டு புரண்டு படுத்தான்.

''என்னை என்ன செய்யச் சொல்கிறாய் ஓவியா... என்ன செய்யச் சொல்கிறாய்?''

விம்மி வெடித்தது வினா.

''உழைக்க வேண்டும் என்கிறேன்; உடம்பை வளைக்க வேண்டும் என்கிறேன்.

'நவதான்ய' வருடமாக இருந்தாலும் வியர்வை சிந்தாமல் விளையாது என்கிறேன்.



''நம்ம தலைவர் பிழைக்கத் தெரிந்தவர்!''

''எப்படிச் சொல்றீங்க?''

''எடைக்கு எடை மலம் கேட்கிறாரே!''

— எஸ். முகம்மது யூசுப்.

கனவுகளை நேசிக்கக் கூடாது என்பதில்லை;
கனவுகளையே சுவாசிக்கக் கூடாது என்கிறேன்.

வானத்தில் எவ்வளவு தூரம் பறந்தாலும் தன் கூடு பூமியில் என்பதை பறவை மறந்து விடுவதில்லை.

மனிதன் மறந்து விடுகிறான்.''

தலையில் கட்டியிருந்த காயத்தின் கட்டைக் கைகளால் பிய்த்தெறிந்துவிட்டு,

''உழைக்கிறேன் ஓவியா! உழைக்கிறேன்'' என்று திசைகிழியக் கத்தினான் திருஞானம்.

ஓவியா உணர்ச்சிவசப்படவில்லை.

பாவ மன்னிப்பு வழங்கும் பாதிரியாரின் மனநிலையில் அவள் இருந்தாள்.

''ஆமாம் திருஞானம்! உழைப்பு என்பது பிறப்பின் கடமை.

உழைப்பவன் வசிப்பதற்கு மட்டும்தான் பூமிக்கு மேலே இடம் இருக்கிறது.

உழைக்காதவர்கள் வசிப்பதற்கான இடம் பூமிக்குக் கீழே இருக்கிறது.''

''ஓவியா! உன்னை ஒன்று கேட்கவா?''

''கேளுங்கள்.''

''எனக்கென்று ஓர் இடம் அமைத்துக் கொள்ளும் வரைக்கும் உங்கள் இல்லத்தில் எனக்கோர் இடம் இருக்குமா?''

ஓவியாவின் உதடுகள் மீண்டும் புன்னகை பூட்டிக் கொண்டன.

'உங்களுக்கான இடம் உள்ளத்திலேயே இருக்கிறதே!

இல்லத்தில்தானா இருக்காது?''

(— இன்னும் செல்வேன்)

சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!



பதவிக்கு; மூளை ஏது?

● முப்பது பேர் மதுரைக்குச் சுற்றுலா போனோம். அனைவரும் ஒரு பெரிய ஹாலில் தங்க வேண்டியிருந்தது. எங்கள் குழுவின் தலைவர் பெரிதும் சத்தமாகக் குறட்டை விட்டுத் தூங்குபவர்! இரவு அவர் குறட்டை சத்தத்தால் அனேகர் தூங்கவே முடியவில்லை. காலையில் எழுந்த அவர் காப்பி சாப்பிட்டுக் கொண்டே, "ராத்திரி நல்ல 'சவுண்ட் ஸ்லீப்' என்றார். உடனே, எங்கள் நண்பர் ஒருவர், "ஆமாம்! 'சவுண்ட்' எங்களுக்கு. 'ஸ்லீப்' உங்களுக்கு!" என்றார்!

'அவுட்டுச்' சிரிப்பு தூக்கமின்மையையும் மறக்க வைத்தது!

— டி. ரங்கநாதன், சென்னை — 41.

"எதுக்குத்தான் விழா எடுக்கிறதுன்னு விவஸ்தையே இல்லாம போச்சு."

"ஏன், என்னாச்சு?"

"தலைவர் பேத்தி முதல் முதலாகச் செருப்பு போடப் போகுதாம். "காலணி" விழா நடத்துறாங்க!"

—எஸ். அனுராதா, புதுக்கோட்டை.

● ஓர் அரசியல்வாதி வெளிநாடு சென்றிருந்த போது தலைவலிக்காக ஓர் ஆஸ்பத்திரியில் சோதனை செய்து 'மூளைக்கட்டி' என்று தெரிய வந்து, ஆபரேஷன் செய்து அனுப்பி வைத்தனர். ஊர் வந்து சேர்ந்து சில நாட்கள் கழித்து அந்த ஆஸ்பத்திரியிலிருந்து அவசரத் தந்தி வந்தது: "தங்களின் மூளை தவறுதலாக இங்கேயே தங்கி விட்டது. உடனே வந்து அதைப் பொருத்திச் செல்லவும்."

அதற்கு இவர் அனுப்பிய பதில்: "நான் தற்பொழுது பதவிக்கு வந்துவிட்டபடியால் எனக்கு அது

தேவையில்லை. பிறகு பார்த்துக் கொள்ளலாம்!''

— ஜெ. சாயிராம், திருச்சி.

டாக்டர்: உனக்கு ராத்திரியிலேயும் கனவு வருது; காலையிலேயும் கனவு வருது; மத்தியானத்திலேயும் கனவு வருதுன்னு சொல்றே! உன் பேர் என்னம்மா?

பெண்: சொப்னா!

— தனா, வேலூர் — 1.

● இரும்புப் பட்டறைக்கும், தகரக் கடைக்கும் நடுவில் உள்ள ஒரு வீட்டில் குடிபுகுந்த ஒருவர், அங்கு ஓயாமல் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்ததால் மிகவும் கஷ்டப்பட்டார். இரு வியாபாரிகளையும் அழைத்து அவர்கள் கடைகளை வேறு இடத்துக்கு மாற்றினால் தாம் விருந்து கொடுப்பதாகக் கூறினார். இருவரும் மறுநாளே வந்து இடம் மாறுவதாகக் கூறியதும் அன்றே விருந்தும் நடந்து முடிந்தது. மறுநாள் இரு கடைகளும் ஒருவர் இடத்தில் மற்றவர் மாற்றிக் கொண்டனர்.!

— வசந்தா சாரி, வேலூர் — 9.

ஸி. ஏ. பரீட்சை எழுதி பாஸ் செய்வது எவ்வளவு கஷ்டம் என்று அதை அனுபவித்தவர்களுக்குத் தெரியும். அப்படிச் சோர்ந்து போன உள்ளத்துடன் சர்ச்சுக்குப் போன ஒருவாலிபனிடம்பாதிரி, "கவலைப்படாதே, 'ஜீஸஸ் நெவர் ஃபெயில்ஸ்' " என்றார்.

''நல்லவேளை, அவர் ஸி. ஏ. எழுத நேர்ந்ததில்லை, அதான்!'' என்று பதில் கிடைத்தது, நொந்த உள்ளத்திடமிருந்து.

— ஏ. சங்கர், ஹோசூர்.

● அகில உலக சோம்பேறிகளின் போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வென்ற முதல் இரண்டு சோம்பேறிகளின் பெயர்கள் படிக்கப்பட்டு அவர்களை மேடைக்கு வந்து பரிசு பெறுமாறு அழைத்தனர். முதல் பரிசு பெற்றவர் பரிசு வாங்கக் கிளம்பிய போது, இரண்டாவதாகப் பரிசு பெற்றவர், தம்முடைய பரிசையும் வாங்கிக் கொண்டு வருமாறு முதல் பரிசு பெற்ற நபரை வேண்டிக் கொண்டார்.

உடனே ஒரு சிறு மாற்றத்துடன் முடிவு அறிவிக்கப்பட்டது. முதல் பரிசு பெற்றவர் இரண்டாவதாகவும், இரண்டாவது பரிசு பெற்றவர் முதல் பரிசுக்குரியவராகவும்!

— கே. ஆர். வரதராஜன், சென்னை — 41.



● மயிலாடுதுறை பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன். பழ வியாபாரி ஒருவர், ''ரூபாய்க்கு ஐந்து பழம்'' என்று கூவிக் கொண்டிருந்தார். அவரிடம் ஒருவர், ''கொஞ்சம் குறைச்சுப் போட்டுக் கப்பா'' என்றார். உடனே, ''சரி சார், ரூபாய்க்கு மூணு பழம் போட்டுக் குங்க!'' என்றாரே பார்க்கலாம்!

— பி. பிரகாஷ், தலைச்சங்காடு.

நீங்கள் கேட்டவை — தராசு

'ஜெ' அடிக்கடி தலைமறைவாகிவிடுகிறாரே..?



• டாக்டர்களுக்கு அவமான

• பி. ராஜு, குரோம்பேட்டை.

? ஆர். வி. சந்திரசேகர் இருவருமே ஒரே நாளில் சென்னை வந்தது குறித்து?

! தவறுதான். பிரதமர், ஜனாதிபதி இருவரில் ஒருவர் தலைநகரில் இருப்பதுதான் நல்லது. ஒருவேளை அசல் பிரதமர் தில்லியில் இருக்கும் தைரியத்தில் வந்து விட்டார்களோ என்னமோ!

• எஸ். வெங்கடேசன், கும்பகோணம்.

? 'எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஊழலைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கக் கூடாது' என்று பிரதமர் கூறுகிறாரே?

! எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஊழல் ஊடுருவி வேறு எதைப் பற்றியும் பேச அனுமதிக்க மாட்டேனென்கிறதே!



• ஒரே நாளில்...



• ...சென்னையில்!

• ஜி. இந்திரா, திருச்சி.

? 'நான், கர்நாடக முதல்வர் இருவருமே பிற்படுத்தப்பட்டவர்கள். அதனால் கர்நாடக முதல்வர் காவிரி நீர் தரச் சம்மதிக்க வேண்டும்' என்று தமிழக முதல்வர் கூறியிருப்பது பற்றி?

! 'நான், தமிழக முதல்வர் ஆகிய இருவருமே பிற்படுத்தப்பட்டவர்கள்; அதனால் தமிழக முதல்வர் காவிரி நதிநீர்ப் பங்கீடு விஷயத்தில் விட்டுக் கொடுத்துவிட வேண்டும்' என்று கர்நாடக முதல்வர் பதிலுக்குக் கூறலாம். தமிழக முதல்வர் உரிமைக்குக் குரல் கொடுக்கட்டும்.

• சிவ. சீனிவாசன், கும்பகோணம்.

? நிர்வாணக் காட்சிகள் திரைப்படங்களில் தொடர்ந்து வருவது எதைக் காட்டுகிறது?

! படம் சூடாக இருக்க வேண்டும் என்று படாதிபதியும் இயக்குனரும் ஆசைப்படுவதைத்தான்!

• ?. பாஸ். ஸ்ரீராம், சாத்தூர்.

? இரவில் தன்னந்தனியாக ஒரு பெண் சாலையில் பயமின்றி நடக்கும் காலம் வருமா?

! முதலில் அப்படி ஆண்கள் நடக்கக் கூடிய காலம் வரட்டும்!

• ஆர்.டி.சிவா சுந்தர், மயிலாடுதுறை.

? 'பத்திரிகைத் துறையைக் கட்டுப்படுத்த ஓர் அமைப்பு இல்லை. அதனால்தான் உண்மைகளோடு காழ்ப்புணர்ச்சிகளைக் கலந்து செய்திகள் திரித்துத் தரப்படுகின்றன' என்று கருணாநிதி பேசியிருக்கிறாரே?

! பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தவாவது பிரஸ் கவுன்சில், மற்றும் நீதிமன்றங்கள், சட்டமன்றங்கள் எல்லாம் உள்ளன. அரசியல்வாதிகளின் அண்டப்புளுகுகளைக் கட்டுப்படுத்த எந்த அமைப்பு இருக்கிறது?

• பா. வெங்கடேசன், போரூர்.

? 'தலாய் லாமா இருக்கும் போது விடுதலைப் புலிகள் இருக்கக் கூடாதா?' என்று திருநாவுக்கரசு கேட்டிருக்கிறாரே?

! தலாய் லாமா என்ன ஏ. கே. 47 உடனா அலைந்து கொண்டிருக்கிறார்? நமது அரசியல்வாதிகளின் அபத்தங்களுக்கு எல்லையே கிடையாது.

• ஆர். ஸ்ரீதரன், கும்பகோணம்.

? 'தி. மு. க. அரசு தானாக விலகாவிட்டால் நீக்கும்படி டில்லியைக் கோருவோம்' என்று ஜனதா தள (எஸ்) பிரமுகர் விஜயராகவன் கூறியுள்ளது பற்றி?

! 'காஷ்மீரில் தரைப்படை தோற்றால் கடற்படையை அனுப்புவோம்' என்று கூறிய பாதுகாப்பு அமைச்சரின் நினைவு வருகிறது! தாங்களும் இருப்பதைக் காண்பித்துக் கொள்வதற்காக இவர்கள் இப்படித்தான் ஏதாவது உளறிக் கொண்டிருப்பார்கள். மத்திய மைனாரிடி அரசு மிரட்டிக் கொண்டேயிருக்குமே தவிர, மெஜாரிடி அரசைப் பதவி நீக்கம் செய்யத் துணியாது. ஆனால் ஒன்று. பதவி நீக்கம் செய்ய ஒரு வலுவான காரணத்தை உருவாக்கித் தந்துவிடாமல் தி. மு. க. தலைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

• க. சங்கர், போத்தனூர்.

? சந்திரசேகர் திறமைசாலியா?

! ஆகா! அவர் ஆட்சியைப் பிடித்ததே அதை நிரூபிக்கவில்லையோ!

● கே. ராஜபாலு, சேலம்.

? **சமீபத்தில் உங்களை வியக்க வைத்த மனிதர் யார்?**

! கச்சேரி செய்யும் போது அதை விடியோ எடுத்தால் தனியாகப் பணம் தர வேண்டும் என்று வாதிட்டார் மகாராஜபுரம் சந்தானம். அவரது துணிவு வியக்க வைத்தாலும், தனி ஆவர்த்தனத்தின் இடையில் சபாச் செயலருடன் வாதிட்டிருக்க வேண்டாமே? அதற்கு முன்போ, பின்போ விவாதத்தை நடத்தியிருக்கலாமே என்றும் தோன்றியது.

● எஸ். அருண், காரைக்கால்.

? **சந்திரசேகர் பிரச்னைகளை அணுகும் முறை நம்பிக்கை அளிப்பதாக உள்ளதா?**

! ராஜீவ்தான் சொல்ல வேண்டும்!

● எஸ். எஸ். பூங்கதிர், திருவெண்ணெய் நல்லூர்.

? **சினிமா பார்த்துத் திருந்துகிறவர்கள் அதிகமா, கெட்டுப் போகிறவர்கள் அதிகமா?**

! இரண்டையும் விட வோட்டுப் போடுகிறவர்கள்தான் அதிகம்!

● ரகுவரன், தாம்பரம்.

? **சீசன் எப்படி?**

! கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் நிறுவனத்தினர், கலைஞர்களின் பட்டியல் போட்டு, யார் யாருக்கு எந்தத் தேதியில், எந்த சபையில் கச்சேரி என்று ஓர் அட்டவணை தயாரித்துள்ளனர். அதில் பார்த்தால், ஒரு சபை கூட விடாமல் அனைத்திலும் இடம் பெற்றிருப்பவர்கள் இரண்டு பேர். ஒன்று, மாண்டலின் சீனு! மற்றொன்று டி. வி. சங்கர நாராயணன்! சீசன் அப்படி இருக்கு!

● வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.*

? **ஜெயலலிதா அடிக்கடி தலைமறைவாகி விடுவது பற்றி?**

! கலைஞர் ஆட்சியில் இங்கே அவருக்கு வைத்தியம் பண்ண டாக்டர்கள் பயப்படுகிறார்களாம். டாக்டர்களுக்கு அச்சுறுத்தல்கள் வருகிறதாம். அதனால்தான் ஹைதராபாத், பெங்களூர் என்று தலைமறைவாகி விடுகிறாராம்! கற்பனை சிறகடித்துப் பறக்க அனுமதித்து இங்குள்ள டாக்டர்களை அவமதித்து விட்டார்.

* கச்சேரியில் விவாதம்!





● ஜமாலியா லைன், பாதூர்.

? **உங்களைக் கவர்ந்த நடிகர் யார்?**

! நேற்று, 'நான் தலைகளை எண்ண வசதியாக ஆளுனர் மாளிகையில் எம். எல். ஏக்களின் அணிவகுப்பு நடத்து' என்று கட்டளை இட்டுவிட்டு, இன்று, 'சரி சரி ஜனநாயக மரபுகளுக்கு உட்பட்டுச் சட்டமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானம் கோரினால் போதும்' என்று சொல்லும் புதிய பாண்டிச்சேரி ஆளுனர்.


● அனந்தராமன், சென்னை.

? **சாலமன் ரஷ்டி இப்படி பல்டி அடித்து விட்டாரே?**

! ஒரு கலைஞன் மேடை ஏறும் போது —



* ஈசன்...



* ...அப்படி இருக்கு!

பாட்டோ, நடனமோ — அந்தக் கணத்தில் செயல்படுகிறான். தவறு நேர்ந்தால் பொறுத்துக் கொள்ளலாம். ஒரு பேச்சாளன் மேடை ஏறும் போது உணர்ச்சி வசப்பட்டு ஏதாவது கூறிவிடலாம். அல்லது சரியான வார்த்தைப் பிரயோகம் இல்லாததால் அர்த்தம் மாறலாம். இதை அனுதாபத்துடன் அணுகலாம். ஆனால் ஓர் எழுத்தாளன் அப்படி அல்ல. அவன் நன்கு யோசித்து நிதானத்துடன் எழுதவும், அச்சேறுமுன் திருத்தவும் நிறைய அவகாசம் இருக்கிறது. எனவே, பின்விளைவுகளைச் சிந்தியாமல் எழுதிவிட்டுப் பிறகு, 'வாபஸ் பெறுகிறேன்'; 'மதமே மாறுகிறேன்' என்றெல்லாம் பின்வாங்குவது அழகல்ல. மனிதன் தன் கருத்தை மாற்றிக் கொள்ளலாம். அது அறிவு முதிர்ச்சியினால் நடக்க வேண்டும்; அச்சத்தினால் அல்ல. ரஷ்டி விவகாரம் எழுத்தாளர் உலகுக்குத் தலைகுனிவு.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

வே. செந்தில்குமார், ஆசிரியர், மோட்டூர், கோரணம்பட்டி (அஞ்சல்), — 637 102, சங்ககிரி வட்டம்.

* எழுத்தாளர்களுக்குத் தலைகுனிவு?

* இன்னிசைச் சிறப்பிதழ் என்றால் அதில் வரம்பு பாட்டு மட்டுமே இடம்பெறும் என்ற எண்ணற்ற வாசகர்களின் கருத்தைப் பொய்யாக்கி பரதம், நாதஸ்வரம், வயலின், தவில், மிருதங்கம், மோர்சிங் இப்படி எல்லா இசைக் கருவிகளுக்கும் இன்னிசையில் இடமுண்டு என்று சொல்லாமல் சொல்லி ஒரு முழுமையான சிறப்பிதழை அளித்து விட்டீர்கள். வாசகர்களுக்கு, ஒரு கல்லில் இருபது மாங்காய்கள்.

கும்பகோணம், டி. எஸ். சீதாராமன்.

* பொதுவாக வயதில் மூத்தவர்கள்தான் இளம் கலைஞர்களை விமர்சிப்பார்கள். விருது பெறும் மூத்த கலைஞர்களைப் பற்றி இளம் கலைஞர்கள் செய்திருந்த விமர்சனம் வித்தியாசமாகவும் கலையாகவும் இருந்தது.

அணைக்கட்டு. க. துளசி ராமன்.

வட்டமேஜை

ஒரு கல்லில் இருபது மாங்காய்கள்!

* அரவிந்தன் இயக்கும் தொலைக்காட்சித் தொடரின் சிறப்புக்களைக் கூறி ஆவலுடன் எதிர்பார்க்கச் செய்து விட்டீரே!

திருவெண்ணெய் நல்லூர், எஸ். எஸ். பூங்கதிர்.

* வளரும் இளம் கலைஞர்களின் கலந்துரையாடலில் வெளிவந்த கருத்துக்களைச் சிதைக்காமல் கட்டுரை போல, அதே சமயத்தில் அவை தனித்தனி நபர்கள் கூறிய கருத்துக்கள் என்பதும் புரியும்படி தொகுத்திருந்த விதம் பாராட்டும்படி இருந்தது.

பட்டுக்கோட்டை, ராம்குமரன்.

* தனக்குப் பிடித்தமான எந்தத் துறையிலும், ஓர் இளைஞன் முன்னேற வேண்டுமெனில், பல பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியதாகத்தான் உள்ளது. கலந்துரையாடலில் கலந்து கொண்ட "இசையுலக இளைஞர்கள்" மட்டும் இதற்கு விதிவிலக்காகி விட முடியுமா என்ன? இன்றைய பிரச்சனைகள் கண்டிப்பாக நாளைய பிரம்மாண்ட வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும்.

பாடகர் — கம் — ஸ்டார் எஸ். பி. பி. நடித்து இசையமைக்கும் 'சிகரம்' படத்தின் ஒரு காட்சியும், அந்தப் படத்தைப் பற்றிய கலையான செய்திகளும் இன்னிசைச் சிறப்பிதழின் "போனஸ்".

திருச்சி — 3, செ. ம. மாறன்.

* ம. வே. சிவகுமார் எழுதிய 'அலையவிசைகள்' சிறுகதை படித்தேன். ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் மனத்தில் பதியுமாறு ஆசிரியர் கதையை நடத்திச் சென்ற விதம் பாராட்டுக்குரியது.

வேலூர் — 9,ச. மணிவண்ணன்.

* "ஒரு கிராமம் தண்ணீரில் மூழ்குகிறது" சிறுகதையைப் படித்தேன். ஒரு முறை அல்ல, இருமுறை. கதையாய்த் தெரியவில்லை. கிராமங்களில் நடக்கும் உண்மைச் சம்பவங்கள் மாதிரியே கண்முன் நிழலாடியது.

தக்கோலம், அ. முல்தபா.

* க. இராசரத்தினத்தின், "ஒரு கிராமம் தண்ணீரில் மூழ்குகிறது" கதையில் கூறியுள்ள "தீப் பொறியை அணைக்கத் தவறியவர்கள், கொழுந்து விட்டு எரியும் தீ நாக்குகளை அணைக்க முயல்றார்கள்" — என்ற வாக்கியம் தற்போது நாட்டில் நடந்து வரும் மதக்கலவரங்களுக்குக் கூடப் பொருந்தும். கதை சபாஷ்...!

திருவெண்ணெய்நல்லூர், நந்தன் பாலா.

* அதெப்படிங்க உங்களுக்கு மட்டும் தலையங்கம், இவ்வளவு நீளமா எழுதியும் 'நறுக்'கென்றும் படிக்கும்படியாகவும் அமைகிறது!? கல்கி வந்தவுடன் நான் படிப்பது தலையங்கமும், 'தராசு' பதில்களும்தான். ரொம்ப பெருமைப்படறேன் உங்களை நினைத்து.

காருகுறிச்சி, ப. சிவ்வி.

* அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டையைப் போல நாட்டில் பரவலாகக் கலவரங்கள் நடைபெறுவதற்கான காரணம் என்ன என்ற உண்மையைச் சென்ற வாரத் தலையங்கம் தெள்ளத் தெளிவாக்கியது. தரமான கல்வியை வழங்குவதன் மூலமே மக்கள் மனத்தில் பக்குவத்தை வளர்க்க முடியும் என்ற கல்கியின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மையே!

அவன்புரம், இராஜ்யவர்த்தனன்.

* சகோதரப் பத்திரிகைகள் என்றாலும் உண்மை நிலவரத்திற்கு மாறாக அவை எழுதியதை 'விஷம் கலந்த விஷயம்' எனக் கலைஞர் வார்த்தைகளிலேயே 'தராசு' விமர்சித்திருப்பது 'கல்கி' பத்திரிகைத் தர்மத்தின்பால் கொண்டுள்ள பற்றுதலைக் காட்டுகிறது. தொடரட்டும் தங்கள் தூய பணி.

திருக்குவளை, வெற்றிப்பேரொளி.

* அதிகாரபூர்வமான வேறு நிகழ்ச்சியாக இருந்தால் ஆட்சேபிக்க இடமுண்டு..." என்று கலெக்டரும் நிர்வாக இயக்குனரும் குடமுழுக்கு விழாவில் பங்காரு அடிகளாரின் காலில் விழுந்தது தவறில்லை என்பதை, நயமாக... அழகாக... அற்புதமாக விளக்கி விட்டீர்கள், நீங்கள் கேட்டவை பகுதியில்.

சேலம் — 2, கே. ஜே. டி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


உங்கள் பால்காரார் இரவு 10 மணிக்கு பால் கொண்டு தருவாரா?



என் பால்காரர் தருவார்


உங்கள் மகன் இரவு வெகுநேரம் படிக்க விரும்புகிறான். அவனுக்கு காப்பி வேண்டும். பாட்டியோ இரவு சாப்பாட்டுக்குப் பதிலாக பால் வேண்டும் என்கிறார். அந்த நேரத்தில் எங்கு சென்று பால் வாங்குவீர்கள்? அமுல் மில்க் பவுடர் கைவசம் வீட்டில் வைத்திருங்கள். கவலையே இருக்காது. பால் தாமதமாக வராது. தீர்ந்து போகாது. திரிந்தும் போகாது.

அமுல் மில்க் பவுடர் கொண்டு தூய்மையான, ஆடை நிறைந்த பாலை நொடியில் தயாரித்து விடலாம். அப்படியே அருந்தலாம். தேனீர், காப்பி, தயிர், மோர், பாயசம், கஸ்டர்ட், கேக், ரஸகுல்லா... எது வேண்டுமோ தயாரிக்கலாம்.



அமுல் மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும் ஒரு பால்பண்ணை.


REGISTERED NO. M. 4392
நான் ஸின்த்தால் உபயோகிக்கிறேன். நீங்கள்?
Godrej
NEW
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
விநோதின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தன்னம்பிக்கை தருவது ஸின்த்தால்.
MADISON-G-001-TAM